சிவமயம்

# திருவாசகத்தில் சைவசித்தாந்தம்



திருவாவடுதுறை ஆதீன
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்
திருவிடைமருதூர்
1992 [முதலாண்டு]

சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமைய வெளியீடு: 6

உ

சிவமயம்

# திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

ஆசிரியர் :

'செந்நெறிச் செல்வர்', 'மெய்ஞ்ஞான வள்ளல்'

திரு. கு. வைத்தியநாதன்

இயக்குநர்,

திருவாவடுதுறை ஆதீன

சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

திருவிடைமருதூர்

1992 (முதலாண்டு)

உ

# மெய்கண்டசாத்திரம்

## (பதினான்கு)

*உந்தி களிறு உயர்போதம் சித்தியார்*
*பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தஅருள்*
*பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு*
*உண்மைநெறி சங்கற்பம் உற்று.*

---

பதிப்பகம் :

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை.

(ii)

உ

# குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகித்
துயிலாரும் பொழில்திருஆ வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

திருச்சிற்றம்பலம்

— அருள்திரு மாதவச் சிவஞான யோகிகள்



ஆதீனக் குருமுதல்வர்
அருள்திரு நமசிவாயமூர்த்திகள்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்துமூன்றுவது குரு மகாசந்நிதானம்
*சீர்வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்*

உ

சிவமயம்

# முன்னுரை

"திருவாசகம்" என்னும் செழுந்தமிழ் நூலினை அறியாத தமிழர் எவரும் இலர் எனலாம். பன்னிரு திருமுறைகளில் எட்டாவது இடத்தை வகிக்கும் திருவாசகம், இன்று பட்டி தொட்டிகளில் எல்லாம், "முற்றோதல் முறை"யில் பரவி வருகிறது. திருவாசகத்தில் உள்ள சொற்கள், எவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்திருப்பதும் இதற்கொரு காரணமாகும்.

திருவாசகத்தில் சொற்கள் எளிமையாக இருப்பினும், அவற்றிற்குப் பொருள் காண்பது அவ்வளவு எளிதன்று. திருவாசகச் சொற்களும் சொற்றொடர்களும், பொருள் பொதிந்த செய்திகள் பலவற்றைக் கொண்டுள்ளன. சைவ சித்தாந்த நூலறிவு இன்றி, அவற்றின் பொருள் ஆழத்தை எளிதில் அறிய முடியாது.

திருவாசகத்திற்குப் பலர் உரை எழுதியிருக்கிறார்கள்; சைவ சித்தாந்தம் அறியாதாரும் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் மணிவாசகப் பெருந்தகையின் அருமை பெருமை அறியாமையால், ஏதேதோ கூறியிருக்கிறார்கள். திருவாசகத்தில்,

*"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்"*

அத்தகைய போலி உரைகளைக் காணலாகாது.

"திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்" என்னும் இந் நூலில் மூன்று தலைப்புகள் உள்ளன. அவை வருமாறு:-

1. சைவ சித்தாந்த நோக்கில் திருவாசகம்.
2. சைவ சித்தாந்த நோக்கில் திருவாசகத் தலைப்புகள்.
3. சைவ சித்தாந்த நோக்கில் திருவாசகச் சொல்லாட்சியின் மாட்சிமை.

இந்நூலைக் கற்பவர்கள், திருவாசகத்தில் வரும் சொற்களுக்கு, எப்படிப் பொருள் கொள்ளவேண்டும் என்பதைத் தெளிவாக உணர்ந்தறிவார்கள். அவ்வறிவு அவர்களுக்கு, இம்மையில் இன்பத்தையும், அம்மையில் பேரின்பத்தையும் தரும் என்பதில் எள்ளத்தனை ஐயத்திற்கும் இடமில்லை.

இந்நூலினை மேற்பார்வையிட்டுத் தேவைக்கு ஏற்பத் திருத்தங்களை மேற்கொள்ளச் செய்து, செம்மைபெறச் செய்துதவிய எளியேனின் "வித்தியாகுரு" ஆகிய மலேசியா, சித்தாந்த வித்தகர் திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்களுக்கு, எளியேனின் நன்றி கலந்த வணக்கத்தைப் பெரிதும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*"கல்லாத புல்லறிவின் கடைப்பட்ட நாயேனை,*
*வல்லாளனாய் வந்து, வனப்பெய்தி இருக்கும் வண்ணம்,*
*பல்லோரும் காண எந்தன் பசு - பாசம் அறுத்தானை"* (1)

என்னும் மணிவாசகத்திற்கு ஏற்ப, அடியேனின் "ஞானத் தந்தை" ஆகிய திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்துமூன்றாவது பட்டத்தில் எழுந்தருளிச் சிவஞானச் செங்கோல் ஓச்சி வரும், திருவார் திரு குரு மகாசந்நிதானம், சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள், இச் சிறியேனையும் இச் சீரிய பணியில் பணித்தருளும் பெருங்கருணைத் திறத்தை எண்ணி எண்ணி, அவர்கள் பொற்பாத மலர்களை மனம் மொழி மெய்களால் போற்றி வழிபடுகிறேன்,

சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்களது அருளாசியுடன், மாணவர்கள் இந்நூலினைக் கற்றுப் பயன் பெறுமாறு வேண்டுகிறேன்

அடியேன்,

*திருவிடைமருதூர்,*
*19—10—1992,*

**கு. வைத்தியநாதன்.**

உ

சிவமயம்

# திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

## தோற்றுவாய்

சித்தாந்தசைவ சமயம், பன்னிரு திருமுறைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் திருவாசகம் எட்டாவது இடத்தை வகிக்கின்றது ‘ திருவாசகம் ’ என்பது, திருவுடைய சொற்களால் ஆகிய அருள் நூல் என்னும் பொருளைத் தரும்.

‘ திரு ’ என்பது செல்வச் செருக்கால் மகிழ்ச்சி அடைதலும், வறுமைத் துயரால் வருத்தம் உறுதலும் இன்றி, எப்போதும் ஒரே மனநிலையுடன் கூடிய உள்ளத்தின் நிறைவைக் குறிக்கும்.

‘ வாசகம் ’ என்பது அத்தகைய மனநிறைவுடையவரின் திருவாயிலிருந்து வெளிப்படும் ஆற்றல்மிக்க சொற்களால் அமையும் நூலைக் குறிக்கும்.

இத்திருவாசகம் ஓர் அருள்நூல்; இஃது ஓர் அநுபவநூல். இந்நூலில் உள்ள ஒவ்வொரு சொல்லும், பழுத்த மனத்து அடியவரின் பண்பட்ட உள்ளத்திலிருந்து, சிவபோதமுதிர்ச்சியால் வெளிப்பட்டது. இவ் அரும் பெறல் நூலினை அருளிச்செய்தவர், வாதவூரடிகள் எனும் மணிவாசகப் பெருந்தகை ஆவர். இப்பெருந்தகையின் வரலாற்றினைப் “ பன்னிரு திருமுறை வரலாறு ” என்னும் இம்மையத்தின் ஏழாவது வெளியீட்டில் காணலாம்.

## திருவாசகத்தின் சிறப்பு

சிவபெருமானின் திருவருள் உள் நின்று உணர்த்த, தன்செயல் அற்றுத் தான் அற்றபின், நாதன்தன் செயலான நிலையில் விளைந்த வாக்கு, திருவாசகம் ஆகும், இதனையே பசுகரணம் பதிகரணம் ஆதல் என்று சாத்திரங்கள் பேசும்.

கடையூழி வரும்போது, தானே தனித்து நிற்கும் நிலையில், தனிமையைக் கழிக்கும் பொருட்டு, சிவபெருமான் மானுடச்சட்டை

தாங்கி, கையேட்டு எழுத்காளர் ஆகி, இத்திருவாசகத்திற்கு ஒருபிரதி எழுதிவைத்துக் கொண்டார்.

பலகாலும் பயின்று பயின்று, அழுந்தி யறிந்து, ஆனந்தப் பரவசத்தில் தோய்ந்த அநுபவத்தால், கற்றாரையும் கேட்பாரையும் பிணிக்கும் பெருமை பெற்றுச் சொல்நடையும் பொருள்நடையும் அப்படி அப்படியே பின்னிப் பிணைந்து, பல ஆயிரம் உள்ளங்களைக் கரைத்துக் கண்ணீர் பெருக்கும் கனிவை உடையது, இத்திருவாசகம்.

" திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது பழமொழி.

**சிறப்புப் பாயிரம் :**

திருவாசகப் படனம் தொடங்குவதற்கு முன்பு, அனைவரும் பாடும் ஒரு வெண்பா உள்ளது. அது வருமாறு.

*" தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி*
*அல்லல்அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை*
*மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்*
*திருவா சகம், என்னும் தேன் "*

இந்தச் சிறப்புப் பாயிரத்தைப் பாடியருளிய பெருமகனார் யாவர் என்பது அறியக் கூடவில்லை

இவ்வெண்பா, திருவாசகத்தின் அரும்பெரும் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றது. இதன் பொருள் வருமாறு.

[ கொண்டு கூட்டு ] எல்லை மருவா நெறி அளிக்கும் வாதவூர் எம்கோன், திருவாசகம் என்னும் தேன், தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி, அல்லல் அறுத்து, ஆனந்தம் ஆக்கியது, ( ஏகாரம் – தேற்றேகாரம் ).

' எல்லை மருவா நெறி ' என்பது, நுகரும் தோறும் நுகருந் தோறும், புதிது புதிதாய் விளைகின்ற வீட்டு இன்ப நெறியை உணர்த்துகின்றது. பேரின்ப உணர்வு, ஓர் எல்லைக்குள் அமையாதது.

' அளிக்கும் எம்கோன் ' என்பது, இத்திருவாசக நூலைப் பயிலும் அனைவருக்கும் இப்பேரின்ப உணர்வை ஊட்டும் எங்கள் தலைவர் ஆகிய மணிவாசகப் பெருந்தகையைக் குறிக்கும்.

'திருவாசகம் என்னும் தேன்' என்பது, அருள் விளங்கும் சொற்களால் அமைந்த இந்தத் திருவாசகம், தேனைப் போன்று, பாடும் நாவிற்கு இனிய சுவையையும் பிறவிப் பிணிக்கு மருந்தாகவும் உள்ளது என்பதைக் குறிக்கின்றது. தேன், நாவிற்கு இனிமையாகவும் உடல் நோய்க்கு மருந்தாகவும் உள்ளதை யாவரும் அறிவர்.

'தொல்லை இரும் பிறவி' என்பது, அநாதியே தொடங்கி, கடத்தற்கு அரியதாய் இருக்கும் எண்ணற்ற பிறவிகளைக் குறிக்கும்.

'சூழும் தளை நீக்கி' என்பது, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலக் கட்டுகளும் உயிர்களைவிட்டுப் போகுமாறு செய்வதைக் குறிக்கும்.

''அல்லல் அறுத்து'' என்பது, அறியாமையைத் தரும் ஆணவமல மறைப்பை முற்றிலும் நீக்குவதைக் குறிக்கும்.

'ஆனந்தம் ஆக்கியது' என்பது, இத்திருவாசக அரும் பெறல் நூலினை, அதன் பொருள் உணர்ந்து, ஓதுபவர்களுக்குப் பேரின்பத்தை வழங்குவதைக் குறிக்கும்.

பிறவித் தளை நீக்குதலும், அல்லல் அறுத்தலும், ஆனந்தம் ஆக்குதலும் ஒன்றுக்கொன்று முறையே ஏதுவும் பயன்களுமாய் நிற்கின்றன.

### திருவாசகத்திற்கு உரை :

திருவாசகத்திற்கு உரை எழுதுவது என்பது அத்துணை எளிய செயல் அன்று.

திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான், மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் தலைமாணாக்கர் ஆகிய வித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்களைத் தாசிரபுரம் பட்டாபிராமபிள்ளை அவர்கள், திருவாசகத்திற்கு உரை எழுதித்தர வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே, செட்டியார் அவர்கள், பட்டாபிராமபிள்ளை அவர்களிடம்

''இனியும் வற்புறுத்துவீர்களாயின், இதோ இந்தக் காவிரியில் விழுந்து உயிரை விட்டுவிடுவேன்; திருவாசகத்திற்கு உரை எழுதுவதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது?'' என்று

கூறினர்களாம். இச்செய்தி, திருவாவடுதுறை ஆதீன வெளியீடு எண் 193 (1964)-ல் உள்ளது.

திருவாசகத்தில் உள்ள சொற்களுக்குப் பதவுரை கூறிவிடலாம் சொற்பொருள் கூறுவது மிக எளிது. ஆனால், அச்சொல்லில் உள்ள பொருளை உணர்ந்து உரை எழுதவல்லார் எவரும் இலர். அதனாலேயே, 'சொல்லிய பாட்டின் பொருள் அறிந்து சொல்லுவார்' என்று கூறாமல்,

*"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்"*

என்று அருளிச் செய்வாராயினர் மணிவாசகப் பெருந்தகை.

அறிதல் வேறு; உணர்தல் வேறு. 'அறிவு' என்பது, பொருள்களை ( Things )த் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்வதை மட்டுமே குறிக்கும். 'உணர்வு' என்பது, அவ்வாறு தெரிந்து கொண்ட அளவில் நில்லாமல், அந்த அறிவு, தெரிந்து கொண்ட பொருளில் அழுந்தி அதன் வண்ணமாக ஆகி விடுதலையும் குறிக்கும். ஆக, 'அறிவு' என்பது, பொருளறிவையும் ( Know of things ), 'உணர்வு' என்பது, அனுபவத்தையும் ( Personal experience ) குறிப்பனவாகும்.

பொருளறிவு முழுமையான அறிவன்று; அவ்வறிவு பொருளின் இயல்பு அனைத்தையும் விளங்கச் செய்யாது. பொதுவாக அறியும் பொருளில் அழுந்தி அறியும்போது, அப்பொருளின் இயல்பு முற்றும் விளங்குவதோடு, அப்பொருளின் தன்மையே தன் தன்மையாகும் இயல்பினையும் உயிர் பெறுகிறது. எனவே, அனுபவ அறிவே நிறைவுடை அறிவாகும்.

இதனாலேயே, உண்மை ஞானத்தை உயிர்க்கு உணர்த்த விரும்பிய திருவள்ளுவர், அந்த அதிகாரத் தலைப்பிற்கு, "மெய்யறிதல்" என்று பெயர் கூறாமல், "மெய்யுணர்தல்" என்று பெயர் சூட்டியருளினர்.

திருவாசகப் பாடல்கள், அவரவர்களுடைய தவத்திற்கும் அருளனுபவத்திற்கும் ஏற்பப் பொருளை உணர்த்தும். சிவனருளைச் சிந்தித்துத் திருவாசகத்தைக் கற்பவர்களுக்கே, அதன் உண்மைப் பொருளை இறைவன் உணர்த்தியருளுவான். எனவேதான், திருவாசகத்திற்கு உரை எழுதுவதற்குப் பெருமபாலோர் தயங்குகின்றனர்.

ஆயினும், இறையருளையே நினைந்துருகும் பெரியவர்கள் சிலர், திருவாசகத்திற்கு உரை எழுது முற்பட்டனர். அஃதும் அவன் திருக்குறிப்பே எனக் கருதி எழுதினர். அவர்கள் எழுதிய உரைகளைத் தழுவியே, இந்நூல் எழுதப்படலாயிற்று.

இந்நூல் எழுதுவதற்கு உதவிய பெரியவர்களின் பெயரும் அவர்கள் எழுதிய நூல்களும் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | சிந்துபூந்துறை மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் | திருவாசக அருள்முறைத் திரட்டு – 1943 |
| 2. | பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் | திருவாசகம் – திருச்சதகம் – 1947 |
| 3. | மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் | திருவாசகம் (திருவாவடுதுறை ஆதீன வெளியீடு) – 1964 |
| 4. | திரு. கீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் | திருவாசகம் (அருஞ்சொற்குறிப்புடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) – 1964 |
| 5. | மகாவித்துவான் திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் | திருவாசகம் (குறிப்புரையுடன்–தருமை ஆதீன வெளியீடு) – 1966 |
| 6. | மறைத்திரு. மறைமலையடிகள் | திருவாசக விரிவுரை (நான்கு அகவல்கள்) கழக வெளியீடு – 1968 |
| 7. | வித்துவான். க. வெள்ளை வாரணர் அவர்கள் | பன்னிரு திருமுறைவரலாறு – அண்ணாமலைப் பல்கலைக்கழகம் – 1972 |
| 8. | சித்தாந்த வித்தகர் திரு முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்கள் | திருவாசகச்சுவை–அண்ணாமலை பல்கலைக் கழகம் – 1988 |
| 9. | சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை. | திருவாசகம் (ஆராய்ச்சி அகராதிகளுடன்) – 1992 |

திருவாசகத்தில் சைவசித்தாந்தம் என்னும் தலைப்பினை உடைய இந்நூலில் இப்பெரியவர்களின் உரைவளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சைவசித்தாந்த நுட்பம் செறிந்த கருத்துக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றுள், சித்தாந்த வித்தகர் திரு. முரு. பழ. இரத்தினஞ்செட்டியார் அவர்கள் எழுதிய " திருவாசகச் சுவை"யும். சிந்துபூந்துறை மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் எழுதிய " திருவாசக அருள் முறைத் திரட்டு " என்னும் நூலும் இவ்வகை யில் எளியேனுக்குப் பெரிதும் உதவியாய் இருந்தன என்று கூறினால், அது மிகையாகாது.

## திருமுறைகளில் சைவ சித்தாந்தம்

சைவ சமயத்தில் பல உட்பிரிவுகள் உள்ளன. அவற்றை அகச் சமயங்கள் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அவை அனைத்தும் சிவாகமங்களையே பிரமாணமாகக் கொண்டுள்ளன. ஆயினும், அவை சிவாகமச் செய்திகளில் காணப்படும் ஒரு சில வேறுபாடுகளுக்குத் தெளிவான பொருளமைதி கொள்ளவில்லை, எனவே, சித்தாந்த சைவம் இவற்றிற்கு வேறாகத் தனித்து விளங்குகின்றது.

சித்தாந்த சைவமும், சிவாகமச் செய்திகளையே பிரமாணமாகக் கொள்கின்றது, என்றாலும், சிவாகமச் செய்திகளில் உள்ள ஒரு சில வேறுபாடுகளுக்குப் பொருளமைதி காணும் வகையில், திருமுறை வாக்குகளின் அடிப்படையில் சைவ சித்தாந்தக் கொள்கைகளை நிறுவுகின்றது.

இவ்வுண்மையைச், சிவஞானபாடியம் என்னும் சிவஞானபோதப் பேருரையில், மாதவச் சிவஞான சுவாமிகள், சிவஞானபோதச் சூத்திரப் பொருளுக்கு விளக்கம் கூறும்போது, திருமுறைகளை மேற்கோள் காட்டி " **அனுபவமுடைய தேசிகர் திருவாக்கான் உணர்க** " என்று அவ்வப் பகுதிகளில் குறிப்பிடுவதைக் கூர்ந்து நோக்கினால் தெளிவாக அறியலாம்.

இறைவன் உள் நின்று உணர்த்தத் திருமுறை ஆசிரியர்கள், சிவாகமச் செய்திகளைச் செப்பம் செய்து திருமுறைகளில் பாடிப் பரவியுள்ளனர். எனவே, சைவ சித்தாந்த ஆசிரியர்கள், திருமுறை வாக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சைவசித்தாந்தக் கொள்கை களைத் தெளிவாக உருவாக்கியுள்ளார்கள்.

சைவ சித்தாந்தப் பொருள் விளக்கத்தைச் சித்தாந்த ஆசிரியர்கள் சிவாகமங்களிலிருந்து கொண்டுள்ளனர்; ஆயினும், சைவசித்தாந்தக் கொள்கை விளக்கத்தை அவர்கள் திருமுறைகளிலிருந்தேபெற்றுள்ளனர்

'சித்தாந்தப் பொருள் விளக்கம்' என்பது, முப்பொருள் உண்மை. முப்பொருள் இயல்பு, முப்பத்தாறு தத்துவங்கள், ஐந்துகலைகள் ஆறு அத்துவாக்கள் முதலானவற்றைக் குறிக்கும். 'சித்தாந்தக் கொள்கைவிளக்கம்' என்பது, இறைவனின் சொரூபநிலை, தடத்தநிலை முத்தியில் உள்ள ஆன்மாவின் நிலை முதலானவற்றைக் குறிக்கும்.

எனவேதான், திருமுறைக் கருத்துக்களுக்கு விளக்கம் காணும் போது, சைவசித்தாந்தக் கண் கொண்டு காண வேண்டும் என்று கூறுகிறோம். சைவ சித்தாந்தக் கொள்கைகளுக்கு முரணாகத் திருமுறைகளுக்குப் பொருள் கூறினால், அப்பொருள் பொருந்தாது என்பது மட்டுமன்றி, அது சிவ விரோதமானதும் ஆகும்.

இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டே. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் ஜி. யு. போப்பையர் அவர்கள், அந்நூலின் முகவுரையில்,

"The Caiva Siddhanta System. is the most elaborate, influencial and undoubtedly the most intrinsically valuable of all religions of India. It is peculiarly the South Indian and Tamil religion; and must be Studied by every one who hopes to understand and influence the great South Indian people. The Vaishnava sect has also many influential followers in the Tamil lands but these are Chiefly inmigrants from the North"

என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வுரையின் தமிழாக்கம் வருமாறு :

"இந்தியாவில் உள்ள எல்லா மதங்களிலும் மிகுந்த செல்வாக்கு உடையது சித்தாந்த சைவமே ஆகும். அஃது உண்மையிலேயே, உள்ளார்ந்த பெரிதும் மதிக்கத்தக்க விரிவான கொள்கைகளை உடையது. இச்சமயம் தென்னிந்தியர்க்கு உரியது; சிறப்பாகத் தமிழர்க்கே உரியது. பெருமைக்குரிய தென்னிந்திய மக்களைப்பற்றிப் புரிந்து கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் சைவ சித்தாந்தம் கற்க வேண்டுவது இன்றியமையாததாகும். தமிழ் நாட்டில் வைணவத்தைப்

பின்பற்றுபவர்களும் இருக்கிறார்கள்; ஆயினும் அவர்களுள் பெரும்பாலோர், வடநாட்டிலிருந்து வந்து தமிழ் நாட்டில் குடியேறியவர்களே ஆவர் "

டாக்டர் போப்பையர் அவர்களது கருத்திலிருந்து, சைவ சித்தாந்தம் தமிழர்க்கே உரியது என்பதும், தமிழ் நாட்டில் உள்ள சைவ சமயத்தினைத் தெளிவதற்குச் சைவ சித்தாந்தக் கல்வி இன்றியமையாதது என்பதும் இனிதே பெறப்படுகின்றன.

இந்த வகையில், சைவ சித்தாந்த நோக்கில் திருமுறைகளுக்குப் பொருள் காணும் முயற்சியில், முதற்கண் "திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்" என்னும் தலைப்போடு கூடிய நூலினை இம்மையம் வெளியிடுகிறது.

இந்நூலில், கீழ்க்காணும் மூன்று தலைப்புக்களில் செய்திகள் கூறப்படுகின்றன.

1. சைவ சித்தாந்த நோக்கில் திருவாசகம்
2. சைவ சித்தாந்த நோக்கில் திருவாசகத்தலைப்புகள்.
3. சைவசித்தாந்த நோக்கில் திருவாசகச் சொல்லாட்சியின் மாட்சிமை.

## 1. சைவ சித்தாந்த நோக்கில் திருவாசகம்

**தோற்றுவாய் :**

பன்னிரு திருமுறைகளுள். மூவர் தேவாரங்கள் அடங்கிய, முதல் ஏழு திருமுறைகளில் காணப் பெறாத, பல நுண்பொருள்கள் திருவாசகத்தில் காணக்கிடைக்கின்றன. சைவ சித்தாந்தக் கொள்கைகளுக்குத் தெளிவான விளக்கமும் விரிவான செய்திகளும், திருவாசகத்தில் உள்ள அளவு பிறநூல்களில் இல்லை என்றே கூறலாம்.

இந்தத் தலைப்பின்கீழ், இறை இயல்பு, உயிர் இயல்பு, தளை இயல்பு, வழிபாட்டுமுறை, முத்தி இயல்பு என்பனவற்றில் உள்ள திருவாசகச் செய்திகளை ஓரளவு காண்போம்.

**இறை இயல்பு :**

அயன், மால், அரன் என்னும் மூவரும் மும்மூர்த்திகள் எனப்படுவர். பெரும்பாலான புராணங்கள், மும்மூர்த்திகளில்

ஒருவர் ஆகிய உருத்திரனையே (அரன்), சிவபெருமான் என்று கூறுகின்றன. சைவ சித்தாந்தம், உருத்திரன் வேறு; சிவன் வேறு" என்று கூறுகின்றது. உருத்திரன் – ஆன்மா ; சிவன் – கடவுள். சிவனுக்கு உருத்திரன் என்னும் பெயர், சில இடங்களில்வரும் ; அப்போது அப்பெயர், " மகாருத்திரன் " ஆகிய சிவபெருமானையே குறிக்கும். மும்மூர்த்திகளுள் ஒருவராக வரும் உருத்திரனைக் " குணிருத்திரன் " எனச் சைவசித்தாந்தம் பேசுகின்றது.

மகாருத்திரன்–கடவுள் ; குணிருத்திரன் –ஆன்மா. இவ்வுண்மை யைத் திருவாசகத்தில்,

*" மூவரும் முப்பத்து மூவரும், மற்றொழிந்த*
*தேவரும் காணாச் சிவபெருமான் "* **(625)**

என்று மணிவாசகப் பெருந்தகை அருளிச்செய்துள்ளார்கள்.

இந்தப்பாட்டில் வரும் "மூவர்" என்னும் சொல், பிரம்மா, விட்டுணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளைக் குறிக்கும். " முப்பத்து மூவர் " என்பது, உருத்திரர் பதினொருவர், ஆதித்தர் பன்னிருவர், மருத்துவர் இருவர், வசுக்கள் எண்மர் ஆகிய முப்பத்து மூன்று தேவர்களைக் குறிக்கும். " மற்றொழிந்த தேவர் " என்பது, இந்திரன், வருணன், அக்கினி முதலியவர்களைக் குறிக்கும்.

இவர்களுள், எவராலும் எளிதில் அறியப்பட மாட்டாதவன் நம் சிவபெருமான். எனவே, சிவபெருமான் மூவர்க்கும் மேலான ஒரு பெருநிலையில் வைத்துப் பேசப்படுகிறான் என்பது பெறப்படும்.

இவ்வுண்மையை, நமக்கு அறிவுறுத்தும் பொருட்டுச் சிவஞான மாபாடியம் முதற் சூத்திரத்தின் தொடக்கத்திலேயே,

**" இவ்வேறுபாடு உணராது, மகாருத்திரன் ஆகிய பரமசிவனைக் குணிருத்திரனாக வைத்து எண்ணுவோரை நோக்கி, வாதவூரடிகள் இரங்கிக் கூறிய திருவாக்கினால் அறிக "**

என்று சிவஞான சுவாமிகள், திருச்சதகம் 4–ஆவது பாடலை எடுத்து மேற்கோள் காட்டி அருளியிருப்பது, இங்கு ஆழ்ந்து சிந்திப்பதற்குரியது. அத்திருவாசகப்பாடல் வருமாறு .

*'' சாவமுன் ஞள்தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சம் அஞ்சி*
*ஆவ, எந் தாய், என்று அவிதா இடு, நம் மவர் அவரே*
*மூவர்என்றே, எம்பிரானேடும் எண்ணி, விண்ஆண்டு, மண்மேல்*
*தேவர்என்றே, இறுமாந்து, என்ன பாவம் திரிதவரே '' 4*

இப்பாட்டுக்குப் பொருள் வருமாறு ;

" முன் ஒரு காலத்தில், தக்கனல் செய்யப்பட்ட யாகத்தில் அவியாக வந்த ஆட்டின் ஊனைத்தின்று, வீரபத்திரக் கடவுள் தக்கனை ஒறுக்க வந்தபோது அஞ்சியும், பாற்கடலை அசுரரும் தேவரும் கடைந்தபோது, அதனின்றும் எழுந்த நஞ்சினைக் கண்டு அஞ்சியும், ' ஐயோ, எங்கள் அம்மையப்பராய் இருக்கும் சிவபெருமானே, எங்களைக் காப்பாற்று' என்று முறையீடு செய்த சகலர்வகை ஆன்மவர்க்கத்தில் ஒருவகையினர் ஆகிய நம் இனத்தவர்கள் எனப் படும் நான்முகனும் மாலுமாயுள்ள இவர்களா,

முழுமுதற் பொருளாகிய, எங்கள் தலைவனாகிய சிவபெருமானேடு தங்கள் இருவரையும் சேர்த்து மும்மூர்த்திகள் என்று சணக்கிட்டு, தத்தமக்கு உரிய சத்திய உலகத்தையும் வைகுந்த உலகத்தையும் முறையே ஆளுகை செய்தலும் அன்றி, இந்நில உலகத்திலும், சில மதத்தவர்களால் கடவுளர் என்று வணங்கப்படுவதனால் தருக்கித் திரிகின்றார்கள்? இவர்கள் என்ன கொடிய பாவம் செய்தார்களோ? "
(அவி – தேவர்உணவு).

இந்தத் திருவாசகப் பாடலிலிருந்து, மும்மூர்த்திகளினின்றும், சிவபெருமான் வேறானவன் என்பதும், அவன் ஒருவனே கடவுள், மற்றவர்கள் அனைவரும் ஆன்மாக்களே என்பதும் தெளிவாகப் புலனாகின்றன.

அயன், மால், உருத்திரன் என்னும் மூவரும், முப்பத்தாறு தத்துவங்களுள் 24–ஆவது தத்துவம் ஆகிய குணதத்துவத்தில் வசிக்கின்ற தேவர்கள் ஆவர். அஃதாவது இவர்கள் பிரகிருதிமாயா புவனவாசிகள். பிறப்பு-இறப்புக்கு உட்படுபவர்கள். இம்மூவருள் இருவராய் உள்ள அயனும் மாலுமே அடி – முடி தேடியவர்கள். மூவருள் ஒருவரே குணிருத்திரர்.

குணிருத்திரர் வேறு; சீகண்டருத்திரர் வேறு. குணிருத்திரர், குண தத்துவத்தில் அயன் மாலோடு கூட வைகுவர். சீகண்டருத்திரர், இம் மூவருக்கும் தலைவர் ஆவார்; இவர் பிரளயாகலருள் ஒருவர்; அசுத்த

மாயா புவனத்தில் வசிப்பவர், அயன், மால், குணிருத்திரர் ஆகிய மூவரையும், இவர் நியமித்து, பிரகிருதிமாயா புவனத்தில், படைத்தல், காத்தல், அழித்தல், ஆகிய முத்தொழில்களைச் செய்யுமாறு அவர்களை இயக்குகிறார்.

இந்த பிரம விட்ணுக்கள் வேறு; சுத்தமாயா புவனத்தில் இருக்கும் பிரம விட்ணுக்கள் வேறு. சுத்தமாயா புவனத்தில், சிவ பெருமானே, படைத்தல் தொழிலைச் செய்யும்போது பிரம்மாவாகவும் காத்தல் தொழிலாற்றும்போது விட்ணுவாகவும் நின்று செய்கிறான்.

இவ்வுண்மையை,

*'' தேவரில் ஒருவன் என்பர், திருவுருச் சிவனைத்; தேவர்*
*மூவராய் நின்றது ஓரார்; முதல்உரு பாதி மாதர்*
*ஆவதும் உணரார்; ஆதி அரிஅயற்கு அறிய ஒண்ணு*
*மேவரும் நிலையும் ஓரார்; அவன்உரு விளைவும் ஓரார் '' 69*

என்று சிவஞான சித்தியார் முழக்குகின்றது.

அடி முடி தேடிய அயனும் மாலும் பிரகிருதி மாயா புவனத்தில் இருப்பவர்கள் என்பதையும், அவர்களும் நம்மைப் போன்ற சகலவர்க்கத்து ஆன்மாக்கள் என்பதையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வுண்மையை அறியாத பொது நோக்குடையவர்கள் எனக் கூறிக்கொள்ளும் சில பல மதவாதிகள், அடிமுடிதேடிய அயனையும் மாலையும், சிவபெருமானோடு வைத்து எண்ணி மயங்குவதோடு தத்துவம் அறியாத பாமர மக்களை மயக்கவும் செய்கிறார்கள்.

**“ கடவுள் ” என்னும் சொல்லாட்சி :**

‘ கடவுள்’ என்னும் சொல் ‘ கட ’ என்ற பகுதியையும் ‘ உள் ’ என்ற விகுதியையும் உடையது, ஒவ்வொரு பொருளுக்கும் சிறப்பு இயல்பு, பொது இயல்பு என்று இரு இயல்புகள் உண்டு.

எல்லாப் பொருள்களையும் கடந்து நிற்பது கடவுளின் சிறப்பு இயல்பு; ஒவ்வொரு பொருளோடும் கலந்து அந்தந்தப் பொருளுக்கு அந்தந்தப் பொருளாக இருப்பது கடவுளின் பொதுஇயல்பு இவ்வாறு கலந்து, அது அதுவாய் நிற்கும் தன்மை என்றும் ஒரே தன்மைத்தாய் உள்ள கடவுளாலேயே இயலும்.

ஓர் உவமை வாயிலாக இவ்வுண்மையை அறியலாம். கதிரவன் உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் "கடந்து" நிற்கிறான்; அவனது கதிர்கள் உலகில் உள்ள ஒவ்வொரு பொருளிலும் "கலந்து" நிற்கின்றன. கதிரவனையும் கதிர்களையும்போல், கடவுள் சிவ – சத்தியாக, அம்மையப்பராக இருக்கிறார், இதுவே, சைவ சித்தாந்தம் கொள்ளும் இறை இயல்பு ஆகும்.

'கடவுள்' என்னும் சொல்லாட்சி இன்று, சித்தாந்த சைவர்களல்லாத பிற மதத்தவர்களாலும் கையாளப்படுகிறது. ஆயினும், அச்சொல், சித்தாந்த சைவத்திற்கே உரிய தனியொரு சொல் ஆகும்.

திருவாசகத்தில் 'கடவுள்' என்னும் சொல்லாட்சி எட்டு இடங்களில் காணப்படுகிறது. அவ்விடங்கள் வருமாறு.

1. காக்கும் கடவுள் — (3-14)
2. கைதரவல்ல கடவுள் — (4-86)
3. கருத்துடைக் கடவுள் — (3-16)
4. கரும்பணக் கச்சைக் கடவுள் — (3-96)
5. கழுநீர் மாலைக் கடவுள் — (4-217)
6. இருசுடர்க் கடவுளானே — (67)
7. கடவுளே போற்றி — (68)
8. எனை ஆண்ட கடவுளே — (535) அ (537)

இவற்றுள் பெரும்பாலான இடங்களில், கடவுள் பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறியப்படாத அளவுக்கு, எல்லாவற்றையும்கடந்தவர் என்னும் பொருளில், இச்சொல்லாட்சி கையாளப்பட்டுள்ளது.

**கடவுளின் எண் குண உண்மை :**

கடவுளை, "நிர்குணன்" "குணாதீதன்" என்றெல்லாம் உபநிடதங்கள் கூறுகின்றன, 'நிர்குணன்' என்பது, யாதொரு குணமும் இல்லாதவன் என்பதைக் குறிக்கும், 'குணாதீதன்' என்பது. 'குணங்களை எல்லாம் கடந்தவன்' என்பதைக் குறிக்கும்.

குணம் இன்றிக் குணி இல்லை. குணத்தை உடையது குணி. கடவுள், குணமே இல்லாதவர் என்று கூறினால், குணம் இல்லாத பொருள் இல்லை என்றாகிக் 'கடவுளே இல்லை' என்று எண்ணும்படியாகிவிடும். எனவே, சைவ சித்தாந்தம் கடவுளை எண்குணம் உடையவர் என்கிறது.

'நிர்குணன்' என்று உபநிடதங்களில் வரும் சொற்கு, உயிர்க்குணங்கள் ஆகிய சத்துவம், இராசதம், தாமசம் என்னும் முக்குணங்கள் கடவுளுக்கு இல்லை என்றே பொருள்; அவ்வாறே, 'குணாதீதன்' என்ற சொற்கு, உயிர்க் குணங்கள் ஆகிய முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவன் என்றே பொருள். உபநிடதங்களில் வரும் சொற்களுக்கும் சைவசித்தாந்த அடிப்படையில் பொருள் கொள்வதே பொருத்தமுடையதாகும்.

இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும் பொருட்டே திருவாசகத்தில்

*'' குணங்களும் குறிகளும் இலாக் குணக்கடல்'' 574*

என்று மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்தார்கள்.

'குணங்கள் இலா' என்பது, உயிர்க்குணங்கள் ஆகிய முக்குணங்கள் இல்லாத பொருள் என்பதைக் குறிக்கும்.

'குறிகள் இலா' என்பது, அடையாளம் காட்டக் கூடிய அளவுக்கு 'இன்ன உருவம்' உடையவன் என்று கூற முடியாத பொருள் என்பதைக் குறிக்கும். இஃது இறைவனின் சொரூப இலக்கணம் ஆகிய சிறப்பு இயல்பு பற்றிப் பேசுகிறது.

'குணக் கடல்' என்பது, எண்குணங்களை உடைய வியாபகப் பொருள் என்பதைக் குறிக்கும். சிவஞானமாபாடியம் ஏழாம் சூத்திரம் மூன்றும் அதிகரணத்தில் '' தண்கடல் '' என்னும் தொடருக்குச் சிவஞான சுவாமிகள், '' கடல் என்றது நீர்க்கு இடம் கொடுத்து நிற்கும் ஆகாயம். தண்கடல் நீர் உப்புப் போல் என்றதனால் முப்பொருள்களும் வியாபக வியாப்பியங்களாக நிற்குமாறும் பெறப்பட்டது '' என்றருளிச் செய்துள்ளார்கள். எனவே 'கடல்' என்ற சொல், '' முழு நிறைவுடைமை '' யைக் குறிக்கும் என்பது பெறப்பட்டது. திருவாசகத்தின் பிறிதோர் இடத்தில்,

*'' குறைவிலா நிறைவே கோதிலா அமுதே''392*

என்று மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்திருப்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது.

## பிறப்பு இறப்பு அற்றவனே இறைவன் :

உயிர்கள் எண்ணற்ற பிறப்பு இறப்புக்களை உடையன. இறைவன் பிறப்புஇறப்பு அற்றவன். சிவபெருமான் ஓரிடத்துப் 'பிறந்தான் இறந்தான்' என்பது கேட்கப்படாத ஒன்று; ஆதலால், பிறப்பு இல்லாதானுக்குத் தந்தை தாய் என்னும் முறை உரிமை உடையார் இல்லை என்பது வெளிப்படை.

தேவர், மக்கள் முதலிய எல்லோருக்கும் தாயும் தந்தையும் நன்னெறிப்படுத்தும் தலைவனும் ஆகிய முத்திறத் தொடர்பு உடையவர்கள், உடல்கள் எடுக்கும் பிறவிகள் தோறும் வேறு வேறு ஆவர். ஆனால், உயிரைப்பற்றிய தொடர்பை நினைக்கும் போது இம் முத்தொடர்பும் உடைய உண்மைத் தாயும் தந்தையும் தலைவனும் இறைவன் ஒருவனே ஆவன்.

இறைவன் பிறப்பு - இறப்பு அற்றவன் ஆகலின், அவனுக்கு அத்தகைய தொடர்பு கிடையாது. இவ்வரிய உண்மையைத் தெளிவுற உணர்த்தும் பொருட்டுத் திருவாசகத்தில்,

*'' எந்தை யாய், எம்பிரான் மற்றும் யாவர்க்கும்*
*தந்தை தாய், தம்பிரான், தனக்கு அஃதிலான் ''*

*(திருச்சதகம் - 47)*

என்று பெருந்தகை அருளிச் செய்தார்கள்.

இவ்வுண்மையையே,

*'' மற்றத் தெய்வங்கள் வேதனைப்படும் :*
*இறக்கும் ; பிறக்கும் ; மேல் வினையும்*
*செய்யும் ; ஆதலால் இவை இலாதான் ''* *(115)*

என்று சிவஞான சித்தியார் முழக்குகின்றது.

## சிவபெருமான் உயிர்க்கு உதவும் தன்மை :

கீர்த்தித் திருவகவலின், 95-96 ஆம் அடிகளில்,

*'' எவ்எவர் தன்மையும் தன்வயின் படுத்துத்*
*தானே ஆகிய தயாபரன் எம் இறை ''*

என்று பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

இப்பகுதியின் பொருள் வருமாறு:

“உலகில் வாழும் மக்கள், யார் யார், எந்த எந்தக்குணங்களின் வயப்பட்டுத் தன் கருத்துக்கு மாறாக ஒழுகிய போதும் தான் அவர்களோடு ஒற்றுமைப்பட்டு நின்று இறைவன், அவர்களேயாய் இயங்குகின்றான். ஆயினும் அவ்வவர்களுக்குத் தக்கவாறு அவர்களை ஒறுத்துத்திருத்தி, முடிவில் அவர்களை எல்லாம் வீட்டு இன்பம் அடைவிக்கும் தன் கருத்துக்கு இணங்க ஒழுகும்படி செய்கிறான். இவ்வாறு எங்களோடு ஒன்றாயும் உடனாயும் நிற்கும் இறைவன், பேரருட்குணம் உடையவன் ஆதல்பற்றி, வேறாகவும் நிற்கிறான். இத்தகைய இயல்பு உடையவனே எங்கள் தலைவனாகிய சிவபெருமான்”.

இந்தத் திருவாசகக் கருத்து, சிவபெருமானின் அளப்பரும் கருணைத் திறத்தை எடுத்தியம்புகின்றது.

இச்செய்தியை, அருணந்திசிவம் அருளிச் செய்த ‘இருபா இருபஃது’ என்னும் சாத்திர நூலினோடு ஒப்பிட்டு நோக்குவது, பொருத்தம் உடையதாகும். ‘இருபா இருபஃதில்’ அப்பகுதி :

*“யாவர் யாவையும் யாங்கணும் சென்று*
*புக்குழிப் புக்குப், பெயர்த்துழிப் பெயர்ந்து*
*மிக்க போகம் விதியால் விளைத்து, இங்கு*
*ஏற்பணி யாளாய், எனைப் பிரியாதே*
*‘ஓடி மீள்க’ என ஆடல் பார்த்திட்டு*
*என்வழி நின்றனன் எந்தை ... ...”   18 - (8-13)*

இதன் பொருள் வருமாறு :

உயர்திணையும் அஃறிணையும் ஆகிய எல்லாப் பிறப்புக்களிலும், மூவுலங்களிலும் என்னுடன் ஒத்துப்போய், நான் போய்ப் பிறக்கும் இடங்களில் எல்லாம் தானும் புகுந்து, அவ்விடத்தை விட்டு நான் பெயரும்போது தானும் என்னுடன் வந்து பலவிதமான போகங்களை எனக்கு விதிக்கப்பட்டபடி வழங்கி, இந்தப் பிறப்பிலும் என்னை உண்பித்து உறங்கச் செய்து நிற்கும் பண்ணையாளும் ஆகி, என்னை விட்டு எந்த நேரமும் பிரியாமல், நான் பிறந்தும் இறந்தும் போக்கு வரவு செய்யும் நாடகத்தைப் பார்த்துக் கொண்டு, தன் நிலையினை விட்டு என் வழியில் என் விருப்பப்படி நிற்கின்றான் என்னை உடையவனாகிய என் தலைவன்.

மேற்கண்ட தோத்திர சாத்திரக் கருத்துக்களை, உள்ளம் ஒன்றிக் கற்கும் போது, சிவபெருமான் எத்துணைக் கருணைமிக்க பேரருளாளன் என்பது நமக்குப் புலப்படும்.

'உயிர்க்கு உயிராய்' நிற்கும் அவனது அளப்பரும் கருணையை.

*" இன்றெனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து*
*எழுகின்ற ஞாயிறே போன்று*
*நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன் " 394*

என்று பெருந்தகை அருளிச் செய்துள்ள திருவாசகத்தைப் பாடும் போது நெஞ்சு நெக்குருகிறது. இத் திருவாசகத்தின் பின்பகுதியை யும் நோக்கும் போதுதான், நம்மையே நாம் இழந்து நிற்பதைக் காண்போம்.

அதன் பிற்பகுதி வருமாறு :

*" நீ அலால் பிறிது மற்று இன்மை*
*சென்று சென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றும்*
*திருப்பெருந்துறை உறை சிவனே*
*ஒன்று நீ அல்லை, அன்றி ஒன்று இல்லை*
*யார் உன்னை அறியகிற் பாரே " 394*

இதன் பொருள் வருமாறு :

| | |
|---|---|
| சென்று | — மாயா கருவிகள் ஆகிய முப்பத்தாறு தத்துவங் களினின்றும் நீங்கிச் சென்று |
| சென்று | — இருவினைத் தொடக்கினின்றும் நீங்கி |
| தேய்ந்து | — 'எனது' என்னும் 'செருக்கு' தேய்ந்து |
| தேய்ந்து | — 'நான்' என்னும் 'முனைப்பு' தேய்ந்து |
| அணுவாய் | — ஆன்மா, தான் என்னும் ஒருமுதல் புலப்படா வகையில் நின்று |
| ஒன்றும் | — இறைவனுடன் ஒன்றாய்க் கலந்து |
| நீ அலால் பிறிது மற்று இன்மை | — சிவபெருமானை அன்றி வேறு ஒரு பொருள் இல்லை என்னும் படியாக, |

| | | |
|---|---|---|
| ஒன்று நீ அல்லை | — | எந்தப் பொருளாகவும் நீ இல்லையாதலால், நீ வேறாகி நிற்கிறாய்; ஆயினும் |
| அன்றி ஒன்றில்லை | — | எல்லாப் பொருள்களிலும் நீ கலந்து நிற்பதால் நீ இல்லாமல் எந்தஒரு பொருளும் நிலைத்திருப்பதில்லை; எனவே |
| நின் தன்மை | — | நீ அவ்வாறு ஒன்றாய்க் கலந்தும் வேறாய்த் தனித்தும், என்னோடு உடனாயும் நின்ற உன் தன்மையை |
| நினைப்பற நினைந்தேன் | — | எனது உள்ளத்தில் விளங்கும் நினைப்பும் மறப்பும் நீங்கிய மெய்யுணர்வினால் உன்னையே நினைந்தேன் |

இந்தப்பாடலில் உள்ள " நினைப்பு அற நினைந்தேன் " என்னும் தொடர், ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.

மாயா கருவிகளாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களைக் கொண்டு நினைக்காமல், இறைவன் திருவருளே கண்ணாகக் கொண்டு நினைப்பதைத்தான், " நினைப்புஅற நினைந்தேன் " என்று பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

துரியாதீத நிலையாகிய முத்தியில், பெருந்தகை அருளுணர்வால் நினைந்து இருந்தபடியே, கீழ் இறங்கி வந்து, துரிய நிலையில் நம்மிடம் அவர்கள் அனுபவத்தைக் கூறியருள்கிறார்கள். " நினைந்தேன் " என்று அவர்களனுபவத்தையே நமக்குக் கூறியருள்வதால், முத்தியில் இறைவனோடு இரண்டறக் கலந்த நிலையிலும், தாம் அவனருளால் அவனை நினைந்திருந்தார்கள் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

இந்தத் திருவாசகப் பாட்டு, திருவாசகத்தின் இதயம் போன்றது, இப்பாட்டுக்குச் சில மதவாதிகள், சைவசித்தாந்தக் கொள்கைக்கு முரணாகப் பொருள் கொண்டு, பாட்டின் கருப்பொருளைச் சிதைவு செய்கிறார்கள்.

" சென்று சென்று, அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து, ஒன்றாம் ' என இப்பாடலில் வரும் தொடருக்கு, " ஆன்மா கரைந்து கரைந்து இறைவனோடு கலந்து, முத்தியில் ஒன்றாய்ப் போய்விடுகிறது, எனவே முத்திநிலையில் ஆன்மா இல்லை " என்று வேதாந்திகள் பொருள் கூறுகிறார்கள்,

முத்திநிலையில் " நின்ற நின் தன்மை, நினைப்பற நினைந்தேன் " என்று பெருந்தகை கூறியருள்வதால் முத்திநிலையில் பெருந்தகை அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. ' நினைந்தேன் " என்று வரும் சொற்கு, வேதாந்திகள் பொருள் கூறவில்லை, இப்பாடலுக்கு மேற்கூறிய வேதாந்தப் பொருள் கொண்டால், ' நினைந்தேன் ' என்னும் சொல் நின்று வற்றுவதாக முடியும்.

மணிவாசகப் பெருந்தகை, தாம் பெற்ற முத்தி இன்பத்தை, " திருவெண்பா " வில்,

*" யாவரும் பெற்று அறியா இன்பத்துள் வைத்தாய் "* (622)

என்று அருளியுள்ளார்கள். இதிலிருந்து முத்தியில் அவர்கள் பேரின்பத்தை நுகர்ந்து கொண்டு இருந்திருக்கிறார்கள் என்பது தெள்ளிதின் பெறப்படுகிறது. அவர்கள் தாம் பெற்ற பேரின்ப அனுபவத்தை நமக்கு அறிவுறுத்தும் ' பொருட்டு அருளுணர்வால் ' " நினைந்தேன் " என்று சொல்கின்றார்கள்.

சிவபெருமான் உயிர்களுக்குச் செய்து வரும் உதவிகளில், இது பேருதவியாக இருப்பதால், இந்தப் பகுதியில் முத்தியில் இறைவன் நமக்கு உதவுவதைக் குறித்தும் குறிப்பிடலாயிற்று. முத்திநிலையில் உள்ள மற்றும் ஓர் உண்மையைப் பின்பு அந்தத்தலைப்பில் காண்போம்.

இறைவேறு; உயிர்வேறு எனும் சைவசித்தாந்தக் கொள்கையின் உயிர்நாடியாக இத்திருவாசகப் பாடல் திகழ்கின்றது. " கடவுள் ஒருவனே உள்பொருள், மற்றையன எல்லாம் வெறும் தோற்றம் " எனக் கூறிவரும் வேதாந்திகள், இப்பாடலுக்குத் தங்கள் கொள்கைக்கு ஏற்பப்பொருள் கூறுவது பொருந்தாது என்பதை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

## உயிர் இயல்பு

உயிர்க்கு மூன்று நிலைகள் உண்டு.

ஒன்று, பிறவிக்கு வருவதற்கு முன்னுள்ளநிலை; அது " கேவல நிலை " எனப்படும்.

இரண்டு, பிறப்புட் பட்டிருக்கும் நிலை; இது " சகல நிலை " எனப்படும்.

மூன்று, பிறப்பு-இறப்பு நீங்கிய நிலை; அது " சுத்த நிலை " எனப் படும்.

இம்மூன்று நிலைகளையும் நம்மனோர்க்கு அறிவுறுத்தும் பொருட்டு திருவாசகத்தில் ' கண்டபத்து ' என்னும் பதிகத்தில்,

*" உருத் தெரியாக் காலத்தே உள்புகுந்து, என் உளம்மன்னிக்,*
*கருத்திருத்தி, ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட*
*திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை அருத்தியினால்*
*நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே "* **475**

என்று மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

" உருத்தெரியாக் காலத்தே " என்பது, பிறவிக்கு வருவதற்கு முன்பு, உயிர் எந்தவிதக் கருவி கரணங்களும் பெறாமையால், ஏதும் அறியாமல், ஆணவமலத்தைப் பற்றிக்கிடந்த அநாதி கேவலத்தைக் குறிக்கும்

இவ்வுண்மையை

*" அறுவிலன், அமூர்த்தன் ... ... கேவலத்தில் ஆன்மா "* **(228)**

என்று சிவஞான சித்தியார் தெளிவுறுத்துகின்றது.

" உள் புகுந்து என் உளம் மன்னி " என்பது அந்த அநாதி கேவலத்திலும் இறைவன், உயிர்க்கு உயிராய் இருந்து, உயிர் உய்யும் பொருட்டு உயிர்க்கு, நுண்ணுடலைப் படைத்தளித்ததைக் குறிக்கும்.

இவ்வுண்மையை,

*" ஆணவத்தால் எண்ணும் செயல் மாண்ட*
*எவ்வுயிர்க்கும் உள்நாடி ... ... முற்பால்*
*தனுகரண புவனமும் தந்து "* **(10-12)**

என்று போற்றிப்பஃறொடை புலப்படுத்துகின்றது.

" கரு-திருத்தி ஊன் புக்கு " என்பது, நுண்ணுடலைப் பெற்ற பின்பு, அந்தந்த உயிரின் விருப்பத்திற்கு ஏற்ப, பருவுடலைத் தந்தருளியதைக் குறிக்கும்.

இவ்வுண்மையை,

*"அவற்றால், மனம் முதலா வந்த விகாரத்தால்*
*வினை இரண்டும் காட்டி, அதனால் பிறப்பு ஆக்கிக்*
*கைக்கொண்டு, மீட்டு அறிவு காட்டும் வினை*
*போற்றி"* **(12-13)**

என்று அதே போற்றிப்பஃறொடையில், உமாபதிசிவம் அருளிச் செய்துள்ளார்.

*" கருணையினால் ஆண்டு கொண்ட ... ...*
*தித்திக்கும் சிவபதத்தை ... கண்டேனே "*

என்பது, பிறப்பு – இறப்பு நீங்கிய நிலையில், இறைவன் உயிர்கட்கு வழங்கிய பேரின்பப் பெருநிலையினைக் குறிக்கிறது.

இவ்வுண்மையை,

*" திரிமலம் அறுத்துப், பண்டைச்*
*சிற்றறிவு ஒழிந்து, ஞானம்*
*பெருகி, நாயகன்தன் பாதம்*
*பெறுவது சுத்தம் ஆமே "* *(230)*

என்று அருணந்திசிவம் சிவஞான சித்தியாரில் அருளிச் செய்துள்ளார்.

இவ்வாறு, உயிர்க்குள்ள மூன்றுநிலைகளை, இத்திருவாசகப் பாட்டு, தெளிவுற விளக்குகின்றது.

உயிர்க்கும் பொது இயல்பு, சிறப்பு இயல்பு என இரு இயல்புகள் உள. அவ்விரண்டனுள் உயிரின் 'பொது இயல்பு' குறித்து இனிக் காண்போம்.

உயிர்க்குப் பொது இயல்பு என்பது, கருவி, கரணங்களோடு கூடி நிற்றல். அக்கருவி கரணங்களை, இறைவனே உயிர்கட்கு வழங்குகிறான்.

எனவே, இறைவனால் அறிவிக்கப்பட்டால் அன்றி, உயிர் எதனையும் அறிய மாட்டாது. ஆகவே, " அறிவிக்க அறிவது " உயிரின் பொது இயல்பு எனப்படுகிறது.

உயிரின் அறியாமையை அறிந்து இறைவனே உயிர்க்கு அறிவிக்கிறான் என்னும் உண்மையை,

" *அடியேன் அறியாமை அறிந்து நீயே அருள் செய்து,*
*ஊனே புக, என்தனை உழலப் பண்ணுவித்திட்டாய்*" 497

என்று 'குழைத்த பத்து' என்னும் பதிகத்தில் மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள். இதன் பொருள் வருமாறு:

" அடியேன் அறியாமை அறிந்து " என்பது ' அநாதியே ஆணவமலத்தைப் பற்றி அறியாமை வயப்பட்டுக் கிடந்த அடியேனின் அறியாமையை ' என்பதைக் குறிக்கும்.

" நீயே அருள் செய்து " என்பது, சிவபெருமானே அறிந்தருள் செய்ததைக் குறிக்கும். இவ்வுண்மையைப் பிறிதோரிடத்தில்,

" *வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்,*
*நான் யார் ? என் உள்ளம் யார் ? ஞானங்கள்*
*யார் ? என்னை யார் அறிவார் ?* 216

என்று அருளிச் செய்திருப்பதும், இங்கு நினைவுகூர்தற்கு உரியது.

" ஊனே புக என்தனை உழலப் பண்ணுவித்திட்டாய் " என்பது கருவி கரணங்களோடு கூட்டி உயிர்களுக்கு அறிவிக்கும் பொருட்டுப் பிறப்புட் படுத்தி விட்டதைக் குறிக்கும்.

இறைவன் இவ்வாறு அறிவிக்காமல் உயிர் எதனையும் அறிய மாட்டாது என்னும் உண்மையைச் சிவப்பிரகாசத்தில்,

" *தனக்கென அறிவு இலாதான்;*
*தான் இவை அறிந்து சாரான்;*
*தனக்கென் அறிவு இலாத வாயில்*
*தான் அறியா சாரத்*
*தனக்கெனஎன அறிவு இலாதான்,*
*தத்துவ வன்ன ரூபன்*
*தனக்கென அறிவா னல் இச்*
*சகலமும் நுகரும் தானே* " 64

என்று உமாபதிசிவம் அருளிச் செய்தார்.

இனி உயிரின் ' சிறப்பு இயல்பு ' பற்றிக் காண்போம்.

உயிர்க்குச் சிறப்பு இயல்பு என்பது, கருவி கரணங்களினின்றும் நீங்கி, உடனாய் நிற்கும் சிவமாய் நிற்றல் ஆகும். ஆயினும், உயிர்

எதனைச்சார்ந்து நிற்கிறதோ, அதன் தன்மையே தன் தன்மை எனக் கொண்டு நிற்கும் இயல்பினை உடையது. எனவே, " சார்ந்ததன் வண்ணம் ஆம் தன்மை " உயிர்க்குச் சிறப்பியல்பு என்று நூல்கள் கூறுகின்றன. இவ்வுண்மையை, சிவஞானபோதச் சிற்றுரை ஏழாம் சூத்திரத்தில் மூன்றும் அதிகாரணத்தில்,

*" சத்தையும் அசத்தையும் அறியும்*
*தன்மையத்தாய் ... ... சத்தும் அசத்தும்*
*அல்லாத ' சதசத்து ' ஆகிய உயிர் "*

என்று சிவஞானசுவாமிகள் அருளிச் செய்துள்ளார்கள்.

உயிர், ' சத்து ' ஆகிய இறைவனும் அன்று; ' அசத்து ' ஆகிய உலகமும் அன்று; இவ்விரண்டின் வேறு ஆகிய ஒரு தனிப்பொருள். சத்தைச் சார்ந்தபோது சத்துத் தன்மையும், அசத்தைச் சார்ந்தபோது அசத்துத்தன்மையும் கொள்வதால், உயிர் 'சதசத்து' எனப்படுகிறது.

உயிரின் இந்தச் சிறப்பு இயல்பினைத் திருவாசகத்தில், " சிந்தனை நின்தனக்கு ஆக்கி " எனத் தொடங்கும் பாட்டில் (30)

*" இரண்டும் இலித் தனியனேன் "*

என்னும் தொடரில் வைத்து, மணிவாசகப் பெருந்தகை விளக்கி அருளியுள்ளார்கள்.

பெருந்தகையவர்கள் அருளிய இந்தத் தொடரை அப்படியே சிரமேற் கொண்டு, சிவஞானபோதம் அருளிச்செய்த மெய்கண்ட தேவர், உயிரின் சிறப்பியல்பு கூறும் ஏழாம் சூத்திரத்தில்.

*" இருதிறன் அறிவுளது; இரண்டு அலா ஆன்மா "*

என்று அமைத்தருளிய இயல்பு இங்குக் கருத்தில் கொள்ளத் தக்கது

இரண்டும் இலி — திருவாசகம்.

இரண்டு அலா — சிவஞானபோதம்

' இரண்டு ' என்பது ' சத்து அசத்து ஆகிய இரண்டு பொருள்களைக் குறிக்கும்.

தனியனேன் — திருவாசகம்.

ஆன்மா — சிவஞானபோதம்.

'அலா ஆன்மா' என்பது, 'சத்தும் அசத்தும்' அல்லாத ஒரு தனிப்பொருள் ஆக உள்ளது உயிர்' என்பதைக் குறிக்கும்.

திருவாசகத்தில், உயிரின் தாழ்மை குறித்துப் பல இடங்களில் காண்கிறோம். அவற்றைக் காணும் போது, நாம் அசத்தைச் சார்ந்து நிற்பதாலேயே, துன்பங்கட்கு உட்படுகிறோம் என்பதையும், சத்தைச் சார்ந்து நின்றால் அன்றி, நமக்குத் துன்ப நீக்கம் ஏற்படாது என்பதையும், தெளிவாக உணர வேண்டும். இவ்வுண்மையையே,

*'' சார்பு உணர்ந்து, சார்பு கெடஒழுகின், மற்றழித்துச்*
*சார்தரா சார்தரு நோய் ''* (359)

என்று அருளிச் செய்தார், திருவள்ளுவர்.

இனித்தளை இயல்பு பற்றிக் காண்போம்.

**தளை இயல்பு :**

சைவ சித்தாந்தத்தில், ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று பொருள்களும் மும்மலம் எனப்படுகின்றன. இவற்றைத் 'தளை' என்கிறோம். 'தளை' என்பது 'கட்டு' ஆகும். உயிரின் வியாபகத்தைக் கட்டுப்படுத்தி உயிரைப் பிறப்பு – இறப்புக்கு உட்படுத்துவதால், இவை 'தளை' எனப்படுகின்றன. தளைக்கு, 'மலம்' 'பாசம்' என்னும் சொற்கள், சைவ சித்தாந்தக் குறியீடுகள் ஆகும்.

திருவாசகத்தில், மலம், பாசம் என்னும் சொற்கள் பல இடங்களில் வருகின்றன.

*'' மும்மை மலம் அறுவித்து ''* — (658)

*'' பசு பாசம் அறுத்தானை ''* — (478)

என்னும் தொடர்களிலிருந்து இவ்வுண்மை பெறப்படும்.

கீர்த்தித் திருவகவலில்,

*'' மூலம் ஆகிய மும்மலம் அறுக்கும்*
*தூயமேனி சுடர்விடு சோதி ''* (111 - 112)

என்று பெருந்தகை அருளியுள்ளார்கள்.

'மும்மலம்' என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களைக் குறிக்கும் என்பதை மேலே கண்டோம்.

" மூலம் " என்ற சொற்கு ' காரணம் ' என்றொரு பொருள் உண்டு. ஆக, மும்மலங்களும் காரியப்படுவதற்கு முன்பே, காரணநிலையில் உள்ளன என்பது பெறப்படுகின்றது. இதுவே, " மூலம் ஆகிய மும்மலம் " என்னும் தொடருக்குப் பொருளாகும். ' மும்மலங்களும் மூலம் ' என்பதால், இவை வேறு எதிலிருந்தும் தோன்றவில்லை என்பதும் அநாதியே உள்ளன என்பதும் புலனாகின்றன,

மூவர் தேவாரங்களிலும் " மலம் " என்னும் சைவ சித்தாந்தக் குறியீட்டுச் சொல்லாட்சி வருகிறது. ஆயினும், திருவாசகத்தில் மட்டுமே, " மும்மலம் " என்னும் சொல்லாட்சி உள்ளது. மூவர் தேவாரங்களில் எண்ணிக்கை சுட்டாமல் வரும் " மலம் " என்ற சொல், திருவாசகத்தில் மட்டுமே, " மும்மலம் " என்று எண்ணிக்கை சுட்டி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

' மும்மலம் ' என்னும் சொல்லாட்சி, திருவாசகத்தில் பல இடங்களில் கையாளப் படுவதைக் காணலாம். எடுத்துக்காட்டுக்கு ஒருசில வருமாறு.

" *அழுக்கு அடையா நெஞ்சு உருக* மும்மலங்கள்
*பாயும் கழுக்கடை காண்* " (364)

" உள்ள மலம் மூன்றும் *மாய உகு* பெருந்தேன் " (629)

" உள்ள மலம் மூன்றும் " என்றதனால், மூன்று மலங்களும் என்றும் உள்ள அநாதிப் பொருள்கள் என்பது பெறப்பட்டது.

" மும்மை மலம் *அறுவித்து முதலாய முதல்வன் தான்* " (658)

" மும்மை " என்னும் சொல், உம்மை, இம்மை, அம்மை என்னும் மூன்று நிலைகளிலும் மூன்று மலங்களும் உள்ளன என்று பொருள்.

" உம்மை என்பது, உயிர்கள் பிறவிக்கு வரும் முன்பு உள்ள நிலையைக் குறிக்கும்.

" இம்மை " என்பது, உயிர்கள் பிறப்புட்பட்டுள்ள நிலையைக் குறிக்கும்.

" அம்மை " என்பது உயிர்கள் வீடுபேறு பெற்றுப் பிறப்புக்கு உட்படாத நிலையைக் குறிக்கும்.

உயிர்கள் பிறப்புக்கு வருவதற்கு முன்பும், பிறப்புக்கு உட்படாத போதும் மும்மலங்களும் காரணநிலையில் உள்ளன. உயிர்கள் பிறப்புட்படும் போது அவை மூன்றும் காரிய நிலையில் இருக்கின்றன.

"மும்மை" என்பது முக்காலத்தும் மூன்று மலங்களும் உளதாம் தன்மை உடையன என்பதைக் குறிக்கின்றது.

தேவார ஆசிரியர்களின் காலத்திற்குப்பின்பு அவதரித்ததால், மாணிக்கவாசகர் காலத்தில் சைவசித்தாந்தப் புலமை தமிழகத்தில் மேலோங்கி இருந்திருக்கிறது என்பது இதனால் பெறப்படுகிறது. மாணிக்கவாசகர் காலத்தில் தத்துவவாதமும் பரவலாக நிகழ்ந்திருக்கிறது என்பதைப் போற்றித்திருவகவலில் உள்ள செய்திகளிலிருந்து முடிவுபெற வேண்டியிருக்கிறது. அவை வருமாறு :

*'ஆத்த மானார் அயலவர் கூடி*
*நாத்திகம் பேசி 'நா'த்தழும்பு ஏறினர்''* 46-47

*''மிண்டிய மாயா வாதம் என்னும்*
*சண்ட மாருதம் சுழித்து அடித்து ஆர்த்து''* 54-55

எனவே, சைவ சித்தாந்த நுட்பங்கள் மூவர் தேவாரங்களில் உள்ளதைப் பார்க்கிலும் திருவாசகத்தில் கூடுதலாக இருப்பதைக் காண முடிகிறது.

சைவ சித்தாந்தம் கொள்ளும் ஐந்து மலங்களைப் பற்றிய செய்தியும் திருவாசகத்தில் இடம்பெற்றுள்ளது.

ஐந்து மலங்கள் எவை என்பதைச் சிவஞான சித்தியார்,

*''மாயையின் காரி யத்தை*
*மாயேய மலம் அது என்றும்*
*ஏயும்மும் மலங்கள் தத்தம்*
*தொழிலினை இயற்ற ஏவும்*
*தூயவன் தனதுஓர் சத்தி*
*திரோதான கரி அது என்றும்,*
*ஆய்வர் இம் மலங்கள் ஐந்தும்*
*அணுக்களை அணைந்து நிற்கும்''* 177

என்று தெளிவுறுத்திக் கூறுகின்றது.

" மாயேய மலம் " என்பது. குணதத்துவம் முதல் பிருதிவி ஈறுன தத்துவங்களையும், புவனங்களையும், அப்புவனத்துப் பொருள் களையும் குறிக்கும்.

மாயேய மலம் அசுத்த மாயா தத்துவத்தையும் குறிக்கும்; பிரகிருதிமாயா தத்துவத்தையும் குறிக்கும்.

அசுத்த மாயா தத்துவத்தை, மாயேயம் என்றும், பிரகிருதிமாயா தத்துவத்தை பிராகிருதம் என்றும் வேறுபடுத்திக் கூறுவர். இருப் பினும் இரண்டையும் மாயேய மலம் என்று கூறுவது வழக்கு ஆகும்.

" திரோதான கரி " என்பது, திரோதானத்தைச் செய்வது. திரோதானம் = மறைப்புகரி = செய்வது. ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகளை மறைக்கும் மலசத்திகளை அதிட்டித்து நிற்றலால், இறைவனின் எண்குணங்களுள் ஒன்று ஆகிய அருளாற்றல். மறைப்பாற்றல் எனப்படுகிறது. அந்த மறைப்பாற்றல், மும்மலங் களையும் அதிட்டித்து நின்று அவ்வவற்றின் தொழில்களில் அவற்றை ஈடுபடுத்திப் பரிபாகம் வருவித்தலால், அம்மறைப்பாற்றல் மலம் என உபசாரமாகக் கூறப்படுகிறது.

அதிட்டித்தல் — நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்

உபசாரம் — முகமன் வார்த்தை ( Formal usage )

" மலங்கள் ஐந்து " என்னும் சொல்லாட்சி இடம் பெற்றுள்ள திருவாசகப் பாட்டு வருமாறு :

*" குலம் களைந்தாய்; களைந்தாய் என்னைக்*
*குற்றம்; கொற்றச் சிலை ஆம்*
*விலங்கல் எந்தாய், விட்டிடுதி கண்டாய்?*
*பொன்னின் மின்னு கொன்றை*
*அலங்கல் அம்தாமரை மேனி, அப்பா*
*ஒப்பு இலாதவனே,*
*மலங்கள் ஐந்தால் சுழல்வன், தயிரில்*
*பொரு மத்து உறவே " 133*

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களுள், அநாதியே உயிர்க்கு அறியாமையைச் செய்தது ஆணவம்; எனவே, ஆணவமலம் அநாதியே உள்ளது தெளிவாகிறது. உயிர்க்குள்ள உடல், கருவி

முதலியவற்றை, இறைவன் என்றும் உள்ள 'மாயை'யிலிருந்து தோற்றுவித்து வழங்குவதால் மாயா மலமும் அநாதியே உள்ளது என்பதும் புலப்படுகிறது.

கன்ம மலமும் அநாதியே உள்ளது என்பதை எப்படி அறிவது?

இத்தடைக்கு விடை கூறும் முகத்தான், சிவஞான சித்தியாரில்,

" *முன்னமே ஆன்மாவின் தன்*
*மும்மலத்து ஒன்றது ஆகிக்*
*கன்மமும் மூலம் காட்டிக்*
*காமிய மலமாய் நிற்கும்* " (129)

என்று அருணந்திசிவம் அருளிச் செய்துள்ளார்.

சித்தியாரில் உள்ள இந்தப்பகுதிக்குப் பொருள் வருமாறு.

முன்னமே — அநாதியே,

ஆன்மாவின் தன் — ஆன்மாவைப் பொருந்திய

மும்மலத்து ஒன்றது ஆகி — மும்மலங்களுள் ஒன்றாய் எண்ணப்பட்டு,

கன்மமும் — கன்மம் என்னும் மலமும்

மூலம் காட்டி — காரண நிலையில் உண்டு என்பதைக் காட்டும்படியாக

காமிய மலமாய் நிற்கும் — மூலகன்மத்தின் தொடர்பு கொண்டு நிகழும் இருவினைகளாக உள்ளது.

இக்கருத்தை இன்னும் தெளிவுறுத்தும் பொருட்டுச் சிவஞான போதச் சிற்றுரை, நான்காம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தின் இறுதியில்,

" அநாதியே மலத்தைப் பற்றுதல், உயிரின் வினையாய், உயிர்க் குற்றங்களுள் வைத்து எண்ணப்படுவது "

என்று சிவஞானசுவாமிகள் அருளிச் செய்துள்ளார்கள்.

இதிலிருந்து, அநாதியே உள்ள உயிர், அநாதியேயுள்ள ஆணவ மலத்தை, அநாதியே பற்றியதாகிய உயிரின் செயல் அநாதியே

தொழிற்பட்டதால், உயிரின் செயல் "மூலகன்மம்" எனப்படுகிறது படவே கன்மமும் அநாதியே உள்ளது என்பது தெளிவாயிற்று.

இவ்வுண்மையைத் திருவாசகத்தில், திருக்கழுக்குன்றப் பதிகத்தின் ஏழாவது பாட்டில்

*" மயக்கம் ஆயதோர் மும்மலப்*
*பழவல்வினைக்குள் அழுந்தவும்*
*துயக்கு அறுத்து, எனை ஆண்டு கொண்டு, நின்*
*தூய்மலர்க் கழல் தந்து "* *(474)*

என்று மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

இதில், " மும்மலப் பழவல்வினை " எனவரும் தொடர் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

" மும்மலம் " என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல காரியங்களைக் குறிக்கும்.

" பழவல்வினை " என்பது, அநாதியே ஆணவமலத்தைப் பற்றிய உயிர்க்குற்றத்தைக் குறிக்கும்.

" அழுந்தவும் " என்பது, எளிமை காரணமாக உயிர், ஆணவ மலத்தைப் பற்றி, அதில் அழுந்திக் கிடந்ததைக் குறிக்கும்.

துயக்கு – மெலிவு – தளர்வு.

' துயக்கறுத்து " என்பது, அநாதியே உயிர் தானே ஆணவ மலத்தைப் பற்றியதனுல், உயிரின் அறிவும் செயலும், அப்பற்றுக் காரண மாகத் தொழிற்படாமையால், உயிர் தளர்வுற்று நின்றபோது, அத் தளர்வை நீக்கும் பொருட்டு, இரக்கம் ஒன்றே காரணமாக, இறைவன் அநாதியே உயிர்க்கு நுண்ணுடலைத் தந்தருளியதைக் குறிக்கும்.

' மூலகன்மம் ' அநாதியே உள்ளது என்பதைத் திருவாசகம் இவ் வளவு துல்லியமாகத் தெளிவுபடுத்தி யருளியுள்ளது.

திருவாசகம் தெளிவுறுத்தும் மற்றுமோர் அரிய சைவசித்தாந்த நுண்பொருளை, இனிக்காண்போம்.

நமக்குக் கிடைத்துள்ள இந்த உடல், நமது முன் வினை காரண மாக வந்தது; இந்த முன்வினையும், நமது முன் உடலைக் கொண்டு நம்

மால் செய்யப்பட்டதே ஆகும். ஆக, உடலால் வினையும், வினையால் உடலும் வருகிறது என்பது தெளிவாகிறது. அவ்வாறயின், இவ் விரண்டனுள் எது முதலில் வந்தது என்னும் வினு எழுகிறது.

இவ்வினுவுக்கு, விடைகூறும் வகையில்,

*" விச்சது இன்றியே விளைவு செய்குவாய் "* 100

என்று மணிவாசகப் பெருந்தகை அருளிச்செய்துள்ளார்கள்.

விச்சு = வித்து.

'வித்து என்பது இல்லாமலே, மரத்தை விளைவிப்பாய்' என்பது இத் திருவாசகப்பாடற் பகுதிக்குப் பொருளாகும்.

"மரம் முந்தியா ? வித்து முந்தியா ?" என்னும் தடைக்குப் பகுத்தறிவுக்கு ஏற்ற விடையைச் சைவசித்தாந்தம் ஒன்றே அளிக்கின்றது. இவ்விடைக்குப் பரம பிரமாணமாகத் திருவாசகம் மட்டுமே திகழ்கின்றது என்பதைக் காணும்போது, நம் உள்ளம் பேருவகை எய்துகிறது.

'இறைவன்' முதன்முதல் மரத்தைதான் உண்டாக்கினுன்; அதன்பின்பே மரமும் வித்தும் ஆகிய முறைமை தோன்றிற்று' என்பது இத்திருவாசகப்பகுதியின் கருத்தாகும்.

"வித்து இல்லாமல் மரம் எப்படி வந்தது ?" என்னும் வினுவை எழுப்பினுல்,

"இறைவன், தன் அளப்பரிய ஆற்றலினுல் முதன்முதல், வித்து இல்லாமலே மரத்தை உண்டாக்கினுன், பின்புதான், மரமும் வித்துமாகிய முறைமையை ஏற்படுத்தி இருக்கிறுன்" என்று பெருந்தகை விடையளித்தருளியுள்ளார்கள்,

இறைவன் திருவருள், உள்நின்று உணர்த்த, இவ்விடையை, பெருந்தகை அருளியுள்ளதால், 'மரமே முந்தி' என்னும் விடை சரியானதென்றே நாம் கொள்ளவேண்டும்.

என்றுலும், இவ்வுண்மையை நிலைநாட்டுவதற்கு உலகியல் சான்று ஏதேனும் உண்டா என நம் உள்மனம் கேட்கவே செய்கிறது. இத்தடைக்கு விடை காண்பதற்கு. ஓர் உலகியல் சான்றினை கூறலாம்.

வெற்றிலைச் செடியில் எந்த விதையும் இல்லை; விதை இல்லாமலே அதன் கொடியை நட்டோமானால், அது தழைத்து வளர்கிறது. இதுபோல், பல செடிகள் உண்டு. ஆயினும், செடியோ மரமோ இல்லாமல் தோன்றிய விதை எங்கும் காணப்படவில்லை. செடியில்லாத விதையை நாம் பார்க்கவில்லையாகலின், செடியே முந்தினதாக இருக்கவேண்டும் என்பது புலனாகிறது. இதுகொண்டு, மரமே முந்தியது என்று விடையிறுத்தல் வேண்டும். அவ்வாறே கோழி முந்தியா? முட்டை முந்தியா என்னும் வினாவிற்கும், கோழியே முந்தியது என்றே விடைகூற வேண்டும்.

சைவசித்தாந்த அடிப்படையில் உடல் முந்தியா காரிய கன்மம் முந்தியா என்று எழுப்பப்படும் வினாவிற்கும் உடலே முந்தியது என்று விடைகூற வேண்டும். உடல், மாயா காரியம். எனவே, மாயை முந்தியா, காரிய வினை முந்தியா என்று எழுப்பப்படும் வினாவிற்கு, மாயை முந்தியது என்பதே விடையாகும்.

இவ்வுண்மையைச் சாத்திரக்கண் கொண்டு இனிக் காண்போம்

அநாதி கேவலத்தில், உயிர்களின் அறிவும் செயலும் இயக்கமின்றி, ஆணவ மலத்தால் மறைப்புண்டு, உயிர்கள் ஆணவமலத்தைப் பற்றிக் கிடக்கின்றன. அப்பொழுது, கருணையே காரணமாக இறைவன் உயிர்களுக்கு, மாயையிலிருந்து சூக்கும சரீரத்தைப் படைத்து வழங்குகிறான்.

இவ்வாறு வழங்கப்படும் நுண்ணுடல் (சூக்கும சரீரம்), எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரியானதாக அமைவதால், நுண்ணுடல் வினை காரணமாக அமைவதில்லை என்பது பெறப்படும்; இஃது இறைவனின் கருணை காரணமாக அமைவதாகும்.

நுண்ணுடலைப் பெற்றபின்பே; உயிர்கள் முதன்முதல் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றன. அந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே, அந்தந்த உயிர்களின் விருப்பத்திற்கு ஏற்ற பருவுடல்களை இறைவன் வழங்குகிறான். ஒவ்வொரு உயிருக்கும் வெவ்வேறு பரு உடலை இறைவன் அளிக்கிறான். அஃதே உயிர் முதன்முதலில் பெற்ற பருவுடல் ஆகும்.

அந்த முதல் பருவுடலில் நின்றே, உயிர்கள் விருப்பு – வெறுப்பு காரணமாக, நல்வினை தீவினைகளைப் புரியத் தொடங்குகின்றன இதிலிருந்து, உயிர்கள் பருவுடலைப் பெற்ற பின்னரே, வினைகளைச்

ப்தன என்பது பெறப்படுகிறது. அதன் பிறகே உடலால் வினை வினையால் உடலும் வருகின்ற முறைமை ஏற்பட்டது.

இவ்வுண்மையைப் " போற்றிப் பஃறொடை " என்னும் சாத்திர தில்,

" பொற்புடை மாயைப் புணர்ப்பின்கண் முற்பால்
தனுகரணமும் புவனமும் தந்து, அவற்றால்
மனம் முதலால் வந்த விகாரத்தால் வினைஇரண்டும்
காட்டி, அதனால் பிறப்பு ஆக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினை போற்றி " (10-13)

ாறு உமாபதிசிவம் அருளிச் செய்துள்ளார்.

இங்குத் 'தனு' என்பது, சூக்கும உடம்பைக் குறிக்கும். ரணம்' என்பது, அந்த சூக்கும உடம்பில் அமைந்துள்ள மனம், தி, அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் மூன்றையும் றிக்கும்.

நுண்ணுடல் வழங்கப்பட்ட பிறகே உயிர்க்கு, நல்வினை - தீவினை றிய அறிவு ஏற்படுகிறது என்பதை, " (சூக்கும சரீரத்தால்) ந்த விகாரத்தால் வினை இரண்டும் காட்டி " என்னும் தொடர் ப்படுத்துகின்றது. எனவே, வினை காரணமாக, முதன்முதல் பிர்கட்கு உடல் வழங்கப்படவில்லை என்பது தெளிவாயிற்று.

இவ்வுண்மையைச் சிவஞானபாடியம் இரண்டாம் சூத்திரம், தல் அதிகரணம் தொடங்குவதற்கு முன்பே, சிவஞானசுவாமிகள் ராய்ந்து வெளிப்படுத்தி யருளியுள்ளார்கள்.

இவ்வரிய சைவ சித்தாந்த நுட்பத்தை மணிவாசகப் பெருந்தகை ருளிச் செய்துள்ளமையால், அது சைவ சித்தாந்தத்திற்கு அவர்கள் ழங்கியருளிய பெரியதோர் அருட்கொடையாக விளங்குகின்றது.

இவ்வாறு 'தனை இயல்பு' பற்றித் திருவாசகத்தில் உள்ளவற்றை ளவு சிந்திக்கலாயிற்று. இனி, மல நீக்கத்திற்கு வழிகோலும் ாதனம்' என்னும் 'வழிபாட்டு முறை' பற்றிச் சற்றுக் ண்போம்.

வழிபாட்டு முறை :

சைவ சித்தாந்தம் நால்வகை வழிபாட்டு முறைகளை வகுத்துள்ளது. அவை சரியை, கிரியை, யோகம் – ஞானம் எனப்படும். இவற்றை மணிவாசகப் பெருந்தகை, சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் செழுந்தமிழ்ச் சொற்களில் முறையே அருளிச்செய்துள்ளார்கள். இவற்றுள் ஏதேனும் ஒரு நெறியில் உறைப்புடன் நின்றால், வீடுபேறு கிட்டும் என்பது பெருந்தகையின் கருத்து. இதனை,

*'' சீலம் இன்றி, நோன்பு இன்றிச்,*
*செறிவே இன்றி, அறிவு இன்றித்,*
*தோலின் பாவைக் கூத்தாட்டு ஆய்ச்*
*சுழன்று விழுந்து கிடப்பேனை*
*மாலும் காட்டி வழி காட்டி*
*வாராஉலக நெறி ஏறக்*
*கோலம் காட்டி ஆண் டானைக்*
*கொடியேன் என்றோ கூடுவதே !* *(643)*

என்னும் திருவாசகப்பாடலால் காணலாம்.

'சரியை' என்பது, சரீரத்தால் செய்யும் தவம் ஆகும்; 'கிரியை என்பது, சரீரத்தாலும் உள்ளத்தாலும் செய்யும் தவம் ஆகும் 'யோகம்' என்பது, உள்ளத்தால் மட்டும் செய்யும் தவம் ஆகும் 'ஞானம்' என்பது, சிவபெருமானையே அறிவால் நினைந்து செய்யும் தவம் ஆகும்.

இவற்றுள் சரியை, கிரியை, யோகம் ஆகியன 'அன்பு நெறி' என்றும், இறுதியில் கூறப்படும் ஞானம், 'அறிவு நெறி' என்றும் கூறுவர்.

எல்லாப் பற்றையும் விட்டுச், சிவபெருமானை நினைந்து நிற்கும் அன்பின் முதிர்ச்சியே, 'ஞானம்' ஆகும். எனவே, ஞானமும் அன்பு நெறி என்றே கொள்ளப்படும்.

*'' ஞானம் ஈசன்பால் அன்பே ''*

என்னும் சேக்கிழார் வாக்கு இதனை மெய்ப்படுத்தும்.

நான்கும் வழிபாட்டு நெறிகள் என்று சிவாகமங்களில் வகுக்கப் பட்டிருப்பதனுல், அவற்றுள் ஏதேனும் ஒன்றில் அன்பு மிகுந்து விட்டால், ஒன்றுக்கு ஒன்று ஏற்றத்தாழ்வு கற்பிப்பது ' பொருத்த முடையதாகாது. இந்நான்கு நெறிகளிலும், இறைவனிடத்து அன்பு மீதூர்ந்து நிற்பது ஒன்றே வேண்டப்படுகிறது. அத்தகைய அன்பு ஒன்றே பதிஞானத்தை வழங்கி வீடுபேற்றினை உயிர்க்கு விளைவிக்கும். இவ்வுண்மையை நம்மனோர்க்குத் தெளிவுறுத்தும் பொருட்டே, கீர்த்தித் திருவகவலில்.

*'' அடியார் உள்ளத்து அன்பு மீதூரக்*
*குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும் ''* (7-8)

என்று பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

"குடியாக் கொண்ட கொள்கை" என்பது, சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து நிற்கும் அடியார் உள்ளத்தினை இடமாகக் கொண்டு, அவ்விடத்தை விட்டு நீங்காமல் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் அருளிப்பாட்டினைக் குறிக்கும்.

"சிறப்பு" என்பது, அவ்வாறு நால்வகை நெறிகளில் ஏதேனும் ஒன்றிலேனும் உறைப்புடன் சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து நிற்கும் அடியவர்கட்கு அனைத்தினும் உயர்ந்ததாகிய வீடுபேற்றினை இறைவன் வழங்குவான் என்பதைக் குறிக்கும்.

இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டே, சிவஞானபோதம், பதினோராம் சூத்திரம், இரண்டாம் அதிகரணத்தில்,

*' பத்தியினுல் மறவாது ஏத்த, அவனது*
*சீபாதத்தை அணையும் ''*

என்று மெய்கண்டார் அருளிச்செய்தார்.

இதனையே மணிவாசகப் பெருந்தகை, "பத்திநெறி" என்று அருளிச் செய்தமையைக் கீழ்க்காணும் திருவாசகத்தில் காணலாம்:-

*'' முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப்*
*பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்*
*சித்தமலம் அறுவித்துச் சிவம்ஆக்கி எனைஆண்ட*
*அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்,*
*அச்சோவே ''* (648)

"பத்தி நெறி" என்பது, அன்பு நெறி ஆகும். சைவத்தில் "அன்புநெறி" ஒன்றே நால்வகை நெறிகளிலும் உள்ளீடாக இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தும் பொருட்டே, முத்தியை பற்றிப் பேசும் இத்திருவாசகப் பாடலில் "பத்தி நெறி" யினைச் சிறப்பித்து, மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

சிவஞான சித்தியாரில் "ஞானத்தால் வீடு" (279) என்று வருவதைக் கொண்டு, சரியை முதலிய மூவகை அன்பு நெறிகளில் நின்றால், வீடுபேறு கிட்டாது என்றும், ஞானம் ஆகிய அறிவு நெறியில் நின்றால் மட்டுமே வீடுபேறு அடையமுடியும் என்றும் சில உரையாசிரியர்கள் கூறுகின்றார்கள். இது பொருந்துமாறு இல்லை. சிவஞான சித்தியாரில்,

*"ஈசன் யோகக் கிரியா சரியையினில்*
*நின்றோர், ஊனமிலா முத்திபதம்*
*பெற்று, உலகமெலாம் ஒடுங்கும்போது,*
*... ... அங்கு நாதனே முன்நிற்கின்,*
*நணுகுவர் நற்றாளே"* *(277)*

என்று அருளிச் செய்திருப்பதையும் கருத்தில் கொண்டு, சிந்திக்க வேண்டும்.

'ஞானநெறி' என்பது வேறு; 'ஞானத்தால்வீடு' என்பது வேறு. ஞானநெறியில் வரும் 'ஞானம்' கேட்டல், சிந்தித்தல், தெளிதலின் பின்பு வரும் நிட்டை கூடுதலைக் குறிக்கும். 'ஞானத்தால் வீடு' என்பதில் வரும் 'ஞானம்' என்பது, சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து நிற்கும் ஆன்மாவின் கண் பதிப்பிக்கப் படும் "பதிஞானம்" என்பதைக் குறிக்கும்.

ஞானநெறியில் நின்றவர்கட்கு மட்டுமே வீடுபேறு கிட்டும்; மற்றவர்கட்கு வீடுபேறு கிட்டாது என்று கூறினால், திருக் கோயிலுக்குப் பூமாலை புனைந்து ஏத்துவதும், சிவபெருமான் புகழை உரைப்பதும், திருக்கோயிலில் தூத்து மெழுகி உழவாரப்பணி செய்வதும் பயனற்றது என்றாகிவிடும். திருத்தொண்டின் உறைப் பால் அப்பரடிகள்,

*"நண்ணரிய சிவானந்த ஞான வடிவே ஆகி*
*அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்திருந்தார்"*

என்று சேக்கிழாரடிகள் கூறியருளியதை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாகும்.

வழிபாட்டு நெறிகள் நான்கு என வகுத்துள்ள சைவசித்தாந்தம் அவற்றை வெளிப்படுத்தும் முறைகளை மூன்ருக அமைத்துள்ளது. அவற்றை மனத்தால் வழிபடுதல், வாக்கிஞல் வழிபடுதல், செயலி ஞல் வழிபடுதல் என்பர். அறிவு வழிபாடு, இறைவன் குருவாக வந்து உணர்த்திய பின்பே மலரும்.

இம்மூவகை முறைகளில் சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து வழிபடுவதைக் குறித்து,

> '' சிந்தனை நின்தனக்கு ஆக்கி, நாயினேன்தன் கண்ணிணை நின்
> திருப்பாதப் போதுக்கு ஆக்கி,
> வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்குஉன்
> மணிவார்த்தைக்கு ஆக்கி '' (30)

என்று பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

' சிந்தனை நின்தனக்கு ஆக்கி ' என்ருல், ' மனத்தை நின் திருவுருவம் முழுவதையும் நினைப்பதற்கு ஆக்கி ' என்று பொருள்.

'' கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி '' என்ருல், ' கண்களை உன் திருவடித் தாமரை மலர்க்கு ஆக்கி' என்று பொருள்.

மனத்தால் வழிபடுவது, ' அகவழிபாடு ' ஆகும். கண்களால் வழிபடுவது, ' புறவழிபாடு ' ஆகும்.

'' வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி '' என்ருல், அத்திருவடி மலர்களையே கைகளால் கூப்பி வழிபாடு செய்வது '' என்று பொருள்.

'' வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி '' என்ருல், வாயிஞல் உன் புகழைப் பாடிக்கொண்டு வழிபடுவது ' என்று பொருள்.

' இவ்வாறு மனத்திஞல் நினைத்தும், வாயிஞல் பாடியும், கண்களால் கண்டும், கைகளால் தொழுதும் வழிபாடு செய்வது, மனம் வாக்குக் காயங்களால் வழிபடுவதைக் காட்டுகின்றது.

மற்ருெரு திருவாசகத்திலும், இம்மூவகை வழிபாடுபற்றிப் பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள். அப்பாடல் வருமாறு :

" ஆமாறுஉன் திருவடிக்கே அகம்குழையேன்; அன்பு உருகேன்
பூமாலை புனைந்து ஏத்தேன், புகழ்ந்து உரையேன்; புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன், மெழுகேன், கூத்தாடேன்;
சாமாறே விரைகின்றேன், சதுராலே சார்வானே " (18)

அகம் குழைதல், அன்புருகல், — அகவழிபாடு — மனத்தால் வழிபடுவது.

ஏத்துதலும் புகழ்தலும் — வாக்கினுல் வழிபடுவது.

மெழுகுதலும் கூத்தாடுதலும் — காயத்தால் வழிபடுவது.

மனம், மொழி, மெய்களால், இறைவன் திருவடிகளையே நினைந்து வழிபடுவதைத் திருவாசகம் இவ்வாறு தெளிவுபடுத்துகின்றது.

மேற்கூறிய மூவகை வழிபாட்டின் போது, நமது உள்ளம் சிவபெருமானிடத்து, அன்பு மீதூர்ந்து உருகி வழிபடவேண்டும். எவ்வாறு உருகி வழிபடவேண்டும் என்பதைப் பெருந்தகை

" அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய், அழல் சேர்ந்த
மெழுகே அன்னார், மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந் தாரோடும் தொடராதே
பழுதே பிறந்தேன்; என் கொண்டு உன்னைப் பணிகேனே " 92

இதற்குப் பொருள் வருமாறு :

நின்பால் அன்பாம் மனமாய் – உன்னிடத்து
அன்புமயமான உள்ளம் உடையவராய்
மின்னார் பொன்னார் கழல்கண்டு – ஒளிபொருந்திய
பொன் அனைய திருவடிகளைத் தரிசித்து
அழல்சேர்ந்த மெழுகே அன்னார் – தீயிடைப்பட்ட
மெழுகினைப் போன்றவராய்
தொழுதே, உன்னைத் தொடர்ந்தாரொடும் தொடராதே –
வழிபட்ட நிலையிலேயே உன்னைப் பின்பற்றித்
தொடர்ந்தடைந்த அன்பரோடும் தொடர்ந்து வாராமல்,
அழுகேன் – தனிமைப்படுத்தப்பட்டு அழுவேனாயினேன்;

பழுதே பிறந்தேன் – எனவே, என் பிறப்பு பாழ்பட்டு விட்டது
என் கொண்டு உன்னைப் பணிகேன் – இனி, எதனைப்
பற்றுக்கோடாகக் கொண்டு உன்னை வழிபடுவேன் ?

( ஒரு வழியும் காணேன் என்றவாறு )

வழிபாட்டுக்கு முதற்கண் வேண்டுவது, அன்புமயமான உள்ளம் : இறையன்பினையன்றி வேறெதுவும் வழிபாட்டின் போது, உள்ளத்தில் இருந்தால், இறைவன் அருள்பாலிக்க வரும்போது, அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாது, இழந்து விடுவோம் என்பதை இந்த அருமைப்பாட்டு நமக்கு அறிவுறுத்துகின்றது.

இத்திருப்பாட்டில், தீயில்பட்ட மெழுகினை ஒத்த உணர்வு வேண்டும் என்று கூறியருளியிருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மெழுகு உருகும் போது, தன் நிலையை இழந்து விடுகிறது. இறையன்பு உள்ளத்தில் நிறைந்து இருக்குமாயின், ஆன்மா தன் உணர்வை இழந்து நிற்கும். சிவபெருமானையன்றி வேறு நினைவு உள்ளத்தில், இருக்குமாயின் இந்த நிறைவு ஏற்படாது ; அதனுல் வழிபாடு பயனற்றதாகிவிடும்.

இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டே, சிவபெருமானையன்றி வேறு எந்தத் தெய்வத்தையும் வழிபடலாகாது என்று திருமுறை ஆசிரியர்கள் அனைவரும் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தியருளி உள்ளனர்.

இந்த வகையில் மணிவாசகப் பெருந்தகையின் அருளிப் பாடுகளைக் குறித்துச் சற்று நோக்குவோம்.

*" குடி கெடினும், உள்ளேன் பிறதெய்வம்*
*உன்னையல்லால் எங்கள் உத்தமனே "* ( 6 )

' குடி கெடினும் ' என்பது, நாம் பிறந்த குடிப்பிறப்பிற்கு உரிய பெருமை கெட நேரிட்டாலும் என்பதைக் குறிக்கும்.

*" மற்றொரு தெய்வம் கனவிலும் நினையாது "*

*( போற்றித்திருவகவல் - 74 )*

*" தொழுவனோ ? பிறரைத் துதிப்பனோ ? எனக்கு*
*ஓர் துணை என நினைவனோ ? "* ( 457 )

*'' கற்றைவார் சடைஎம் அண்ணல், கண்ணுதல்*
*பாதம் நண்ணி, மற்றும் ஓர் தெய்வம்*
*உண்டு என நினைந்து, எம்பெருமாற்கு*
*அற்று இலாதவரைக் கண்டால்,*
*அம்ம ! நாம் அஞ்சுமாறே ''* *( 516 )*

'' பெருமாற்கு அற்று இலாதவர் '' என்பது, ' சிவபெருமானிடம் அன்பு மீதூர்ந்து வழிபடும்போது, தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் இழந்துபோகாதவர் ' என்னும் பொருளைத்தரும். நமது உடைமை என்பது எதுவும் இல்லை என்ற உணர்வோடு வழிபடல் வேண்டும்.

சித்தாந்த சைவத்தின் இத்தலையாய கொள்கையை, பெருந்தகை இவ்வளவுதூரம் வலியுறுத்துவதற்குச் காரணம், சிவபெருமான் ஒருவனே ஐந்தொழில் ஆற்றுபவன் என்பதனாலேயே ஆகும்.

திருவாசகத்தில், சிவபெருமானின் பெருமையையும் நமது சிறுமையையும் ஆயிரக் கணக்கான இடங்களில், மணிவாசகப் பெருந்தகை கூறியருளியுள்ளார்கள். திருமுறைகளைப் படனம் செய்யும்போது, சிவபெருமான் நமக்குச் செய்துவருகின்ற அளப்பரும் நன்மைகளை நினைந்து நினைந்து நெஞ்சு உருகவேண்டும். அப்படி உருகும்போது, நம்மை அறியாமல், நமது உள்ளம், சிவபெருமானிடத்து மீதூர்ந்த அன்புகொள்ளும்.

இத்தகு நிலையில்,

*'' சிவன் எம்பிரான்; என் சிறுமை கண்டும்,*
*என்னை ஆண்டு கொண்டான்; அவன்*
*எம்பிரான் என்ன, நான் அடியேன் என்ன,*
*இப்பரிசே, எம்பிரான் தெரியும் பரிசு ஆவது. ''* *( 13 )*

என்னும் உணர்வு தலைப்படும் ; இதுவே வழிபாட்டின் பயன் ஆகும். ( பரிசு - தன்மை ) சிவபெருமானும் ஆன்மாவும் அத்துவித - நிலையில் இருக்கும் தன்மையே, வழிபாட்டின் முடிந்த பயன் ; இதனினும் மேலான நிலை வேறில்லை,

இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும் பொருட்டுச் சிவஞான பாடியம் ஆறும் சூத்திரம் இரண்டாம் அதிசரணத்தில், ' சிவசமவாதம் மறுப்பு ' என்னும் தலைப்பின்கீழ், பன்னிரண்டாவது பத்தியில், சிவஞான சுவாமிகள்.

" ஆன்மா எதனை எதனைச் சார்ந்தான் அதனதன் சுபாவமே, தன் சுபாவமாய் அது அதுவாய் நிற்பன் என்றும், இங்ஙனம் ஆகலான், சிவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்புழிச் சிவன் குணங்கள் ஆகிய எண் குணங்களும் தன் தன்மையாகக் கொண்டு சிவனேயாய் நிற்பன் ; இதுவே சிவத்துவத்தைப் பெறுதல் என்றும், இதற்கு மேல் அறியற்பாலன ஒரு நூலிலும் இல்லை ! முக்காலும் சத்தியம் "

என்று அருளிச் செய்துள்ளார்கள். வழிபாட்டின் முடிந்த பயன், முத்தியே அன்றி வேறில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இனி முத்திநிலை எத்தகையது என்பதைக் குறித்துச் சற்றுச் சிந்திக்கலாம்.

முத்தி இயல்பு :

' வீடு பேறு ' எனப்படும் முத்திநிலையில், ஆன்மா சிவபெருமானோடு ஒன்றாகக் கலந்தாலும் அஃது அப்போது பேரானந்தத்தை அனுபவித்துக் கொண்டு இருப்பதால், அந்நிலையிலும் ஆன்மா உண்டு என்று கொள்வதே, சைவ சித்தாந்தக் கொள்கை.

அந்நிலையில், சிவம் வேறு – ஆன்மா வேறு என்ற நிலை இல்லை ; இரண்டும் இரண்டறக் கலந்து நிற்கும் ; இரண்டும், இருக்கும் ஆனால் இரண்டு என எண்ணும்படி இல்லாமல், ஒன்று என எண்ணும்படி இருக்கும்.

இவ்வுண்மையை,

*" இரண்டும் அற்றநிலை எது என்னில்*
*ஆதித்தன் - அந்தன் விழிக்குற்றம் அற*
*நின்றது போல் கொள் "* **48**

என்று ' உண்மை விளக்கம் ' தெளிவுறுத்துகின்றது.

" அந்தன் விழிக்குற்றம் அற நின்றது " என்றதால், ஆன்மா ஆணவமல மறைப்பு நீங்கப்பெற்று யான் – எனது என்ற இருவகைப்பற்றும் அற்றுச் சிவப்பற்று ஒன்றினை மட்டுமே கொண்டு சிவப்பேற்றில் நிற்கிறது என்பது பெறப்படும்.

முத்திநிலையில் ஆன்மா, சிவானுபவத்தை அனுபவித்துக் கொண்டு மட்டும் நிற்குமேயன்றி, சிவனுக்கு உரிய ஐந்தொழில் ஆற்றும் திறனைப் பெற்றிருக்காது.

இவ்வுண்மையை,

*" உம்பர் பிரான் உற்பத்தியாதிகளுக்கு உரியன் ;*
*உயிர் தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே "* 319

என்று சிவஞான சித்தியார் தெளிவுறுத்துகின்றது.

சைவ சித்தாந்தம், இத்தகையதொரு தெளிவான கொள்கையை அறுதியிட்டு உறுதி பெறக் கூறுவதற்குக் காரணம், மணிவாசகப் பெருந்தகை, திருவாசகத்தில் இக்கொள்கையைத் தெளிவுபட அருளிச் செய்திருப்பதே ஆகும். அவ்வருட் கொடை வருமாறு :

*" சித்தமலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட*
*அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"*
648

இப்பாடற்பகுதிக்குப் பொருள் வருமாறு :

என் உள்ளத்தில், சிவபெருமானின் அருட்பேரொளியை நிறைவித்து அதன் பயனாக, ஆணவமலப் பற்று முழுவதையும் நான் விடும்படியாகச் செய்து. மலப்பற்று நீங்கியதன் பயனாக, சிவமாம் தன்மையை அடியேன் அடையும் படியாகச் செய்தும் அத்தன்மையை அடைந்த அடியேனைப் பின்னும் தனது அடிமையாக வைத்து ஆண்டு, பேரின்பப் பேற்றினை அருளிச் செய்த என் ஆண்டான் ஆகிய சிவபெருமான், எனக்கு அருளிச் செய்திருப்பதைப் போல், வேறு யாரே பெறவல்லார் என்று வியப்புறுகின்றார்கள், பெருந்தகை.

*" சிவமாக்கி எனை ஆண்ட "*

என்று மணிவாசகப் பெருந்தகை திருவாய் மலர்ந்து அருளியிருப்பதால் முத்தியிலும் சிவபெருமான் ஆன்மாக்களை ஆள்கிறான் என்பது தெளிவாகிறது. முத்திநிலையிலும் சிவபெருமானால் ஆளப்படுவதால், ஆளப்படும் ஆன்மாக்கள் என்றும் அவனுக்கு அடிமை என்பது, தானே போதரும். திருவாசகத்தில் ' அடிமை ' என்ற சொல், தொண்ணூற்று ஏழு இடங்களில் இடம் பெறுகின்றது. ' ஆண்டான் ' என்ற சொல், எண்பத்தொரு இடங்களில் வருகின்றது.

மணிவாசகப் பெருந்தகை "எனை ஆண்ட" என்று முத்தி நிலையில் தமது அனுபவத்தைக் கூறியருள்வதால் ஆன்மாக்கள் பெத்தம் முத்தி இரண்டிலும் சிவனுக்கு அடிமையே என்பது தெளிவாக உணரப் படும்.

"சிவம் ஆக்கி எனை ஆண்ட" என்னும் சொற்றொடர் ஆட்சி பிறிதோர் இடத்திலும் வருகிறது. அப்பகுதி வருமாறு :

"*சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட*
*அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.*" *475*

'சிவம் ஆக்கி' என்னும் தொடர், மற்றும் ஓர் இடத்தில் வருகிறது; அப்பகுதி வருமாறு :

"*சித்தம் சிவம் ஆக்கி செய்தனவே தவம்ஆக்கும்*" *320*

'சிவம் ஆதல்' என்பது, ஆன்மா முத்தியில் "சிவமயம்" ஆவதையே குறிக்கும். 'சிவம் ஆதல்' வேறு; 'சிவமா யிருத்தல்' வேறு.

சைவசித்தாந்தத்தில், முத்தியில் ஆன்மா சிவம் ஆம் தன்மை பெற்றுச் சிவனுக்கு அடிமையாகவே இருக்கிறது என்பது கருத்தில் இருத்திவைக்கப் படவேண்டும்.

உ

சிவமயம்

# 2. சைவ சித்தாந்த நோக்கில் திருவாசகத் தலைப்புகள்

**தோற்றுவாய் :**

திருவாசகத்தில் ஐம்பத்துஒன்று தலைப்புகள் உள்ளன. அவற்றுள் முதல் நான்கும் அகவல்கள். ஐந்தாவது தலைப்பின்கீழ் 'திருச்சதகம்' உள்ளது. திருச்சதகத்தில், பத்து உள் - தலைப்புகள் உள்ளன. எஞ்சியுள்ள நாற்பத்து ஐந்து தலைப்புகளிலும் ஒவ்வொரு உள் - தலைப்புகள் உள்ளன.

இந்தத் தலைப்புகளும் உள் - தலைப்புகளும், அவற்றின் கீழ் உள்ள திருவாசகப் பாடல்களின் கருப்பொருளை, உள்ளடக்கி உள்ளனவாக அமைந்துள்ளன. எனவே, இத்தலைப்புகளுக்கும் உள் - தலைப்புகளுக்கும் சைவ சித்தாந்த நோக்கில் நுண் பொருள்களைச் சிந்திப்பது பயனுடையதாக இருக்கும்.

பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், "அவ்வப் பதிகத்தின் திரண்ட கருத்துக்களையும் கூர்ந்து ஆய்ந்து பண்டைப் பெரியார் ஒருவர், (இவ்வகைத்) தலைப்பு குறிப்பிட்டுள்ளார்" என்று தமது திருச்சதகம் உரையில் பக்கம் 2ல் கூறுகிறார்கள்.

எனவே, இத்தலைப்புகள் யாரால் செய்யப்பட்டன என்பது துல்லியமாக அறிவதற்கு இல்லை. ஆயினும், இவை பன்னெடுங் காலமாகத் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன ஆகலின், இவற்றிற்குப் பொருள் விளக்கம் காண்பது, பெரும்பயனை விளைவிக்கும் என்பதைக் கூறத்தேவையில்லை

## 1. சிவபுராணம்

(சிவனது அநாதி முறைமையான பழமை)

இஃது இரு மொழிகளால் ஆகிய ஓர் சொற்றொடர். 'சிவம்' என்னும் தமிழ்ச்சொல், 'புராணம்' என்னும் வடமொழிச்

சொல்லோடு புணர்ந்து வடமொழி இலக்கண முடிபாகச் 'சிவபுராணம்' என்றுயிற்று. புராணம் என்பது பழைமையைக் குறிக்கும். இப்பழைமை, காலத்திற்கு அப்பாற்பட்டது. எனவே, 'அநாதி முறைமையான பழைமை' எனப்பட்டது.

'அநாதி முறைமை' என்பது, தொடக்கமில் காலந்தொட்டு, சிவபெருமான் உயிர்களை உய்விக்கும் பொருட்டு, பேரருள் கொண்டு, ஐந்தொழில் ஆற்றி வருவதைக் குறிக்கும்.

சிவபுராணத்தில் "புல்லாகிப் பூடாகி" என்று வரும் அடிகள், உயிர்கள் பல்வேறு பிறவிகள் எடுக்கும் என்பதை மெய்ப்படுத்து கின்றன.

வழிபாட்டின்போது, இதனைப் பாராயணம் செய்வது, மரபாக இருந்து வருகிறது.

## 2, கீர்த்தித் திரு அகவல்

### (சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை)

திரு, கீர்த்தி, அகவல் என்னும் மூன்று சொற்களால் ஆகிய ஒரு சொற்றொடர், ஒலி இனிமைக்காகக் 'கீர்த்தித் திருவகவல்' என்று அமைக்கப்பட்டுள்ளது.

'கீர்த்தி' என்பது, சிவபெருமான் உயிர்கள் உய்யும் பொருட்டு, இடையறுது நிகழ்த்திவரும் அருட்செயல்களைப் புகழ்ந்து பாடுதலைக் குறிக்கும்.

'திரு' என்பது, தெய்வத் தன்மையைக் குறிக்கும்.

'அகவல்' என்பது, நான்குவகைப் பாக்களில் ஒன்று. இது நிலைமண்டில ஆசிரியப்பா. தொடக்கத்திலிருந்து முடிவுவரை, ஒவ்வொரு அடியும் நான்கு சீர்களோடு நடப்பது.

'திருவருட் புகழ்ச்சி' என்பது, தன் அருளாற்றலைக் கொண்டு சிவபெருமான் உயிர்களுக்காக எவ்வாறெல்லாம் உதவி செய்கிறன் என்பதைப் புகழ்ந்து உரைப்பதைக் குறிக்கும்.

முறைமை' என்பது, சைவ சித்தாந்த மரபுக்கு ஏற்ப அப்புகழுரைகள் முறைப்படுத்தப்பட்டு அமைந்துள்ளமையைக் குறிக்கும்.

இதில், பல சைவசித்தாந்த நுட்பங்கள் காணப்படுகின்றன. இதுவும் பாராயணத்திற்கு உரியது.

## 3. திரு அண்டப் பகுதி

### (சிவனது தூய சூக்குமத்தை வியந்தது)

'அண்டப் பகுதி' என்பது, அண்டத்தினது பகுதி என விரியும். 'அண்டம்' என்பது, பல உலகங்களும் புவனங்களும் அடங்கிய - அனைத்துக் கோளங்களைக் கொண்ட ஒரு பெருங் கோளத்தைக் குறிக்கும்.' 'பகுதி' என்பது பகுக்கப்பட்ட பல பிரிவுகளைக் குறிக்கும்,

'தூலம்' கண்ணால் காணும் பெரியனவும் சிறியனவும் ஆன பொருள்கள் ஆகும். 'சூக்குமம்' கண்ணால் காணமுடியாத சிறியனவும் பெரியனவும் ஆன பொருள்கள் ஆகும்.

உயிர்கள் உய்யும்பொருட்டுச் சிவபெருமான், படைத்தருளியுள்ள எண்ணற்ற பல பொருள்களின் அமைப்பை வியந்து பாராட்டுகிறது இப் பகுதி.

சிவபெருமானின் பெருமை குறித்து விரிவாக இப் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

## 4. போற்றித் திரு அகவல்

### (சகத்தின் உற்பத்தி)

இந்த அகவலில் 'போற்றி, போற்றி' என்று வணக்கத்தைக் குறிக்கும் சொல் மிகுதியாக வருவதால், இது 'போற்றித் திருவகவல்' எனப்படுகிறது.

இந்த உலகத்தில், உயிர்கள் எவ்வாறு உடம்புகளோடு தோன்றுகின்றன என்பது இதில் பலவாறுகப் பேசப்படுவதால், இது 'சகத்தின் உற்பத்தி' எனப்பட்டது.

# 5. திருச்சதகம்

## ( பத்தி வைராக்கிய விசித்திரம் )

'சதகம்' என்ற வடமொழிச் சொல், 'நூறு' என்று பொருள் படும். 'திருச்சதகம்' என்பது, அருள் விளங்கும் நூறு பாடல்களைக் கொண்ட பிரபந்தத்தைக் குறிக்கும். சதகம், தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும்.

பத்தி + வைராக்கியம் + விசித்திரம் என்னும் மூன்று வட மொழிச் சொற்களின் கூட்டுத் தொடர், 'பத்திவைராக்கிய விசித்திரம்' ஆகும்.

'பத்தி' என்பது, சிவபெருமானிடத்து, மக்கள் வைக்கும் பேரன்பைக் குறிக்கும்.

'வைராக்கியம்' என்பது, நிலையில்லாத உலக வாழ்க்கையில் பற்றின்மையால் ஏற்படும் வெறுப்டைக் குறிக்கும்.

'விசித்திரம்' என்பது, மக்கள் சிவபெருமானிடத்துக் கொள்ளும் அன்பு காரணமாக, அவர்களிடம் விளங்குகிற பலவகை அருட் குணங்களை உணர்த்தும்.

ஆகவே 'பத்திவைராக்கிய விசித்திரம்' என்னும் சொற்றொடர்க்கு

'பக்குவப்பட்ட அடியார்களால்' சிவபெருமானிடத்து வைக்கப் பட்டுள்ள மெய்யன்பு காரணமாக, அவர்களுக்கு உலக இன்பங்களில் உண்டாகும் வெறுப்புபற்றி, அவ்வடியவர்களிடம் விளங்குகின்ற பலவகையான அருட்குணங்கள் என்பது பொருளாகும். அருட் குணத்தை, அருளனுபவம் என்றும் கூறுவர்.

இந்த அருட்குணங்கள், "மெய்யுணர்தல்" முதல் "ஆனந்தாதீதம்" ஈறாகப் பத்துவகைகளில், 'திருச்சதகம்' என்னும் தலைப்பின்கீழ் கூறப்பட்டிருக்கின்றன.

முதலாவது அருட்குணம் ஆகிய 'மெய்யுணர்தல்' பற்றிக் காண்போம்.

### 1. மெய்யுணர்தல் :

'மெய்உணர்தல்' என்னும் தமிழ்ச் சொற்றொடர், மெய்யை உணர்தல் என விரியும். 'மெய்' என்பது, மெய்ப்பொருள்கள் ஆகிய

இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களுள், இறைவன் ஒருவனே பற்றல் ஆவதோர் பற்று இல்லாப் பரம்பொருள் ஆகலின், அப்பரம்பொருள் ஆகிய சிவபெருமானைக் குறிக்கும்.

'உணர்தல்' என்பது, 'அழுந்தி அறிதல்' ஆகிய உயிரின் பேரின்ப அனுபவத்தைக் குறிக்கும். இன்னும், பசுகரணங்கள் எல்லாம் பதிகரணமாக மாறப்பெற்ற ஒருவரது உள்ளத்தின்கண், சிவபரம்பொருளை அழுந்தியறியும் பேரின்ப அனுபவத்தன்மையை உணர்த்தும் என்றலுமாம்.

சீவன் முத்தர் நிலையை அடைந்த அடியார்களுக்கு, ஒரோ வழி பிராரத்துவ வினையாகிய மலவாசனை தாக்கும் பொழுது மெய்யுணர்வினிருந்து நழுவாமல், நிலைபெறுதற்கு வேண்டப்படும் வழிகளைப், பெருந்தகை இத்தலைப்பின்கீழ் வரும் பாடல்களில் கூறியருள்கின்றார்கள். அவர்களுக்குக் கூறும் அறிவுரைகளைத் தம்மேல் ஏற்றி அடிகள் அருளியிருப்பது, அவர்களது பெருந்தகைமையைக் காட்டுகின்றது.

வீடுபேற்றில் அவாவுடைய நம்மனோர்க்கும், இப்பாடல்களில் உள்ள வாசகங்கள் அறிவுறுக்கும் அருளுரைகளாக அமைந்துள்ளன.

திருச்சதகத்தின் முதற்பாட்டில் "மெய்தான் அரும்பி" எனத் தொடங்கி, நூறுவது பாடலில், "மெய்யர் மெய்யனே" என்று நிறைவு செய்தருளியுள்ளார். இப்பாடல்களை அந்தாதி முறையில் அமைத்தருளியுள்ளார்கள்.

## 2. அறிவுறுத்தல் :

மேற் குறிப்பிட்டவாறு, மெய்யுணர்விலிருந்து பிராரத்துவ மல வாசனை தாக்காமல் இருக்கும் பொருட்டு, சிவபெருமானுக்கு முறையீடு செய்வதே, அறிவுறுத்தல் எனப்படும்.

அறிவித்தல் வேறு; அறிவுறுத்தல் வேறு 'அறிவித்தல்' என்பது பிறரை அறியச் செய்தல் ஆகும். 'அறிவுறுத்தல்' என்பது அறிவு பயிற்றல் ஆகும்; அஃதாவது தன் நிலைமையை எடுத்துரைத்தல். (பார்க்க: நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழி அகராதி பக்கம் 949)

3, சுட்டறுத்தல் :

'சுட்டறுத்தல்' என்பது இது குடம், இது படம் என்று உலகப் பொருள்களைப் பகுத்தும் சுட்டியும், கருவி கரணங்களால் அறியும் ஒருபுடை அறிவை ஒழித்தலைக் குறிக்கும்.

இங்ஙனம் சுட்டி அறிவதால், உலகம் காட்சிப்பட்டு, மயக்க அறிவு தோன்றிப் பிறவிக்கு வித்தாகும். அதன் பயனாகச் சிவக் காட்சி மறைந்து விடும். எனவே, சுட்டியறியும் அறிவை அறுக்க வேண்டி விண்ணப்பம் செய்கின்றார்.

4. ஆத்தும சுத்தி :

ஆத்தும சுத்தி என்பது, ஆன்மாவினது சுத்தி எனப்படும்: இது தத்துவரூபம் முதல் சிவபோகம் ஈறாக உள்ள தசகாரியங்களில் ஆறாவது நிலையில் வைத்து, சாத்திரங்களில் பேசப்படுகின்றது.

ஆன்ம சுத்தியாவது, ஆன்மா தூய்மை அடைதல் ஆகும். தூய்மை அடைதல் ஆவது, ஆன்மா, யான் - எனது, என்னும் உலகப் பற்றில் அழுந்தாமல், அருள் வயப்பட்டுச் சிவக்காட்சியில் நிலைத்து நிற்றல் ஆகும்.

5. கைம்மாறு கொடுத்தல் :

சிவபெருமான், திருப்பெருந்துறையில் குருவாக வந்து, தமக்குச் சிவபோதம் தந்து, பேரின்பம் அளித்த பேருதவியை நினைந்து, அவ்வுதவிக்குக் கைம்மாறாகத் தமது சீவபோதத்தைக் கொடுத்தல், கைம்மாறு கொடுத்தல் ஆகும்.

6. அநுபோக சுத்தி :

'அநுபோகம்' என்பது சிவானுபவம். அஃதாவது, ஆன்மா சிவத்தோடு இரண்டறக் கலந்ததனால் நுகரும் இன்ப நுகர்வு.

'அநுபோக சுத்தி' என்பது, இத்தகு இன்பம் நுகர்வில் நிகழும் தூய்மையின்மையை நீக்குதல். அத் தூய்மையின்மையாவது, அருளோடு சிவத்தில் ஒடுங்காமல் இருத்தல்.

அருளாகிய தாயுடன் சென்று, பின் தந்தையைக் கூடுதலே, சிவத்தோடு இரண்டறக் கலந்து நிற்றல் ஆகும். அவ்வாறு சிவத்தோடு நிலைத்து நின்றால் அன்றி, சிவானுபவம் சித்திக்காது. சிவானுபவமே அநுபோக சுத்தி எனப்படும்.

7. காருணியத்திரங்கல் :

'காருணியத்திரங்கல்' என்னும் தொடர், காருணியம், இரங்கல் என்னும் இரண்டு சொற்களால் ஆகியது.

'காருணியத்து இரங்கல்' என்பது, சிவபெருமான் அருட்சத்தியோடு இயைந்து நின்று, இடையறாது உயிர்களுக்குச் செய்து வரும் பேரருட் செயலை உணர்ந்து, மனம் உருகிச் சிவபெருமானிடத்து அன்பு மீதூர்தலைக் குறிக்கும். ஆகக் 'காருண்யத்து' என்பது சிவபெருமானின் அருளிப்பாடுகளை நினைந்து என்பதாகும். 'இரங்கல்' என்பது, சிவபெருமானிடத்து நன்றியுணர்வுடன் மிகுந்த அன்பைச் செலுத்துவது ஆகும்.

8. ஆனந்தத்தழுந்தல் :

ஆனந்தத்தில் அழுந்துதல். ஆனந்தம் – பேரின்பம். 'அழுந்தல்' என்பது, சிவபெருமானின் திருவருளை அன்றி, வேறொன்றையும் நோக்காது பேரின்ப நுகர்வில் தோய்ந்து நிற்றலைக் குறிக்கும்.

சீவன் முத்தர்கள், இப்பேரின்ப நுகர்விலிருந்து நழுவாது இருத்தல் வேண்டும் என்பதை இத்தலைப்பின்கீழ் வரும் திருவாசகப் பாடல்கள் உணர்த்துகின்றன.

இவ்வுணர்வில் நிற்போருக்கு ஆனந்தக் கண்ணீர் சொரியும்.

9. ஆனந்தபரவசம்

'ஆனந்தம்' என்பது பேரின்பம். 'பரவசம்' என்பது பேரின்ப நுகர்வின்போது உயிர், தன்வயம் இழந்து நிற்றல் ஆகும்.

சீவன் முத்தர்கள், இவ்வாறு ஆனந்த பரவசத்தில் நிலைத்து இருக்கும்போது, அவர்கட்கு, ஒரோவழி தாக்கும் பிராரத்துவ வினை - மல வாசனை தாக்காது இருக்கும் என்றவாறு.

10. ஆனந்தாதீதம்

ஆனந்தம் – பேரின்பம்.

அதீதம் – கடந்த நிலை.

பேரின்பப் பெருநிலையில், உயிர்க்குக் காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்னும் பாகுபாட்டு உணர்வு இருக்காது. எனவே, இப் பாகுபாட்டுணர்வு கடந்த நிலையே, ஆனந்தாதீதம் ஆகும்.

திருச்சதகத்தில் உள்ள இப் பத்துத் தலைப்புக்களின் கீழ்வரும் திருவாசகப் பாட்டுக்களைக் கூர்ந்து நோக்கினால், அப் பாட்டுக்களில் உள்ள கருத்துக்கள், தலைப்பினை விளக்குவனவாக அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு, ஒவ்வொரு தலைப்பின்கீழ் வரும் பாடல்களையும் நோக்கலாம்.

## 6. நீத்தல் விண்ணப்பம்

### ( பிரபஞ்ச வைராக்கியம் )

நீத்தல் – விடுதல், விண்ணப்பம் – முறையீடு. சிவபெருமான், திருப்பெருந்துறைக்கு வந்து மணிவாசகப் பெருந்தகையை ஆண்டருளியபோது, அவர்களைச் சிலகாலம் இவ்வுலகில் இருந்து பின்பு தன்னை வந்து சேரும்படி, நிறுத்திவிட்டு, அடியார்கள் சிலரோடு கயிலாயத்திற்கு எழுந்தருளினன். இறைவன் அவ்வாறு தம்மை விட்டுச் சென்றது பற்றி, உள்ளம் வருந்தி, பெருந்தகை இறைவனுக்குச் செய்யும் முறையீடு, 'நீத்தல் விண்ணப்பம்' ஆகும், ஐம்பது பாடல்களால் அமைந்த இப்பதிகமும் அந்தாதித் தொடை அமைப்பில் பாடியருளப்பெற்றுள்ளது. 'கடையவன்' எனத் தொடங்கி, 'கடையவன்' என்று முடிகிறது.

'கடையவன்' என்பது, நின் திருவடிகளைச் சார்தற்குக் கீழ்ப்பட்டவன் ஆகிய அடியேன் என்னும் பொருளைத் தரும்.

பிரபஞ்சம் - உலகம், வைராக்கியம் - வெறுப்பு. நிலையில்லாத உலக வாழ்க்கையை வெறுத்து, இறைவன் திருவடியினை நினைந்து அருளிச் செய்யப்பட்டதால், இது "பிரபஞ்ச வைராக்கியம்" எனப்பட்டது.

இப்பகுதியில் வரும் ஐம்பது பாடல்களிலும் 'விடுதி கண்டாய்' 'விட்டிடுதி கண்டாய்' என்னும் சொல்லாட்சி வருகின்றது. 'விடுதி' 'விட்டிடுதி' என்னும் இரண்டும் ஒரே பொருளைத் தரும் இரு சொற்கள். இவ்விரு சொற்களிலும் வரும் 'இ' என்னும் ஈற்றெழுத்து முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி. 'த்' என்பது எழுத்துப் பேறு ( தொல் – சொல் – சூத் – 223 )

'விடுதி; விட்டிடுதி' முன்னிலை எதிர்கால வினாவினை; 'கைவிட்டு விடுவாயோ' என்னும் பொருளைத் தருவது. கைவிட்டு விடாதே என்னும் ஏக்கக்குறிப்பில் எழுப்பப்பட்ட வினா. கண்டாய் முன்னிலை அசை.

மகாவித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்,

" விட்டிடுதி கண்டாய் என்பது 'விட்டு விடுகிறாய் பார்' என்பது போன்ற ஒரு வகை வழக்கு "

என்று உரைவரைந்துள்ளார்கள்.

இந்த உரையைவிட

" திருப்பெருந்துறையில் என்னை விட்டுச் சென்ற நீ, ஒரேயடியாக விட்டு விடுவாயோ? அப்படி விட்டுவிடாதே " என்று ஏக்கக் குறிப்புடன் கூறுவதாகக் கொள்ளும் சிந்துபூந்துறை, மா. வே, நெல்லையப்பபிள்ளை அவர்கள் உரையே பொருத்தமாக இருக்கிறது.

## 7. திருவெம்பாவை

### ( சத்தியை வியந்தது )

இருபது பாட்டுக்களை உடையது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் 'எம்பாவாய்' என்று முடிவதால் " திரு எம் பாவை " என்னும் பெயரால் குறிக்கப்படுகிறது.

திரு = அருள். எம் = எங்கள். பாவை = சித்திரப் பதுமை போன்ற பெண். 'பாவை' என்ற சொல் 'ஆய்' என்ற விளி உருபு ஏற்று, 'பாவாய்' என்ற விளிப்பெயர் ஆயிற்று.

சிவபெருமானின் அருட்சிறப்பைக் கூறும் நம்முடைய சைவப் பெண்களின் உணர்வுகளைக் குறித்துப் பாடும் பாடல்கள் ஆகலின், இது 'திருவெம்பாவை' என்னும் பெயரைப் பெற்றது.

மார்கழி மாதத்து விடியற்காலப் பொழுதில் கன்னிப் பெண்கள், ஒவ்வொரு தோழியின் வீட்டுக்கும் சென்று, சிவபெருமானின் புகழைப் பாடிப் பரவி துயில் நீங்கி எழச் செய்வதாக அமைந்துள்ள அருமையான பதிகம்

அம்பலவாணன் சிறப்பாகத் திருநடனம் செய்யும் மார்கழி மாதத்துத் திருவாதிரைக்கு முந்திய ஒன்பது நாட்களிலும் திருவாதிரை அன்றும் ஆகப் பத்து நாட்கள், சைவர்கள் அனைவராலும் தனிச்சிறப்புடன் இன்றும் இத்திருவெம்பாவைப்

பதிகம் படனம் செய்யப்படுகிறது. இப் பத்து நாட்களிலும், மற்றைத் திருமுறைகளுக்குத் திருக்காப்பு இட்டு வைக்கும் வழக்கமும் இருந்துவருகிறது.

இந்த வழக்கம் எப்போது தொடங்கியது? ஏன் ஏற்பட்டது? என்பதற்கான ஆதாரம் எந்த நூலிலும் இல்லை. திருவெம்பாவைப் பாடல்களை மார்கழித் திருவாதிரைத் திருநாள் தவிர மற்றைக் காலங்களில் பாடக் கூடாது என்னும் விதியிருப்பதாகவும் தெரியவில்லை. எனவே, திருவெம்பாவைக்குச் சிறப்பு வழங்க வேண்டும் என்னும் நோக்கத்தில் இவ்வழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதும்படியாக இருக்கிறது.

திருவெம்பாவையில் வரும் இளம் பெண்கள், நாட்டில் மழை பெய்து நாடு செழிப்புற இருக்க வேண்டும் என்னும் பொது வேண்டுகோளையும், சிவனடியார்களையே கணவன்மார்களாகப் பெற வேண்டும் என்னும் சிறப்பு வேண்டுகோளையும் பல பாடல்களில் சிவபெருமானிடத்து விண்ணப்பிக்கிறார்கள். அவர்கள், நீர் நிலைகளில் விளையாடும் பகுதிகள் மிகுதியாக இப்பதிகத்தில் காணப்படுவதால், இதனை மகளிரின் நீர் விளையாட்டுப் பாட்டு என்று கூறலாம்.

திருவெம்பாவைக்குச் 'சத்தியை வியந்தது'' என்னும் கருத்துரையை முன்னோர் வழங்கியுள்ளனர். இக்கருத்துரைக்குப் பொருள் விளக்கம் செய்த உரையாசிரியர்கள், ஒன்பது சத்திகளை வரிசைப்படுத்தி, ஒரு சத்தி மற்றொரு சத்தியை எழுப்புவதாக அமைத்துள்ளனர். இந்த சத்திகள் ஒருவரை மற்றொருவர் துயிலெழுப்பிய பிறகு என்ன செய்கிறார்கள் என்பதற்கான விளக்கம் அவ்வுரைகளில், காணப்படவில்லை.

மணிவாசகப் பெருந்தகை பேசும் மகளிர், விடியற்காலையில் துயிலெழுந்து நீராடி, நீறாடி, இறைவனிடம் தங்களுக்குச் சிவனடியாரே கணவன்மார்களாக வந்து அமைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுகின்றனர். எனவே, ஒன்பது சத்திகளைப் பற்றிய விளக்கம், தெளிவு பெற வேண்டியதாகவே உள்ளது.

அவ்வாறயின், "சத்தியை வியந்தது'' என்று திருவெம்பாவைக்குக் கருத்துரை வழங்கியதற்கு என்ன பொருள் என்னும் வினா எழும்.

அதற்கு விடை வருமாறு,

மூவர் அருளிய தேவாரங்கள் ஆகிய ஏழுதிருமுறைகளிலும், திருவாசகம் நீத்தல் விண்ணப்பம் வரையிலும், ஒரு பாடல் கூட சத்தியை வியந்து பாடும் நிலையில் அமையவில்லை. அம்மையைப் பாடும்போதும் அப்பனுடன் இணைத்துப் பாடியருளிய பாடல்களையே காண்கிறோம்.

திருவெம்பாவையில் தான் முதன் முதலாக சத்தியை வியந்து பாடும் பகுதி வருகிறது. அது வருமாறு.

> "பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளைதன்
> பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்" 14

இதன் பொருள் வருமாறு :

சிவபெருமானின் அருட்சத்தியே, திரோதான சத்தியாய் நின்று நம்மை மந்ததரம், மந்தம், தீவிரம் தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்தி நிபாதநிலையில் வைத்து, வேறுபடுத்திப் படிப்படியாக வளர்த்து, பின்னர் சிவபெருமானோடு நம்மைக் கூட்டுவிக்கிறது. அவ்வாறு பல்வேறு வகைப்பட்ட அருளிப்பாடுகளை அருட்சத்தி நமக்கு வழங்குவதால் அச்சத்தியைப் "பெய்வளை" என்றார். ( பெய்வளை = பெண் ).

இந்த ஓர் அரிய பாடலில் திருவருளைப் புகழ்ந்து பெருந்தகை முதன்முதலாக ( For the first time ) அருளிச் செய்தமையால் இப்பதிகத்திற்கு "சத்தியை வியந்தது" என்னும் கருத்துரை அமைந்தது என்று கூறுவதே பொருத்தம் உடையதாக இருக்கிறது.

திருவெம்பாவையில் வரும் "ஏலோர்" என்னும் தொடர் "ஏல்" "ஓர்" என்னும் இரு சொற்களால் ஆகிய சொற்றொடர் ஆகும். ஏல் = ஏற்றுக்கொள்; ஓர் = ஆய்ந்து பார். அஃதாவது கேட்டல் சிந்தித்தல் ஆகிய இரு தவங்களைக் குறித்து இவை அமைதுள்ளன.

## 8. திருவம்மானை

### ( ஆனந்தக் களிப்பு )

'அம்மானை' என்பது, பெண்கள் சிலர் சேர்ந்து கொண்டு, வெண்கலம், வெள்ளி முதலியவற்றால் செய்யப்பட்ட மூன்று உருண்டைகளை ஒருத்தி வைத்துக் கொண்டு, இரண்டு கைகளிலும்

ஒவ்வொரு உருண்டை இருக்க ஒன்று மேலே எறியப்பட்டுக் கீழே மாறிமாறி வந்து கொண்டு இருக்கும்படி விளையாடும் விளையாட்டினைக் குறிக்கும். இதனை அம்மனை விளையாட்டு என்றும் கூறுவர் இவ்விளையாட்டைப் பெண்கள், பாடிக்கொண்டே ஆடுவர்.

'பாடுதும் காண் அம்மானாய்' என்று பாடல் தோறும் வருவதிலிருந்து இவ்வுண்மையை அறியலாம். இப்பதிகத்தில் சிவ பெருமானின் பெருமைகள் பலவற்றைப் பெருந்தகை பாடியருளியுள் ளார்கள்.

'ஆனந்தக் களிப்பு' என்பது, சிவபெருமான் தமக்கு அருளும் பேரின்பத்தை நுகர்தலினாலே பெருந்தகை மகிழ்ச்சி மீதூர்ந்து நிற்றலைக் குறிக்கும்.

*"வாரா வழியருளி வந்து என் உளம் புகுந்த*
*ஆரா அமுதாய்"*

என்று பெருந்தகை அருளிச் செய்திருப்பது ஆனந்தக்களிப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## 9. திருப்பொற்சுண்ணம்

### (ஆனந்த மனோலயம்)

திரு + பொன் + சுண்ணம் = திருப்பொற்சுண்ணம். 'பொன்' என்பது, பொன்னிறம் போன்றுள்ள மஞ்சளைக் குறிக்கிறது; 'சுண்ணம்' என்பது பொடி. ஆக, பொற்சுண்ணம் என்பது, திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானுடைய திருமுழுக்குக்காக, மஞ்சளுடன் பல்வகை நறுமணப் பொருள்களைச் சேர்த்து, மங்கலப் பெண்களால் இடித்துப் பொடியாகச் செய்யப்படும் கலவைப்பொடி'யைக் குறிக்கும்.

மாயையின் வடிவாகிய தனு கரண புவன போகங்களைப் பொடி செய்து, மலப்பிணிப்பு நீங்கிச் சிவபெருமானுக்கு ஆளாம் தன்மையை அடைதல், இதனால் பெறப்படும் ஞானப் பொருள் ஆகும்.

ஆனந்தம் + மனம் + இலயம் = ஆனந்த மனோலயம்.

ஆனந்தம் = பேரின்ப நுகர்வு.

'மனோலயம்' என்பது, உயிரினது மலப்பிணிப்பு முற்றும் நீங்கித் தன்முனைப்பு கெட்டு, இறைவன் திருவடி நிறைவில் ஒடுங்குதல் ஆகும்.

இந்த மங்கலப் பொடியை இடிக்கும்போது இறைவன் பெருமைகளைப் பாடிக்கொண்டே மகளிர் இடிப்பதனால், "ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே" என்று பெருந்தகை அருளிச்செய்துள்ளார்கள்.

## 10. திருக்கோத்தும்பி

### ( சிவனோடைக்கியம் )

கோ + தும்பி = கோத்தும்பி.

கோ = தலைமை ; தும்பி = வண்டு. ஆக, 'கோத்தும்பி' என்பது, அரச வண்டு என்று பொருள்படும். வண்டு என்பது, இங்கு உருவகமாய் மாந்தரின் மனத்தைக் குறிக்கிறது. வண்டு, பூக்கள் தோறும் சென்று சென்று, தினையளவு தேனை நுகர்தல் போல, மனிதர்கள் உலக இன்பத்தைப் பெரிதெனக் கொண்டு, தங்கள் மனம் ஐம்பொறிகளோடு உலகில் உள்ள பல நுகர்வுப் பொருள்களிலும் சென்று சென்று, சிறிதளவே இன்பம் நுகர்ந்து வருகின்றனர். அதன் பயனாக இன்ப அமைதி பெறுமலிருத்தலால், மனிதரின் மனம், வண்டாக உருவகம் செய்யப்பட்டது.

சிறிதளவே இன்பம் கிட்டும் உலகப் பொருள்களை விட்டு, என்றும் நிலையான பேரின்பம் வழங்கும் இறைவனுடைய திருவடிகளையே நினையாமல் நினைந்து, தெவிட்டாத பேரின்பம் பெறும்படி, மனிதர்கட்குப் பெருந்தகை இப்பதிகத்தில் அறிவித்தருள்கிறார்கள்.

'சிவனோடு ஐக்கியம்' என்பது உயிர் சிவபெருமானோடு இரண்டறக் கலந்து, தான் எனச் சிவன் என வேற்றுமை இன்றி, ஒற்றுமைப்பட்டு நிற்கும் நிலை ஆகும். அந்நிலை, இங்குச் சிவானுபவத்தைக் குறிக்கும். "சென்று ஊதாய்" என்பது, உயிரின் வேட்கை, சிவபெருமான்மீதே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

## 11. திருத் தெள்ளேணம்

### ( சிவனோடடைவு )

'தெள்ளேணம்' என்பது, தமிழ் மகளிர் சிலர் சேர்ந்து கொண்டு, மகிழ்ச்சியினாலே கை கொட்டிப் பாடி ஆடுவதோர் விளையாட்டு ஆகும்.

'சிவனோடு அடைவு' என்பது, தன்னை நினைந்து உருகும் உயிர்கள் தமக்கு இன்பம் தரும் சிவபெருமானோடு கலந்து நிற்றலைக் குறிக்கும்.

இவ்வாறு கலந்து நிற்கும்போது, அனைத்துப் பற்றுக்களும் நீங்கி, சிவபெருமானோடு ஒற்றித்து நிற்கும் பேரின்ப நுகர்வு தோன்றுவதைப் பதிகம் முழுவதும் பெருந்தகை கூறியருள் கின்றார்கள்.

## 12. திருச்சாழல்

### ( சிவனுடைய காருணியம் )

'சாழல்' என்பது, சிறுமகளிர் சிலர் கைகோர்த்துச் சேர்ந்து விளையாடும் பண்டைக் காலத்து மகளிர் விளையாட்டு. இப்பதிகம் பாடப்படுவதற்கு ஏற்பட்ட சூழ்நிலை பற்றிய வரலாறு ஒன்று உண்டு அது வருமாறு :

மாணிக்கவாசகப் பெருந்தகை வாழ்ந்த காலத்தில், ஈழத்தை ஆண்டு வந்த புத்த மன்னன் ஒருவன், புத்தமத குருவுடன் புத்தர்கள் பலர் புடைசூழத் தில்லைக்கோயிலுக்கு வந்தான். புத்தகுரு தில்லைவாழ் அந்தணர்களை நோக்கி ' நாங்கள் உங்களோடு வாது செய்து, சைவ சமயத்தை ஒழித்துப் புத்த மதத்தை நிலைநாட்ட வந்திருக்கிறோம் ' என்று அறிவித்தான். அதுகேட்ட அந்தணர்கள், அம்பலவாணனிடம் முறையிட்டார்கள். அன்றிரவு அவர்கள் கனவில் கூத்தப்பிரான் தோன்றி ' ஊருக்கு வெளியே பன்னக சாலையில் தவம் செய்து கொண்டிருக்கும் மாணிக்கவாசகரிடம் சென்று இதனைக் கூறினால், அவர் புத்தர்களை வாதில்வெல்வார் ' என்று கூறியருளினான். அந்தணர் களும் அவ்வாறே செய்தனர்.

மாணிக்கவாசகப் பெருந்தகை, புத்தர்கள் இருக்கும் இடத்தை அடைந்தார்கள்; அப்போது சோழமன்னனும் ஊர்மக்கள்

அனைவரும் அங்கு இருந்தனர். வாதம் நிகழ்ந்தது. மூன்றுக்குப்பின் முரணகப் பிடிவாதமாகப் புத்தர்கள் வாதிட்டனர். அவர்களது கொட்டத்தை ஒடுக்கும் பொருட்டு, புத்தமன்னன் நீங்கலாக, மற்றவர்கள் அனைவரும் ஊமைகளாகும்படி பெருந்தகை இறைவனை வேண்டினார்கள். அவ்வாறே அவர்கள் அனைவரும் ஊமைகளாயினர்.

புத்த மன்னனுக்கு ஏற்கனவே பிறப்பிலேயே ஊமையாகப் பிறந்த ஊமைப் பெண் ஒருத்தி இருந்தாள். அந்த மன்னன் அவளையும் அங்கு அழைத்து வந்திருந்தான்.

புத்தமத குரு உட்பட அனைத்துப் புத்தர்களும் ஊமையாகி விட்டதைக் கண்ட, புத்தமன்னன் மணிவாசகப் பெருந்தகையை வணங்கி,

'பிறவியிலேயே ஊமையாயிருக்கும் என் பெண்ணைத் தாங்கள் பேசும்படி செய்து விடுவீர்களாயின், நாங்கள் எல்லோரும் சைவர்கள் ஆவோம்' என்று கூறினான்.

அப்பெண்ணைப் பேசும்படி செய்வதற்காக மணிவாசகப் பெருந்தகை இந்தத் திருச்சாழல் பதிகத்தை அருளிச் செய்தார்கள். இப்பதிகத்திலுள்ள இருபது பாட்டுக்களிலும், முன் இரண்டு அடிகளில்,புத்தர்கள் வினவிய வினாக்களை 'அமைத்து' அப்பெண்ணைப் பார்த்து, பெருந்தகை வினவ, அந்த ஊமைப் பெண் அதற்கு விடை கூறுவதாகப் பின் இரண்டு அடிகள் அமைந்தன. இவ்வாறு அந்தப் பெண் பேசியதைக் கண்டு, ஈழத்துப் புத்தகுரு உட்பட அனைவரும் ஊமை நீங்கப் பெற்றுச் சைவ சமயம் சார்ந்தனர்.

இன்றும், வாய்ப்பேச்சு குளறுபவர்களும், திக்குவாய் உடையவர்களும், பேச்சாற்றல் சிறப்பாக அமைய விரும்புபவர்களும் இந்தத் திருச்சாழலைப் படனம் செய்து, பயனடைந்து வருகிறார்கள்.

இதன்கண், சைவ சித்தாந்தத் தத்துவ விளக்கம் தெளிவாக அமைந்துள்ளது.

'சிவனுடைய காருணியம்' என்பது, சிவபெருமானுடைய பேரருட் செயல் ஆகும். திருச்சாழல் பதிகத்தில், சிவபெருமானின் கருணைமிக்க பல செயல்கள் பேசப்படுவதால், இதற்குச் 'சிவனுடைய காருணியம்' என்னும் கருத்து அமையலாயிற்று.

## 13. திருப்பூவல்லி

### ( மாயாவிசயம் நீங்குதல் )

பூ + அல்லி = பூவல்லி, அல்லி என்பது, பூவின் உள் இருக்கும் அக இதழினைக் குறிக்கும். அக இதழை உடைய 'அல்லிப்பூ' என்பதையே, இனிமை நோக்கி, பூவல்லி' எனப்பட்டது. மகளிர் அல்லிமலர்த் தோட்டத்திற்குச் சென்று, மலர் பறிக்கும் போது சிவபிரான் புகழைப் பாடிக்கொண்டே, பூப்பறிப்பதாக அமைந்தது இப் பதிகம்.

மாயை + விசயம் + நீங்குதல் - மாயா விசயம் நீங்குதல். மாயையின் காரியங்கள் ஆகிய தனு கரண புவன போகங்களை 'மாயை' என்னும் சொல் குறிக்கிறது. 'விசயம்' என்பது, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புல நுகர்வுகளைக் குறிக்கும். நீங்குதல் - ஒழிதல்.

சகலநிலையில் உள்ள நாம், மாயா காரியங்களைப் புலன் நுகர்வால் அனுபவித்து வருவதை நீக்க வேண்டுமாயின் சிவபெருமானின் பெருமையைப் பாடிப்பரவ வேண்டும் என்னும் கருத்தினை அமைத்துப் பாடப்பெற்றதால், 'மாயா விசயம் நீங்குதல்' எனப்பட்டது.

## 14. திருவுந்தியார்

### ( ஞானவெற்றி )

திரு + உந்தி + ஆர் = திருவுந்தியார். பதிகம் முழுவதும் "உந்தீபற" என்று வருகிறது. எனவே, இஃது "உந்திபறத்தல்" என்னும் விளையாட்டு வகையைச் சேர்ந்தது. 'ஆர்' என்பது விளையாட்டின் சிறப்பைக் குறிக்கும்.

மகளிர் சிலர் கூடி, கைகள் இரண்டையும் மேலே தூக்கி இரு பக்கமும் நீட்டி, வானில் பறப்பது போல், இரு கால்களையும் சேர்த்துப் பெருவிரல் நுனியில் நின்று கொண்டு பாடி ஆடும் ஓர் ஆட்டவகை, திருவுந்தியார்' ஆகும்.

மும்மல காரியம் ஆகிய முப்புரங்களும் இறைவனது பேராற்றலினுல் அழிந்தமையும், தக்கன் யாகம் ஒழிந்தமையும், அதனுல் சூரியன், இந்திரன் முதலிய தேவர்களின் அகங்காரம் ஒடுங்கியமையும் அறிவிக்கப்படுதலின் 'ஞானவெற்றி' ஆயிற்று.

இறைவனின் 'ஞானவெற்றி'யைப் பேசும் இப்பதிகத்தைப் படனம் செய்யும் போது, மும்மலப்பிணிப்பும் நம்மை விட்டு அகல, அவற்றை நாம் வெல்ல முடியும். வழக்குகளில் வெற்றிபெற விழைபவர்கள், இப்பதிகத்தை இடைவிடாது படனம் செய்து, பயனடைந்துள்ளனர்.

## 15. திருத்தோணோக்கம்

### ( பிரபஞ்ச சுத்தி )

தோள் + நோக்கம் = தோணோக்கம் மகளிர் சிலர் சேர்ந்து, ஒருவர் தோளை மற்றொருவர் பார்த்துக் கொண்டு, பொத்திய கை கொட்டி விளையாடுவது, 'தோணோக்கம்' என்னும் மகளிர் விளையாட்டு ஆகும்.

பிரபஞ்சம் + சுத்தி = பிரபஞ்சசுத்தி. 'பிரபஞ்சம்' என்பது உயிரற்ற சட உலகத்தையும் உயிர்களுக்குள்ள உடல் ஆகிய உலகத்தையும் குறிக்கும். 'சுத்தி' என்பது, தூய்மை அடைதல்.

'பிரபஞ்ச சுத்தி' என்பது, இறைவன் உயிர்களின் மீது வைத்துள்ள பெருங்கருணை காரணமாக, இவ்விருவகை உலகங்களிலும் அத்துவிதமாய்க் கலந்து நிற்பதை எண்ண எண்ண, உயிர்கள் மும்மல நீக்கம் பெற்றுத் தூய்மை அடையும் என்பதைக் குறிக்கும். இதனையே 'பிரபஞ்சசுத்தி' என்னும் கருத்துரை குறிக்கின்றது.

இவ்வுண்மையைப் '' பேய்த்தேர் முகக்க உறும் பேதை குணம் ஆகாமே '' என்னும் பாடற்பகுதி தெளிவுறுத்துகின்றது. 'பேதை குணம்' என்பது, பிரபஞ்சம் பற்றிய மயக்க அறிவு ஆகும். 'பேய்த்தேர்' என்பது, உள்ளது போல் தோன்றும் கானல்நீர் ஆகும்.

## 16. திருப்பொன்னூசல்

### ( அருட் சுத்தி )

திரு + பொன் + ஊசல் = திருப்பொன்னூசல். ஊசல் = உஞ்சற்பலகை. பொன்னால் செய்யப்பட்ட ஊஞ்சல் பலகை, பொன்னூசல் எனப்படும். இருபக்கங்களிலும் கயிறு கட்டி விட்டத்தில் தொங்க விட்ட ஊஞ்சலில், மகளிர் ஆடி ஆடி விளை

யாடுவர். 'பொன்' என்ற சொற்கு 'அழகு' என்ற பொருளும் உண்டு. எனவே, 'பொன்னூசல்' என்பதை 'அழகிய ஊஞ்சல்' என்றும் கூறலாம்.

அருள் + சுத்தி = அருட்சுத்தி "அருள்" என்பது இறைவ ேனாடு இரண்டறக் கலந்து அவனை விட்டுப் பிரியாது இருக்கின்ற அருளாற்றல் ஆகும். இந்த அருட்சத்தியே இறைவனோடு இயைந்து நின்று, ஐந்தொழில் ஆற்றுகின்றது. "சுத்தி" என்பது 'தூய்மை அடைதல்' ஆகும்.

உயிர்களின் மும்மலப் பிணிப்பைப் படிமுறையில் நீக்கும் பொருட்டு, மறைப்பாற்றலாக நின்று, தூய்மைப் படுத்துவது இந்த அருளாற்றலே ஆகும்.

உயிர்கள் மும்மல நீக்கம் பெற்று, அருள் ஒளி விளக்கம் உற்று, தூய்மை அடைதலே, "அருட்சுத்தி" எனப்படும்.

## 17. அன்னைப்பத்து

### ( ஆத்தும பூரணம் )

'அன்னை' என்பது இங்கே அகப்பொருள் துறையால் செவிலித்தாயைக் குறிக்கிறது. செவிலித்தாய், தலைவி – தலைவனுடன் வாழும் மனை வாழ்க்கைச் சிறப்பை, நற்றாய்க்கு உவந்து கூறும் பத்துபாடல்களைக் கொண்டது. 'அன்னைப்பத்து' ஆகும்.

ஆத்துமா = உயிர்; பூரணம் = நிறைவு. உயிர், இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்து, மலப்பிணிப்பிலிருந்து முழுவதும் நீங்கப் பெற்று குறை நீங்கி நிறைவு அடைந்து, பேரின்பப் பேற்றினை பெற்று நிற்பதே, உயிர்க்கு நிறைவு ஆகும். அஃதே ஆத்தும பூரணம் எனப்படும்.

இப்பதிகத்தில் உள்ள பத்துப் பாட்டுக்களிலும், "அன்னே என்னும்" என்னும் தொடர் ஒவ்வொரு பாட்டிலும் இரண்டு தடவைகள் வருகின்றது. 'அன்னே என்னும்' என்று முதலில் சொல்வது, தாயே, என்னிடத்தில் தலைவி சொல்வதாவது' என்று சொல்லத் தொடங்குவதைக் குறிக்கும்; அவ்வாறு இரண்டாவது தடவை சொல்வது, அங்கு நடந்த வியப்புறு நிகழ்ச்சிகளைச் சொல் வதைக் குறிக்கும்.

## 18. குயிற்பத்து

### ( ஆத்தும விளக்கம் )

சோலையில் வாழும் ஒரு குயிலை நோக்கிக் கூறும் பத்துப் பாட்டுக்கள் அடங்கிய பதிகம், குயிற்பத்து ஆகும்.

திருப்பெருந்துறையில் தம்மை விட்டுச் சென்ற இறைவனைப் பிரிவாற்றாமையால் மனம் வருந்திச் செய்தருளியது. இது, ஒரு தலைவி பிரிவாற்றாமையினாலே வருத்தமுற்ற நிலையில், தன் தலைவனிடத்தில் ஒரு குயிலைத் தூதாக அனுப்புவது போல் சொல்லியிருப்பது. அகப் பொருள் துறையால் நெய்தல் திணைக்குரிய இரங்கல் பகுதியைச் சேர்ந்த பனுவல்.

ஆத்துமா – உயிர்; இரக்கம் – வருத்தம்.

உயிரும் இறைவனும் இருவேறு பொருள்களாக இருப்பினும், ஒன்றினை விட்டு மற்றொன்று பிரியாது, இரண்டறக் கலந்து நிற்கும் அத்துவித நிலைமையை உடையன.

கட்டு நிலையில், உயிர் அந்த அத்துவித நிலையினை அறியாமல் இருக்கிறது; வீட்டு நிலையில் இறைவனோடு இரண்டறக் கலந்திருத்தலை உணர்கிறது. இவ்வாறு உணர்ந்தபின்பு, இறைவனை மறந்து நிற்பதற்குத் தாங்கொணா வருத்தம் உறுகிறது உயிர், இதனையே 'ஆத்தும இரக்கம்' என்னும் கருத்துரை கூறுகிறது. பக்குவப்பட்ட ஆன்ம இலக்கணம் இப்பதிகத்தில் காணப்படுகிறது.

## 19. திருத் தசாங்கம்

### ( அடிமைகொண்ட முறைமை )

தசம் = பத்து ; அங்கம் = உறுப்பு.

அரசன் ஒருவன், தன் மக்களைத் துன்பத்தினின்றும் காத்து நல்லாட்சி புரிவதற்கு, அவனுக்குப் பத்து உறுப்புக்கள் துணையாக நிற்கின்றன, அவை வருமாறு:

நாமம், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார் கொடி – ஆகியன.

அதுபோல, உலகினை ஆளும் சிவபெருமானும் பத்து உறுப்புக்களைத் துணையாகக் கொண்டு, மும்மலப்பிணிப்பினால் உண்டாகும் துன்பத்திலிருந்தும் உயிர்களைக்காத்து, பேரின்பம் அடையச் செய்கிறான் என்பதை உணர்த்தும் பொருட்டு 'திருத்தசாங்கம்' பாடப் படுகிறது.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் என்றும் இயல்பாக உள்ள தொடர்பு, ஆண்டான் – அடிமை முறைமையே ஆகும்.

இறைவன், உயிர்கள் உய்யும் பொருட்டே அவற்றை இயக்குகிறான்; அவன் இயக்காமல் அவை இயங்கா; அவன் அறிவிக்காமல் அவை அறியமாட்டா, ஆண்டான் ஆணைப்படியே அடிமை நடக்கக் கடமைப் பட்டவன், இறைவன் ஆண்டானாகவும், உயிர்கள் அடிமையாகவும் என்றும் மீளா அடிமை யாகவும் இருப்பதே உண்மை. இஃதே 'அடிமை கொண்ட முறைமை' எனப்படுகிறது.

## 20. திருப்பள்ளியெழுச்சி

### (திரோதான சுத்தி)

பள்ளி – துயில் ; எழுச்சி – எழுதல். 'பள்ளிஎழுச்சி' என்பது, துயில் நீங்கி எழுதல் ஆகும். பகற்பொழுதில் உலகம் விரிந்திருக்கிறது; இராப்பொழுது உலகம் ஒடுங்கியிருக்கிறது. இவ்வுண்மையை, இராக்காலங்களில் மக்கள் உறங்கும் போது, கருவி கரணங்கள் ஒடுங்கியிருப்பதைக் கொண்டு அறியலாம்.

சூரிய உதயத்திற்கு முன்புள்ள இரண்டு மணி நேரத்தில் உலகம் விரிவடையத் தொடங்கும்; அன்றைப் பொழுது, விடியற் காலையில் இறைவன் உயிர்கட்குள்ள அறியாமை நீங்கும் பொருட்டு, தூல ஐந்தொழிற்கு ஏதுவாகிய சூக்கும ஐந்தொழிலைச் செய்கிறான். இராப்பொழுதை நித்திய கேவலம் என்றும், பகற்பொழுதை நித்திய சகலம் என்றும் கூறுவர்.

நித்திய சகலத் தொடக்கத்தில், இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகத்தான், திருப்பள்ளி எழுச்சி பாடப்பெறுகிறது.

'திரோதான சுத்தி' என்பது, இறைவனின் மறைப்பாற்றலி லிருந்து உயிர்கள் விடுபட்டு அருளாற்றலைப் பெறுவதைக் குறிக்கும்.

திரோதானம் + சத்தி = திரோதானசத்தி. திரோதானம் – திரோபவம் – மறைத்தல் – அஃதாவது ஐந்தொழில்களுள் ஒன்று ஆகிய மறைப்புத் தொழில்.

உயிர்கட்கு, இருவினை யொப்புப் பருவம் வரும் வரை, உயிர்கள் உலகில் நல்வினை தீவினைகளால் அடையத்தக்க அனுபவம் அடையும் பொருட்டு, உண்மையை மறைத்து நிற்கும், இறைவனின் அருட்செயலே திரோதானம் எனப்படும். உயிர்கள் படிப்படியாக மலப் பற்றை விட்டுத், தூய்மை உறுவதற்காகச் செய்யப்படும் மறைப்புத் தொழில், உயிர்களைத் தூய்மைப்படுத்துவதால் இது ' திரோதான சத்தி ' எனப்பட்டது.

## 21. கோயில் மூத்த திருப்பதிகம்

### ( அநாதியாகிய சற்காரியம் )

'கோயில் என்பது' மக்கள் வழிபடும் பொருட்டுத் தாவர வடிவில், நம் தலைவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாகும்.

' மூத்த ' என்பது, ' மேலான ' அல்லது ' சிறப்பான ' என்று பொருள்படும். ' திருப்பதிகம் ' என்பது. சிவபெருமானின் பெருமைகளைக் கூறும் பத்துப் பாட்டுக்களைக் கொண்ட பனுவலைக் குறிக்கும்.

இதனை அடுத்துக் " கோயில் திருப்பதிகம் " என்றொரு தலைப்பு வருகிறது. இவ்விரு பதிகங்களும் தில்லையில் அருளப்பட்டனவே; ஆயினும், அப்பதிகத்தினைவிட, இது சிறப்புடையது என்பதால் " மூத்த " என்னும் அடைமொழியைப் பெற்றது.

' அநாதி ஆகிய சற்காரியம் ' என்னும் சொற்றொடர், தொடக்கமில் காலம் ஆகிய இறைவனது படைப்பு முதலிய தொழில்களைக் குறித்து நிற்கிறது.

சத் + காரியம் = சற்காரியம். சத் – என்றும் உள்ள காரண நிலையில் உள்ளது. காரியம் – படைக்கப்படுவது - காரியப்படுவது. அநாதி – ஆதி அற்றது – தொடக்கம் இல்லாதது.

சிவபெருமான், உயிர்கள் உய்யும் பொருட்டு, காரண நிலையில் என்றும் உள்ள மாயையிலிருந்து இவ்வுலகத்தைத் தொடக்கமில் காலத்திலேயே படைத்துக் காத்து ஒடுக்குதலை, 'அநாதி ஆகிய சற்காரியம்' என்னும் தொடர் குறிக்கின்றது.

## 22, கோயில் திருப்பதிகம்

### ( அநுபோக இலக்கணம் )

'கோயில்' என்பது, இங்குத் தில்லைக்கோயிலைக் குறிக்கும் தில்லைக் கோயிலைச் சிறப்பித்துக் 'கோயில்' எனக் கூறுவதற்குக் காரணம் வருமாறு :

ஒவ்வொரு நாளும் சிவன் கோயில்களில் நடக்கும் நள்ளிரவு வழிபாடு ( அர்த்தசாம பூசை ) அன்றுடம் ஆன்மாக்கள் இளைப்பாறும் பொருட்டு நடக்கும் சங்காரத்தை (ஒடுக்கம்)க் குறிக்கிறது. உலகில் உள்ள எல்லாச் சிவன் கோயில்களிலும் இறைவனுடைய அருட்சத்தியைக் குறிக்கும் திருவடிகள் திருப்பள்ளியறையில் இறைவனுடன் சேர்த்து வைக்கப்பெறுகின்றன. இவ்வாறு வைக்கப் பெறுவது, அருட்சத்தி சிவத்தில் ஒடுங்குதலைக் குறிக்கும்.

எல்லாச் சிவன் கோயில்களிலும் அவ்வாறு ஒடுங்குகின்ற அருட்சத்திகள் சிதம்பரத்தில் உள்ள கோயிலில் நடக்கின்ற நள்ளிரவுப் பூசையில் வந்து ஒடுங்குகின்றன. எனவேதான் சிதம்பரம், "கோயில்" என்னும் பெயரால் சிறப்பித்துப் பேசப்படுகின்றது.

அநுபோக + இலக்கணம் = அநுபோக இலக்கணம். 'அநுபோகம்' என்பது தலைவனோடு இரண்டறக் கலந்து ஒற்றித்து நின்று, ஒருவர் தம்முள் உணரும் பேரின்ப நுகர்வு. 'இலக்கணம்' என்பது அடையாளம். ஆக, பிறர்க்குக் கூற முடியாத தன்மையில், தம்முள் நுகரும் பேரின்ப நுகர்வுக்கு ஏதுவாக இருக்கும் அடையாளங்களை இப்பதிகத்தைப் படனம் செய்பவர் அநுபவிப்பர்.

"உரை உணர்வு இறந்து நின்று, உணர்வதோர் உணர்வே" என்பது பேரின்ப நுகர்வாகும், இப்பதிகம், திருவாசகத்தின் இதயம் போன்றது.

## 23. செத்திலாப் பத்து

### ( சிவானந்தம் அளவறுக் கொணுமை

உடலும் உயிரும் சீவித்து நில்லாது, செத்திடல் வேண்டும் என்று இறைவனை நோக்கி, வேண்டிக்கொள்ளும் பத்துப் பாட்டுக்கள் அடங்கிய பதிகம், 'செத்திலாப் பத்து' ஆகும்.

'உடல் செத்திடல்' என்பது 'எனது' என்னும் 'புறப்பற்று' நீங்குதலையும், "நித்தியமாகிய உயிர் செத்திடல்" என்பது 'யான்' என்னும் 'அகப்பற்று' நீங்குதலையும் குறிக்கும்.

"சேயனுய் நின்று அலறுவது அழகோ" என்று பெருந்தகை அருளியிருப்பதிலிருந்து, அவர்களது வேண்டுகோள் எத்தகையது என்பதை அறியலாம்.

சிவானந்தம் அளவறுக்க ஒண்ணாத தன்மையது.

'சிவானந்தம்' என்பது, உயிர் தனிமுதற் பொருளாகிய சிவத்தோடு, இரண்டறக் கலந்து, ஒற்றித்து நின்று உணரும் பேரின்ப நுகர்வு.

'அளவறுக்க ஒண்ணுமை' என்பது இன்னது என்றும், இவ்வளவினது என்றும், வரையறுத்துச் சொல்லமுடியாத தன்மையைக் குறிக்கும். அத்தகு பேரின்பம் அளவுபடாதது என்பதை (**Infinite bliss**), நுகர்பவர் அறிவர்.

## 24. அடைக்கலப் பத்து

### ( பக்குவ நிண்ணயம் )

'அடைக்கலம்' என்பது, சிறியவன் ஒருவன், பெரியவர் ஒருவரிடம் சென்று, தனக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைப் போக்கித் தன்னைக் காப்பாற்றும்படி, வேண்டிக்கொண்டு, அப் பெரியவரிடம் சரண் புகுதல் ஆகும்.

ஆன்மாக்களுக்கு எப்போதும் சிவபெருமான் ஒருவனே ஒழியாப் புகலிடம் ஆவன். 'அடியேன் உன் அடைக்கலமே' என்னும் தொடர் பத்துப் பாட்டுக்களிலும் இடம் பெற்றிருப்பதிலிருந்து இவ்வுண்மை எளிதில் புலப்படும்.

பக்குவம் + நிண்ணயம் = பக்குவ நிண்ணயம்' பக்குவம்' என்பது தகுதி, அஃதாவது ஒருவர் திருவருளைச் சார்ந்து நிற்க நிற்க ஆணவமலம், அவரது அறிவை மறைக்கும் திறன் இழந்து நிற்கும்; அப்போது அவருக்கு, மலபரிபாகம் ஏற்படுகிறது என்று பொருள். 'தகுதி' என்பது, இங்கே மலபரிபாகத்தினுல் உண்டாகும் பக்குவத்தைக் குறிக்கிறது. 'நிண்ணயம்' என்பது, நிர்ணயம் அல்லது நிச்சயம் ஆகும். ஆக, 'பக்குவ நிண்ணயம்' என்பது இறைவனிடம் சரண் அடைவதற்குள்ள தகுதியின் அளவு, இவ்வளவு என்று நிச்சயித்தல் ஆகும்.

## 25. ஆசைப் பத்து

### ( ஆத்தும இலக்கணம் )

'ஆசை' என்பது, மணிவாசகப் பெருந்தகை, இந்த உலகில் வாழும் நிலையில்லாத உடலை விடுத்து. கயிலைமலை ஆகிய சிவபுர நகருக்குச் சென்று, சிவபெருமானையும் அவனுடன் இருக்கின்ற அடியார்களையும் காண வேண்டும் என்னும் தமது விருப்பத்தை வெளிப்படுத்துவது. இப்பதிசத்தில் உள்ள ஒவ்வொரு பாட்டிலும், "ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே" என்று அவர்கள் கூறியருளுவதிலிருந்து இவ்வுண்மை தெளிவாகிறது.

ஆத்துமா + இலக்கணம் = ஆத்தும இலக்கணம் 'ஆத்துமா' என்பது ஆன்மா; அறிவு விளக்கம் பெற்ற உயிர், 'ஆன்மா' எனப் படுகிறது. இலக்கணம் – அடையாளம். 'ஆத்தும இலக்கணம்' என்பது, பக்குவப்பட்ட மனித உயிர்களுக்குள்ள அடையாளங்கள் அவ்வடையாளங்கள் வருமாறு.

1, ஆன்மா, அறிவுருவாய்த் தத்துவங்களுக்கு வேறாய் இருந்து. தத்துவங்களை அறிபவன் என்று அறிதல்.

2. உலக வாழ்வைப் படிப் படியாக வெறுத்தல்.

3. சிவபெருமானின் திருவடிப் பேற்றினை அடைவதற்கு விரும்புதல்.

## 26. அதிசயப் பத்து.

### ( முத்தி இலக்கணம் )

அதிசயம் + பத்து = அதிசயப் பத்து.

'அதிசயம்' என்பது, முன்பு அனுபவியாதது ஒன்றை, அனுபவித்தலால் உண்டாகும் வியப்பு: அஃதாவது, மணிவாசகப் பெருந்தகை, தாம் திருப்பெருந்துறையில். சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற பின்பு முற்றிலும் மல இருள் நீங்கப் பெற்றதனால் அடைந்த பேரின்பத்தை அனுபவித்தறிந்து அன்வனு பவத்தைத் தமக்கு இந்த மண்ணுலக வாழ்வில், தாம் அமைச்சராக இருந்தபோது ஏற்பட்ட பழைய நிலையோடு, ஒப்பிட்டுப் பார்த்து, வியப்படைதல் ஆகும்.

'முத்தி இலக்கணம்' என்பது, முத்தி ஆகிய வீடுபேற்றினை அடைவதற்கு ஏதுவாய் உள்ள வழியாகும். அவ்வழிகளில் சிறந்ததாகிய அடியார்களுடன் கூடி இருத்தலையே, பெருந்தகை இப்பதிகத்தில் குறிப்பிட்டருள்கின்றார்கள்.

மும்மலப் பிணிப்பு முற்றிலும் நீங்கி, அருளொளி விளங்கப் பெற்று, வீட்டின்பம் அடைய விரும்புபவர்கள், அத்தகைய பேரின்ப அனுபவம் பெற்ற அடியார்கள் கூட்டத்தோடு கூடி இருப்பதே முத்திக்குரிய வழிகளில் சிறந்த வழியாகும்.

## 27. புணர்ச்சிப் பத்து

### ( அத்துவித இலக்கணம் )

மணிவாசகப் பெருந்தகை, தம்மைச் சிவபெருமான், குருவடிவில் வந்து ஆண்டருளிய பிறகு, அவனை விட்டுப் பிரியாது. அவனோடு இரண்டறக் கலந்து சேர்ந்து இருத்தலைத் தமது விருப்பமாகக் கூறும் பத்துப்பாட்டுக்கள் அடங்கிய பதிகம், 'புணர்சிப்பத்து' ஆகும்.

'அத்துவிதம்' என்பது, இரண்டு அன்மை, அஃதாவது, உயிரும் இறைவனும் இருவேறு அறிவுடைப் பொருள்களாய் இருந்தும், இரண்டு என்றும் ஒன்று என்றும் கூறப்படாமல், பிரிவுஅற வேற்றுமை இன்றி, ஒன்றுபட்டு, நிற்கும் தன்மையைக் குறிக்கும்.

இறைவன் உயிரோடு கலந்து இருக்கும் தன்மையால் ஒன்றாயும், உயிர்க்கு அறிவிக்கும் தன்மையால் வேறாகியும், உயிரினை நுகர்விக்கும் தன்மையால் உயிருடன் உடனாயும் நின்று, உயிர்க்குள்ள இச்சை, அறிவு, செயல்களை நிகழ்வித்து, உயிர்க்கு உதவுகின்ற அவனது அருட்டன்மையே, அத்துவிதமாகும்.

பத்துப்பாட்டுக்களிலும் "பொல்லாமணியைப் புணர்ந்து நிற்பது" என்று பெருந்தகை அருளிச் செய்திருப்பதன் பொருள், அத்துவிதக் கலப்பைப் பற்றியதே ஆகும்.

## 28. வாழாப் பத்து

### ( முத்தி உபாயம் )

திருப்பெருந்துறையில் இறைவன், தம்மை ஆண்டருளிய பிறகு' பெருந்தகை தமக்கு, உலக வாழ்வில் யாதொரு பற்றும் இல்லாதிருப்பதால், தாம் இவ்வுலகில் வாழ முடியாது என்பதை இந்த 'வாழாப்த

பத்து' என்னும் பதிகத்தில் கூறியருள்கின்றார்கள். அதன் பயனாகத் தம்மைக் கயிலைக்கு வருவித்துக் கொள்ளுமாறு இறைவனிடம் வேண்டுகிறார்கள்.

'முத்தி உபாயம்' என்பது, வீடுபேற்றினை அடைவதற்கு ஏதுவாக உள்ள வழியைக் குறிக்கும், வீடுபேற்றில் தமக்கு இருக்கும் விருப்பத்தை, அதனை வழங்கவல்ல ஒரே தலைவனாகிய சிவபெருமானிடம் மட்டுமே கூற முடியும்; பிறர் அறியும்படி அதனைச் சொல்லவும் முடியாது. எனவே, உலகில் வாழ்வதற்குத் தமக்கு விருப்பம் இல்லை என்பதை.

'உலகில் வாழ்கிலேன், கண்டாய்'

'மற்று நான் பற்றிலேன், கண்டாய்'

'பற்று நான் மற்றிலேன், கண்டாய்'

என்று மணிவாசகப் பெருந்தகை தமது உறைப்பை வெளிப்படுத்தியருளியுள்ளார்கள்.

சிவபெருமானையன்றி வேறு எந்த தெய்வமும் முத்தியைத் தராது என்பதை இந்தப் பதிகத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்கள்,

## 29. அருட் பத்து

### ( மகா மாயா சுத்தி )

'அருள்' என்பது, கதிரவனின்றும் வேறாகாது, அதன் ஒளி, கதிரவனைப் பிரியா திருத்தல்போல, இறைவனின்றும் வேறாகாது, அவனை விட்டுப் பிரியாதிருக்கின்ற 'சத்தி' ஆகிய அவனது ஆற்றலைக் குறிக்கும்.

கதிரவனது ஒளி, உலகெங்கும் பரந்து நிறைந்து விளங்குவது போல், அருட்சத்தியும், உயிர்கள் உய்யும் பொருட்டு. ஐந்தொழில் ஆற்றுதற்காக, என்றும் எங்கும் ஒளிமயமாய் நிறைந்திருக்கின்றது.

'மகாமாயை' என்பது 'மாமாயை' ஆகிய சுத்த மாயையினைப் பொதுவாகக் குறிக்கும். சுத்தமாயை எப்போதும் தூய்மை உடையது. எனவே. 'மகாமாயை' என்ற தொடருக்குப்பின் 'சுத்தி' என்றொரு சொல் வருவதால், இங்கே 'மாமாயை' என்பது, விந்து, மோகினி, மான் என்னும் மும்மாயைகளின் காரிய

மாகிய 'பெரிய மாயேய மலம்' என்று பொருள் கொள்வதே பொருத்தம் ஆகும்.

ஆகவே, "மகாமாயா சுத்தி" என்பது, சுத்த மாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை ஆகிய மூன்று மாயைகளின் காரியம் ஆகிய மாயேய மலத்தை நீக்குதல் ஆகும். மாயேய மலம், அருள் ஒளியால், தூய்மை செய்யப்பட்டு, நீக்கப்படுவதால், இஃது அருட்பத்தின் கீழ் வைக்கப்பட்டது.

## 30. திருக்கழுக்குன்றப் பதிகம்

### ( குரு தரிசனம் )

மணிவாசகப் பெருந்தகை, திருப்பெருந்துறையிலிருந்து பல தலங்களை வழிபட்டுத் திருக்கழுக்குன்றத்தில் சிலநாட்கள் தங்கியிருந் தார்கள் அப்போது, அங்கே திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைக் குறித்துப் பாடிய ஏழு பாட்டுக்கள் அடங்கிய பதிகம், திருக்குழுக்குன்றப் பதிகம்.

பெருந்தகை, திருக்கழுக்குன்றத்தில் தங்கி இருந்த போது, இறைவன் திருப்பெருந்துறையில் வைத்து ஆண்டருளிய, குரு வடிவாகிய திருக்கோலத்தை, அவர்கள் தரிசித்து வணங்கும் படி காட்சியருளினன்.

இவ்வுண்மையை, ஒவ்வொரு பாட்டிலும் "வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்று அவர்கள் கூறியருளியதிலிருந்து அறியலாம்.

இந்தப் பதிகத்தில்,

*"பெருந்துறைப் பெரு வெள்ளமே"*
*"பெருந்துறைக் கொண்டலே"*

என்று வருவதால், திருக்கழுக் குன்றத்தில் அவர்கள் கண்டது, திருப்பெருந்துறையில் அவர்களை ஆட்கொண்டருளிய குருவடிவான காட்சியே என்பது பெறப்படுகிறது.

## 31. கண்ட பத்து

### ( நிருத்த தரிசனம் )

மணிவாசகப் பெருந்தகை தில்லைக்கு வந்துசேர்ந்ததும் பொன்னம்பலத்தில் எழுந்தருளி இருக்கும் கூத்தப்பிரானுடைய

நடனக் காட்சியைக் கண்டு, பாடிய பத்துப் பாட்டுக்கள் அடங்கிய பதிகம் ' கண்டபத்து ' ஆகும்.

நிருத்தம் — நடனம்

தரிசனம் — காட்சி

திருத்தில்லையில் கண்ட கூத்தப்பெருமானின் நடனக் காட்சி ' நிருத்த தரிசனம் ' ஆகும்.

## 32. பிரார்த்தனைப் பத்து

### ( சதா முத்தி )

பிரார்த்தனை — வேண்டுகோள்.

உலக வாழ்வை முடித்து, முத்தியின்பத்தை அளித்தருளும்படி, சிவபெருமானிடம் வேண்டுவது.

' சதா முத்தி ' என்பது என்றும் பேரானிலையினை உடைய அளவில்லாத வீட்டு இன்பத்தைக் குறிக்கும். இதிலிருந்து பதமுத்தியையோ, அபர முத்தியையோ குறிப்பிடாமல், மணிவாசகப் பெருந்தகை, இப்பதிகத்தில், அவற்றின் மேலான " பரமுத்தி " யினையே வேண்டுகிறார்கள் என்பது தெளிவு. இது பதினொரு பாடல்கள் அடங்கிய பதிகம் ஆகும்.

## 33. குழைத்த பத்து

### ( ஆத்தும நிவேதனம் )

குழைத்தல் — வாட்டுதல்; வருந்தச் செய்தல்.

மணிவாசகப் பெருந்தகை தாம் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற பின்பும் பிராரத்துவ மல வாசனை பற்றுதலுக்கு இடமாய் இருந்து, இவ்வுலகில் இறைவனைவிட்டுப் பிரிந்து வருந்தும்படி, இறைவன் செய்து விட்டானே என்பதை நினைத்து வாட்ட முற்று அருளிச் செய்துள்ள பத்துப்பாட்டுகள் அடங்கிய பதிகம் குழைத்த பத்து.

ஆத்துமா + நிவேதனம் = ஆத்தும நிவேதனம். அஃதாவது சிவபெருமானிடத்தில் உயிரை ஒப்புவிக்கையாகும். இக்கருத்துரையில் ' ஆத்துமா ' என்று வரும் சொல், உயிரை மட்டுமன்றி உடல், பொருள் ஆவி ஆகிய அனைத்தையுமே குறிக்கும்.

உடல், மாயையிலிருந்து இறைவனே படைத்துத் தந்தமையால் அவனுடையது. 'பொருள்' என்பது நமது உடைமை எனக் கருதும் அனைத்துப் பொருள்களையும் குறிக்கும், அனைத்துப் பொருள்களும் மாயா காரியங்கள் ஆகலின், அவையும் இறைவனது உடைமைகளே ஆகும். உடலும் பொருளும் நிவேதிக்கப்படும் போது, உயிர்க்குள்ள தன்முனைப்பு நீங்கப்பெற்று, இறைவன் திருவடி வியாபகத்துடன் உயிர் அடங்கும். எனவே உயிர் என்றும் இறைவனுக்கு அடிமை என்பது தெளிவாயிற்று.

## 34. உயிருண்ணிப் பத்து

*( சிவானந்தம் மேலிடுதல் )*

உயிர் – ஆன்மா.

உண் + இ = உண்ணி – உண்கிறவன்.

'உயிர் உண்ணி' என்பது, உயிரின் தன் முனைப்பு ஆகிய தற்போதத்தை (சீவபோதத்தை) அவ்வுயிர் வீடுபேறு அடையும்போது இறைவன் தன்னிடம் அடங்கச் செய்வது என்பதைக் குறிக்கும், உயிரைச் சிவபெருமான் உண்பது என்பது, உயிரின் சீவபோதத்தைத் தன்னுள் அடங்கச் செய்து, தன்னுடைய சிவபோதத்தை உயிரினிடம் நிறைவித்து, மேலிடச் செய்வதைக் குறிக்கும், அவ்வாறு சீவபோதம் இழந்து, சிவபோதம் நிறைந்து இருக்கும் தன்மையைக்கூறும் பத்துப் பாட்டுக்கள் அடங்கியது "உயிருண்ணிப் பத்து" ஆகும்.

'சிவானந்தம்' என்பது, சிவம் என்னும் தனிமுதற் பொருளோடு, உயிர் இரண்டறக் கலந்து, ஒற்றித்து நின்று, சீவபோதம் கெட்டுச் சிவத்திடம் அடங்கி நிற்பதால் உணரும், பேரின்ப அனுபவம் ஆகும், சிவம் உயிரை உண்பதால், இந்தச் சிவானந்தம் உண்டாகிறது.

'மேலிடுதல்' என்பது, மேற்குறிப்பிட்டவாறு, சீவபோதம் கெட்டுச், சிவத்தில் வியாப்பியமாய் அடங்கி நிற்பதால், சிவானந்தம் உயிரில் கலந்து. மேலும் மேலும் பெருகி வளர்தலாகும்' இந்த அனுபவத்தையே பாடல் தோறும் பெருந்தகை கூறியருளியுள்ளார்கள்.

## 35. அச்சப் பத்து

*( ஆனந்தம் உறுதல் )*

'அச்சம்' என்பது, அஞ்சுதல்; அஃதாவது, சிவபெருமான் ஒருவனே தனிமுதற் பொருள் என அறிந்து, அவனிடத்து அன்பு

இல்லாதாரைக் காணும்போது, அவர்களது தொடர்பு உலக வாதனையைப் பயக்கும் என்று அஞ்சுதல்.

சீவன் முத்தர்கள் எப்போதும் சிவ சிந்தனையிலேயே இருப்பார்கள். உலக முகப்பட்டு வாழ்கின்ற காலத்தில் சிவபெருமானிடத்துத் தனித்து அன்பு செலுத்தாதவர்களைக் கண்டால், அக்காட்சி எப்போதும் இடைவிடாது சிவபெருமான் திருவடிகளில் அழுந்தி இருக்கும் தம் சிந்தையை, வேறுபடச் செய்யும் என்று, அஞ்சி விலகுதலையே, இங்கே 'அச்சம்' என்ற சொல் குறிக்கின்றது.

'ஆனந்தம் உறுதல்' என்பது, பேரின்பம் அடைதல் ஆகும்.

இந்தப்பதிகத்தின் இரண்டாவது பாட்டில், "மற்றோர் தேவர், எத்தேவர் என்ன அருவராதவரைக் கண்டால், அம்ம! நாம் அஞ்சுமாறே" என அருளிச்செய்துள்ளமையை நினைவில் கொள்ள வேண்டும். சிவபெருமானை அன்றிப் பிறதெய்வத்தைக் கண்டால் அருவருப்பு (மனக்கூச்சம்) ஏற்பட வேண்டும் என்பதைப் பெருந்தகை குறிப்பிட்டருளியுள்ளார்கள், அதுவே பேரின்பத்தைத் தரும்.

## 36 திருப்பாண்டிப் பதிகம்

### ( சிவானந்த விளைவு )

'பாண்டி' என்னும் சொல், இங்கே பாண்டிய நாட்டு அரசனைக் குறிக்கும்; அஃதாவது சிவபெருமான் மலையத்துவசப் பாண்டியன் திருமகளை மணந்து, சோமசுந்தரப் பாண்டியனாக வந்து, பாண்டிய நாட்டை ஆண்டதால், 'பாண்டி' என்ற சொல், 'சோமசுந்தரப் பாண்டியன்' ஆகிய சிவபெருமானையே குறிக்கும்.

பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகத்தில் பல இடங்களில், 'பாண்டியனார்' என்ற சொல் வருகிறது. 5-ஆவது பாட்டில் "ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான்" என்று வருவதால், இது சிவபெருமானையே குறிக்கிறது என்பது தெளிவு

சிவபெருமான், முன் ஒரு சமயம், கண்டவர் மனங்கவரும் வனப்புடன், ஒரு குதிரையின் மீது அமர்ந்து, பாண்டிய மன்னன்

முன் வந்த திருவுருவச் சிறப்பைப் பல இடங்களில் இப்பதிகத்தில், பெருந்தகை அருளிச்செய்துள்ளார்கள்.

'சிவானந்த விளைவு' என்பது, ஆன்மா சிவபெருமானுடன் இரண்டறக் கலந்து ஒற்றித்து நிற்றலால் உணரும் பேரின்ப அனுபவம் ஆகும்.

சிவபெருமானுடைய திருவுருவத்தைக் காணுந்தொறும் அவ்வனுபவம் விளைவதால், இப்பதிகத்தில் இந்தக் கருத்துரை இடம் பெறலாயிற்று.

## 37 பிடித்த பத்து

### ( முத்திக் கலப்பு உரைத்தல் )

'பிடித்தல்' என்பது, பற்றுதல்; அஃதாவது, ஆன்மா தன் சிறப்பு இயல்பை உணர்ந்து, தனக்கும் இறைவனுக்கும் உள்ள பிரிப்பில்லாத அத்துவிதத் தொடர்பை அறிந்து அவனையே பற்றி நிற்றல்.

இவ்வாறு பற்றுவது, உயிரிடமுள்ள மலப்பற்று முற்றிலும் நீங்கப் பெற்று, உயிர் தற்போதம் இழந்து, எங்கும் நிறைந்து காணப்பெறும் வியாபக அறிவை அடைந்து, சிவத்துள் அடங்கி நிற்கும்போது, ஏற்படும். இப்பற்றின் அருமையைப் பெருந்தகை. பதிகத்தில் உள்ள பத்துப் பாடல்களிலும், "உன்னைச் 'சிக்' எனப் பிடித்தேன்; எங்கு எழுந்து அருளுவது இனியே" என்று அருளிச் செய்தார்கள். 'சிக்என' என்பது, உறுதியாக என்று பொருள் தரும்.

'முத்திக்கலப்பு உரைத்தல்' என்பது, முத்திநிலையில் ஆன்மா ஒன்றாயும் வேறாயும் உடனாயும், இரண்டறக் கலந்து நிற்றலைக் கூறுவது.

துரியாதீத நிலையில், பெருந்தகை தாம் அவ்வாறு அனுபவித்ததை, துரிய நிலையில் நம்பொருட்டு இறங்கி வந்து அருளிச் செய்துள்ளார்கள். நாமும் அந்நிலையைப் பெறுதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பது கருத்து.

## 38. திரு வேசறவு

### ( சுட்டறிவு ஒழித்தல் )

திரு + ஏசறவு = திருவேசறவு.

'ஏசறவு' என்பது விருப்பம்; அன்பு. 'ஏசறவு' என்ற சொற்குத் 'துக்கம்' என்று ஒரு பொருள் உண்டு இங்கே, 'ஏசறவு' என்பது, உயிர் அன்பினால் இறைவனது பேரருளை நினைந்து, அதனை எளிதில் பெற இயலவில்லையே எனத் துக்கித்து, நினைந்து நினைந்து இரங்குதலைக் குறிக்கும்.

இப்பதிகத்தில் உள்ள பத்துப்பாட்டுக்களிலும், சிவபெருமான் அருளிச்செய்தவாறு, ஆன்மாக்கள் அவனருளை அறியாமல், அவமே காலத்தைப் போக்கியதைப் பெருந்தகை துக்கித்துப் பலவாறாகக் கூறியருளியுள்ளார்கள்.

இந்தப்பதிகத்தின் பத்தாவது பாட்டில், "சிவாய நம எனப் பெற்றேன்" என்று பெருந்தகை அருளிச்செய்திருப்பது, கவனத்தில் கொள்ளத்தக்கது.

'சுட்டறிவு' என்பது, சுட்டி அறியும் அறிவு. அஃதாவது, உலகப் பொருள்களைக் கருவி கரணங்களால் ஒன்று ஒன்றாய்ச் சுட்டி, இது மண், இதுபொன் என்று தனித்தனியாக அறிவது. 'ஒழித்தல்' அறிவது. 'ஒழித்தல்' என்பது, அத்தகைய கருவியால் அறியும் அறிவை நீக்குதல். உலக வாழ்வை நீத்துப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறும்போது சுட்டறிவு நீங்கும்.

## 39. திருப் புலம்பல்

### ( சிவானந்த முதிர்வு )

'புலம்பல்' என்பது, தனிமையில் அழுது இரங்குதல். அஃதாவது, சிவபெருமானின் திருவடிகளே தமக்குத் துணை என்று கூறி, அத்திருவடிகளைச் சார்ந்து நிற்கும் பொருட்டு, மெய்யன்பினால், மனங்கசிந்து உருக வேண்டும் என்னும் தமது விருப்பத்தைப் பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

மூன்று பாட்டுக்களை உடைய இப்பதிகத்தில், "உன்னை அல்லாது ஊறு துணை மற்று அறியேனே" "கற்றாவின்மனம் போலக் கசிந்துருக

வேண்டுவனே" என்று அவர்கள் அருளிச் செய்துள்ளமை, நெஞ்சை நெகிழ்விக்கின்றது.

'சிவானந்த முதிர்வு' என்பது சிவபெருமானின் திருவடிகளையே நினைந்து நினைந்து, மனங் கசிந்து கசிந்து, வழிபடும் போது. பேரின்ப உணர்வு தலைப்படும்; அதன் பயனாக ஒருவகை பெருமிதம் ஏற்படும். அஃதே இங்குச் சிவானந்த முதிர்வு எனப்பட்டது.

நமது விருப்பம் சிவபெருமானின் திருவடிகளிலேயே மீதூர்ந்து செல்லச் செல்ல, இத்தகைய பேரின்ப நுகர்வு ஏற்படும்.

## 40. குலாப் பத்து

### ( அநுபவம் இடையீடு படாமை )

குலாவு + பத்து = குலாப்பத்து.

' குலாவுதல் ' என்பது மகிழ்தலைக் குறிக்கும்.

இப்பதிகத்தில் வரும் பத்துப் பாட்டுக்களிலும் " குலாத்தில்லை ஆண்டானை " என்னும் தொடர் இடம் பெற்றுள்ளது. திருத் தில்லையில் எழுந்தருளி நடனம் செய்யும் கூத்தப்பிரானை, மெய்யன் பினாலே வழிபட்டு, இன்பத் தேன் பருகிக் களித்து, மகிழ்ந்து இருக்கும் நிலையில், மணிவாசகப் பெருந்தகை இப்பதிகத்தை அருளிச் செய்துள்ளார்கள். எனவே, இது ' குலாப்பத்து ' எனப்பட்டது.

' அநுபவம் ' என்பது, ஆன்மா சிவபெருமானோடு இரண்டறக் கலந்து, ஒன்று எனும் தன்மை பொருந்திப் பேரின்பம் நுகர்தல் ஆகும்.

' இடையீடு ' என்பது, இடைவிட்டு இருத்தல் அஃதாவது தொடர்பு இல்லாது. இருத்தல் படாமை – பொருந்தாமை " இடையீடு படாமை " என்பது, தொடர்பின்றி இருத்தல் பொருந்தாமை; அஃதாவது, எப்போதும் தொடர்பு கொண்டு இருத்தல்.

' அநுபவம் ' இடையீடு படாமை ' என்பது, ஆன்மா சிவபெருமானோடு இரண்டறக் கலந்து நின்று நுகரும் நுகர்வு, என்றும் ஒழிவின்றி நிலைபெற்று இருத்தலைக் குறிக்கும். இஃதே உண்மையான மகிழ்ச்சி ஆகும்.

## 41, அற்புதப் பத்து

### ( அநுபவம் ஆற்றாமை )

'அற்புதம்' என்பது ஆச்சரியம்; அஃதாவது வியப்பு. உலகில் உள்ள மக்கள் அனைவரும் பெண் இன்பத்தில் மயங்குவது இயல்பு. அத்தகைய தையலார் மையலையும் ஒவித்து, அவர்களை இறைவன் ஆட்கொள்கிறான் என்பது வியப்பான செய்தியே ஆகும். மக்களுக்குள்ள இந்த மயக்க உணர்வைப் பெருந்தகை தம்மேல் ஏற்றிப் பத்துப் பாடல்களிலும் இக்கருத்தைக் கூறியருள்கின்றார்கள். 'திரிவேனை' 'கிடப்பேனை' எனவரும் சொற்கள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

'அநுபவம்' என்பது சிவாநுபவம். அஃதாவது, ஆன்மா சிவபெருமானோடு இரண்டறக் கலந்து, ஒன்று எனும் தன்மை பொருந்திப் பேரின்பம் நுகர்வுற்று இருத்தல் ஆகும்.

'ஆற்றாமை' என்பது, தாங்க முடியாமை மேலும் மேலும் பேரின்ப நுகர்வு வளரும் போது, அதனைத் தாங்க முடியாமல் நிற்பது, 'அநுபவம் ஆற்றாமை' ஆகும்.

அத்தகைய அநுபவம் ஆற்றாமையையே 'அற்புதம்' என்று கூறியருளியுள்ளார்கள்.

## 42. சென்னிப் பத்து

### ( சிவ விளைவு )

சென்னி என்பது தலை மணிவாசகப் பெருந்தகை, தமது தலைமேல் இறைவன் திருப்பெருந்துறையில், தன் இரண்டு திருவடிகளையும் வைத்துத், தீக்கை செய்து, ஆண்டு அருளியதை நினைந்து, அடியார்களைப் பேரின்பத்தில் அழுத்துவிக்கும் அத்திருவடிவன், தமது தலைமேலே மிளிர்ந்து ஒளியாய் விளங்கும் என்று கூறும் பத்துப்பாட்டுக்களை உடைய பதிகம் 'சென்னிப் பத்து ஆகும்.

இறைவனது வலத் திருவடி அறிவையும் இடத் திருவடி செயலையும் குறிக்கும், இறைவன் திருவடிகள் இரண்டும் நமது தலைமேல் இருப்பதாக எப்போதும் நினைந்திருப்பதால், நமது அறிவும் செயலும் இறைவனுடைய வியாபகத்துள் அடங்கியிருப்பதான உணர்வு தலைபடும், இதனைத் 'தாடலை' (தாள் + தலை) எனச்சாத்திரங்கள் கூறுகின்றன.

இறைவன் தாள் நம் தலைமேல் இருப்பதாக நினைந்திருப்பது இறைவனுக்கும் நமக்கும் உள்ள ஆண்டான் - அடிமை உறவை வளர்க்கும், இதுவே சிவானந்த விளைவு எனப்படும், சிவம் + விளைவு = சிவ விளைவு. 'சிவம்' என்பது பேரின்பம், சிவபெருமானின் திருவடிகள் பேரின்பத்தை விளைவிப்பதால். சென்னிப் பத்தில், 'சிவ விளைவு' கருத்துரையாக அமையப்பெற்றது. அன்பு நிலையில் நின்றார் மட்டுமே, இறைவனை அடைய முடியும் என இதில் மணிவாசகப் பெருந்தகை அருளிச்செய்துள்ளார்.

## 43. திருவார்த்தை

### ( அறிவித்து இன்புறுதல் )

'வார்த்தை என்பது செய்தி; திருவார்த்தை என்பது அருட் செய்தியைக் குறிக்கும். சிவபெருமான் மெய்யடியார்களுக்கு அருள் செய்யும் செய்திகளை அறிபவர்கள், சிவபெருமானுகவே ஆவார்கள் என்பதைக் கூறும் பத்துப் பாட்டுக்கள் அடங்கிய பதிகம், 'திருவார்த்தை' ஆகும்.

இச்செய்தியை, மணிவாசகப் பெருந்தகை, அருளறிவார், திறமறிவார், வகையறிவார், இயல்பறிவார், பரிசறிவார், கிடப்பறிவார், உருவறிவார், என்னும் சொற்களால் கூறியருளியுள்ளார்கள்.

இங்கே 'அறிவார்' என்பது, சார்ந்தன் வண்ணமாம் தன்மை யடையும் ஆன்மாவின் சிறப்பு இயல்பு என்பதைக் குறிக்கும்.

'அறிவித்து, என்பது, அறிவிக்க அறியும் தன்மை உடைய உயிர்கட்கு இறைவன் அறிவித்தால் அன்றி உயிர்கள் அறியமாட்டா என்பதைக் குறிக்கும், இஃது உயிரின் பொது இயல்பைக் குறிக்கும்.

'அன்பு உறுதல்' என்பது அவ்வாறு உயிர்கட்கு அறிவிப்பதன் நோக்கம், உயிர்கள் படிப்படியாக இறைவன் நமக்குச் செய்துவரும் பேருதவிகளை நினைந்து நினைந்து, அவன்மீது அன்புமீதூர்ந்து நிற்றலுக்கே ஆகும். 'அன்புஉறுதல்'என்பது' அன்பு இயல்பாகவே உண்டாக வேண்டும் என்பதாகும்.

## 44. எண்ணப் பதிகம்

### ( ஒழியா இன்பத்து வகை )

'எண்ணம்' என்பது, உள்ளக் கருத்து.

இறைவனை விட்டுப் பிரியாது, அவனடியார் தொகை நடுவே இருக்கும், பேரா இன்பம் அருளுதல் வேண்டும் என்னும் தமது உள்ளக் கருத்தை, மணிவாசகப் பெருந்தகை சிவபெருமானுக்கு விண்ணப்பிக்கும் ஆறு பாட்டுக்கள் அடங்கிய பதிகம், எண்ணப் பதிகம் ஆகும்.

'ஒழியா இன்பத்து உவகை' என்பது, இடையீடு இன்றி எப்போதும் உணரும் பேரின்ப மகிழ்ச்சியைக் குறிக்கும். இத்தகு பேரின்பப் பெரு மகிழ்வைப் பெறும் பொருட்டு விண்ணப்பிக்கும் செய்திகளைப் பாடல்கள் மூன்றிலும் காணலாம்.

"உன் அடியார் தொகை நடுவே, ஓர் உருவாய நின் திருவருள் காட்டி, என்னையும் உய்யக்கொண்டு, அருளே" என்னும்,

*"எத்தனையானும் யான் தொடர்ந்து, உன்னை*
*இனிப் பிரிந்து ஆற்றேனே"*

என்னும்,

"நின் நினைந்து உருகும் தன்மை என் புன்மைகளால், காணும் அது ஒழிந்தேன்; நீ இனி வரினும், காணவும் நாணுவனே" என்றும் பெருந்தகை உருகி உருகிப் பாடியருளியிருப்பதை நாமும் நமது கருத்தில் இருத்தி உருகி மகிழ்வோமாக.

## 45. யாத்திரைப் பத்து

### ( அநுபவாதீதம் உரைத்தல் )

'யாத்திரை' என்பது, பயணத்தின் பொருட்டுப் புறப்பட்டுச் செல்லுதலைக் குறிக்கும். இங்கே, பக்குவம் பெற்ற அடியார்கள், தாம் இதுவரையும் வாழ்ந்து வந்த, நிலையற்ற உலகவாழ்வை விட்டுப் புறப்பட்டுச் சிவபெருமான் திருவடியைப் அடையும் பொருட்டுச் சிவலோகத்திற்குப் பயணம் செல்வதைக் குறிக்கும். இஃது ஓர் உருவகமாய் அமைந்துள்ளது.

இனியும் இப்பூவுலகில் தங்கி இருக்காமல், சிவபெருமான் திருவடியைச் சேரும் காலம் வந்துவிட்டது; எனவே, காலந்தாழ்த்

தாமல் புறப்படும்படி, பெருந்தகை கூறியருளியுள்ளார்கள். பத்துப் பாடல்களைக் கொண்டே இப்பதிகத்தின் மூன்றாவது பாடலில், "அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு போமாறு அமைமின், பொய் நீக்கிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே" என்று அருளியிருப்பது நமது உணர்வைத் தட்டி எழுப்புகிறது.

இந்த யாத்திரைப் பத்தில், உலக அநுபவத்திற்கு எட்டாத சிவலோக வாழ்க்கையைப் பற்றி, பெருந்தகை கூறியருள்வதால் இதன் கருத்துரை "அநுபவ அதீதம் உரைத்தல்" எனப்பட்டது. அநுபவம்–சிவலோக வாழ்வநுபவம், அதீதம் – நமது அறிவுக்கு எட்டாதது; எளிதில் புலப்படாதது.

## 46. திருப்படை யெழுச்சி

### (பிரபஞ்சப் போர்)

படை – போர்; எழுச்சி – புறப்படுகை, உலக வாழ்க்கையை எதிர்த்துப் போர் செய்யப் புறப்படுவதைத் திருப்படை எழுச்சி பேசுகின்றது.

இப்போரில் படைவீரர்களாக இருப்பவர்கள், சிவனடியார்கள். இப்போரை வெல்லுவதற்குக் கருவியாக இருப்பது, 'அருள்' என்னும் வாட்படை, (வாள்) ; அஃதாவது ஞானவாள் இப்போரில் எதிரிகளாக இருப்பவர்கள், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல காரியங்கள் இப்போரில் வெற்றிபெற்றதும், நாம் ஆளப்போகும் இடம், சிவலோகம்.

இந்தப்போர் நடைபெறும் போர்க்களம், இந்த உலகம் எனவே இது பிரபஞ்சப்போர் எனப்பட்டது.

உலகியலில் நடைபெறும் போரில், நால்வகை அணிகள் இருப்பது இயல்பு, அவ்வாறே இறையியலில் நடைபெறும் இந்தப் போரிலும், நால்வகை அணிகள் உள்ளன, அவை வருமாறு;

தொண்டர்கள் — சரியையாளர்கள்

பத்தர்கள் — கிரியையாளர்கள்.

யோகிகள் — யோகநெறியாளர்கள்.

சித்தர்கள் — எண்வகைச் சித்திகளை இறைவனருளால் பெற்றவர்கள்,

" அண்டர் நாடு ஆள்வோம் நாம் " என்றமையால். இப்போரில் வெற்றி பெறுவது உறுதியாயிற்று.

## 47. திருவெண்பா

### ( அணைந்தோர் தன்மை )

பதினொரு பாட்டுக்களைக் கொண்ட இந்தப்பதிகம் 'வெண்பா' வடிவில் அமைந்துள்ளது, இரண்டாம் அடியில் நாலாம் சீர், தனிச் சீராக வருவதால், இது நேரிசை வெண்பா இனத்தைச் சேர்ந்தது.

'அணைந்தோர்' என்பவர், சிவபெருமானின் திருவடிகளைச் சார்ந்து, சிவப்பேறு பெற்ற பின்பு, சிவபெருமான் ஆணைப்படி, தம் எடுத்த உடலோடு. இவ்வுலகில் வாழும் சீவன்முத்தர்கள் ஆவர் 'தன்மை' என்பது அவர்களது இயல்பு ஆகும்.

சீவன் முத்தர்கள், உலகில் வாழும் காலத்தில், தம்மை ஒரேவழி பிராரத்துவ வினை – மல வாசனை தாக்கும்பொழுது, உலகக்காட்சியில் மயங்காமல், சிவக் காட்சியில் நிலைபெற்று இருத்தல் பொருட்டு, தமது அறிவு இச்சை செயல்களில் நிகழும் இயல்பே, 'அணைந்தோர்தன்மை' எனப்படும்.

சீவன்முத்தர் இயல்பை, அப்படியே படம்பிடித்துக் காட்டுவது போல் அமைந்துள்ள வெண்பா வருமாறு:

*" யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்*
*யாவர்க்கும் கீழாம் அடியேனை — யாவரும்*
*பெற்று அறியா இன்பத்துள் வைத்தாய்க்குஎன் எம்பெருமான்*
*மற்றுஅறியேன் செய்யும் வகை. "* **(624)**

## 48. பண்டாய நான்மறை

### ( அநுபவத்துக்கு ஐயமின்மை )

'பண்டாய நான்மறை' என்பது, பழைமையாக உள்ள, அறம் பொருள். இன்பம், வீடு என்னும் நான்மறைகளைக் குறிக்கும். இவ்வுண்மையினைத் திருச்சாழல் பதிகத்தின் 20–ஆவது பாடலில்,

*'' அருந்தவருக்கு அறம் முதல் நான்கு*
*அன்று அருளிச் செய்திலனேல்,*
*திருந்தவருக்கு உலகியற்கை*
*தெரியாகாண் சாழலோ ''*

என்று பெருந்தகை கூறியருளிய வாற்றால் அறியலாம்.

நீத்தல் விண்ணப்பத்தின் 43-ஆவது பாடலில் '' வேதம் மெய்ந்நூல் சொன்னவனே '' என்று கூறியருளியுள்ளதும் இங்கு நினைவில் கொள்ளத் தக்கது. இதில் 'வேதம்' என்பது, மேற் சொன்ன அறம் முதலாம் நான்மறையினைக் குறிக்கும். 'மெய்ந்நூல்' என்பது மெய்கண்ட சாத்திரங்கட்கு மூலநூல்கள் ஆகிய சிவாகமங் களைக் குறிக்கும். வேதம் பொது; ஆகமம் சிறப்பு. வேதம், உலகியல் வாழ்வு நெறியையும். ஆகமம், இறையியல் வாழ்வு நெறியையும் கூறுவன. இறையியல் வாழ்வில் பேரின்பப் பெருவாழ்வு ஒன்றே நோக்கமாக இருத்தல் பற்றி, ஆகமம் சிறப்பு நூல் எனப் பட்டது.

இப்பதிகத்தின் முதற்பாட்டு, '' பண்டாய நான் மறை '' எனத் தொடங்குவதால், இப்பதிகத் தலைப்பு அவ்வாறு அமைந்தது.

'அநுபவம்' என்பது, சிவபெருமான் திருவடிகளை அடைந்து, பெறும் பேரின்ப நுகர்வைக் குறிக்கும். அத்தகு அனுபவத்தை, அனுபவம் உடையவர் தம்முள் உணரலாமே அன்றி, பிறருக்குக் கூற முடியாது.

ஐயம் = சந்தேகம்; இன்மை = இல்லாது இருத்தல் அத்தகைய பேரின்ப நுகர்வைப் பெறுவதில் எந்த சந்தேகமும் இல்லை. என்றவாறு.

மணிவாசகப் பெருந்தகை, தாம் பெற்ற பேரின்ப அனுபவத்தை, இந்தப் பதிகத்தில் கூறியருளி, அதனைப் பெறுதற்கு உரிய வழியையும் அருளிச் செய்துள்ளார்கள். அப்பாடல் பகுதி வருமாறு.

*'' காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பம் எனப்*
*பேணும் அடியார் பிறப்பு அகலக் - காணும் பெரியான் ''*

'சிற்றின்பம் நுகர்தற்காக வழங்கப்பட்ட கருவி கரணங்கள் அனைத்தையும், சிவகரணங்கள் ஆக்கிப் பேரின்பம் நுகர்தற்குப் பயன்படுத்தும் அடியவர்களின் பிறப்பை அறுத்து. அவ்வடியவர்கள்

தன்னை விடயிக்குமாறு செய்யும் பெருந்தகைமை உடையவன் நம்சிவபெருமான்' என்பது இதற்குப் பொருள். எனவே, பேரின்ப நுகர்வுக்கு எந்தவித ஐயப்பாடும் தேவை இல்லை என்பது பெறப்பட்டது.

## 49. திருப்படையாட்சி

### ( சீவஉபாதி ஒழிதல் )

'படை' என்பது, இங்கே ஆன்மாவைப் பிணிக்கும் மும்மல காரியங்களை எதிர்த்து நிற்கும் போரைக் குறிக்கிறது.

'ஆட்சி' என்பது, அவற்றை எதிர்த்து நின்று, அடக்கி வெல்வதற்குத் துணைசெய்யும், இறைவனது வீரம்செறிந்த அருட் செயலைக் குறிக்கிறது.

'சீவ உபாதி' என்பது, ஆன்மா உலகில் வாழ்வதற்குத் துணை செய்யும் மாயா காரியத் தொகுதியாகும். சீவன் - ஆன்மா ; உபாதி – நன்மை செய்வனபோல் இருந்து தீமையைச் செய்யும் அசுத்த மாயா காரியங்கள்.

'ஒழிதல்' என்பது, ஆன்மாவை விட்டு இவை முற்றிலும் நீங்குதல்.

ஆக, சீவ உபாதி ஒழிதலால், ஆன்மாவுக்குள்ள முக்குணங்களும் நீங்கப் பெற்று சிவபெருமானுக்குள்ள அருட்குணங்கள் ஆகிய எண்குணங்களும் ஆன்மாவை வந்து அடையும். அதன் பயனாக, அத்தகு ஆன்மாவுக்கு விருப்பு வெறுப்பு இன்மையால் ஆகாதன என எவையும் இல்லை. எல்லாம் ஆகும்.

சீவ உபாதி ஒழிந்த நிலையில், விதிவிலக்குகள் இல்லை ; ஆதலால்' ஆன்மாவுக்கு ஆகாதது என்று எதுவும் இல்லை. இவ்வுண்மையையே இப்பதிகத்தின் எட்டுப் பாடல்களும் கூறுகின்றன.

## 50. ஆனந்த மாலை

### ( சிவானுபவ விருப்பம் )

ஆனந்தம் + மால் + ஐ = ஆனந்தமாலை. ஆனந்தம் – பேரின்பம் ; மால் – விருப்பம், 'ஐ' என்பது, 'மாலை' என்னும் சொல்லின் சுற்றில் வரும் சாரியை. ஆக, 'ஆனந்த மாலை' என்பது, பேரின்பம் அடையும் பொருட்டு, ஆன்மாவுக்குள்ள விருப்பம் என்னும் பொருளைத் தருவதாகும்.

'சிவானுபவம்' என்பது, ஆன்மா தன்முனைப்பு இன்றிச் சிவத்தோடு இரண்டறக் கலத்தலால், வேறு பொருளாக இருப்பினும் ஒன்று என்னும் தன்மைப்பட்டு, அச் சிவத்தில் அடங்கி நின்று உணரும் பேரின்ப நுகர்வு ஆகும்.

'விருப்பம்' என்பது, ஆன்மா அப்பேரின்ப நுகர்வை அடையும் பொருட்டுக் கொள்ளும் உள்ளார்ந்த தூய வேட்கை ஆகும்.

உயிரின் விருப்பப்படியே இறைவன் எல்லாவற்றையும் செய்து வருகிறான்; முத்தியையும் ஆன்மா விரும்பினாலன்றி, இறைவன் ஆன்மாவுக்கு அதனை வழங்குவதில்லை. எனவே, பேரின்ப நுகர்வை டைம் ஆன்மா, விரும்புவது இன்றியமையாததாயிற்று. உயிரின் விருப்பம் என்றும் இடையீடின்றி நிகழ்கிறது.

பதிகத்தின் ஏழு பாடல்களிலும் இவ்விருப்பம் வெளிப்படுத்தப் பட்டிருத்தலைக் காணலாம்.

## 51. அச்சோப்பதிகம்

### ( அநுபவவழி அறியாமை )

'அச்சோ' என்பது, வியப்பினைக் காட்டும் ஓர் இடைச் சொல். 'ஐயோ' என்பதும் வியப்பைக் குறிக்கும் இடைச்சொல்தான் என்றாலும், 'அச்சோ' என்பது மகிழ்ச்சியில் (Delight) வரும் வியப்பையும், 'ஐயோ' என்பது இரக்கத்தில் (Pity) வரும் வியப்பையும் குறிக்கும் இடைச்சொற்கள் ஆகும்.

சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட பெருமகிழ்ச்சியினால் ஏற்பட்ட வியப்பைக் கூறுவதால், பதிகம் முழுவதும் 'அச்சோ' என்னும் சொல்லாட்சி இடம் பெறுகிறது.

அனுபவம் = சிவானுபவம்

'வழி' என்பது, எப்படி வந்தது என்னும் முறைமையைக் குறிக்கும்.

அறியாமை, அவ்வழியை அறியாத நிலைமை

'ஆன்மா, சிவானுபவத்தில் சிவபெருமானோடு அத்துவிதமாய்க் கலந்து, தன்னுடைய அறிவு இச்சை செயல்கள் அனைத்தும், சிவ வியாபகத்துள், தான் வியாப்பியமாய் அடங்கி நின்று உணர்வதால், அவ்வனுபவம் தனக்கு எப்படி நிகழ்கிறது என்பதை அறியாமல் நின்று அனுபவிக்கிறது. இவ்வுண்மையையே, 'அனுபவ வழி அறியாமை' என்னும் கருத்துரை கூறுகின்றது.

உ

சிவமயம்

# 3. சைவ சித்தாந்த நோக்கில் திருவாசகச் சொல்லாட்சியின் மாட்சிமை

தோற்றுவாய் :

திருவாசகத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லும் தேனில் தோய்ந்த பலாச்சுளை போன்றது. திருவாசகத்தைப் படனம் செய்யும் போது ஒவ்வொரு சொல்லையும் நன்ருக மென்று சுவைத்தால், அதன் அருமை புரியும்.

ஒவ்வொரு சொல்லாக நிறுத்திப் பயிலும் போது, அச்சொல்லில் உள்ளம் தோய்ந்து. உயிர் உருகும் அனுபவத்தை உணரலாம். எனவேதான், 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்னும் பழமொழி தோன்றியது. திருவாசகச் சொல்லாட்சியின் மாட்சிமை அத்தகையது.

திருவாசகச் சொல்லாட்சியைக் கையாளும் சிலர், அதனைத் தங்கள் கொள்கைக்கு ஏற்பப் பொருள் கொள்கின்றனர். சைவசித்தாந்தக் கொள்கைக்கு ஏற்பச் சொல்லாட்சியினை எப்படிக் கையாள்வது என்பது குறித்து இப்பகுதி ஓரளவு விளக்குகிறது.

1. அவன் அருளாலே அவன்தாள் வணங்கி

(சிவபுராணம்) 18.

இத்தொடருக்குச் சிலர் 'இறைவன் அருள் இருந்தால்தான், இறைவனை வழிபடவும் இயலும்' என்று விளக்கம் கூறி வழிபாடு செய்யாமலிருப்பதற்குக் காரணம் சொல்லித் தப்பித்துக் கொள்கிருர்கள்.

இத்தொடருக்குப் பொருள் வருமாறு :

அநாதியே ஆணவ மலத்துள் அழுந்தி அறிவிழந்து கிடந்த நமக்குக் கருவி கரணங்களை இறைவன் வழங்கினுன். அவ்வாறு

இறைவன் வழங்கியதற்குக் காரணம் அவனிடம் உள்ள அருளே ஆகும். ' அருள் ' என்பதற்கு ' இரக்கம் ' என்று பொருள்.

அத்தகு அருள் இல்லையேல், இந்தப்பிறப்பு வாய்ப்பு நமக்கு ஏற்பட்டிருக்காது. பிறப்பு நீங்கலுறும் நிலையிலும் அவனருளே நமக்குத் துணையாக நின்று அவனது திருவடிப் பேற்றினை பெறச் செய்கிறது.

எனவே, அவனது அருளை மறந்து ஒருபோதும் இருக்கக் கூடாது. சிவபெருமானின் திருவருளே சிவபெருமானின் திருவடிப் பேற்றினை ( தாள் ) நாம் பெறுவதற்குப் பல்லாற்றானும் உதவுகிறது. ஏனவே அத்திருவருளையே நினைந்து வழிபடு வதாலேயே நமது ஊழ்வினையைப் போக்கிக் கொள்ள முடியும் என்றவாறு.

2. சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்

*( சிவபுராணம் ) 93*

திருவாசகத்தில் சொல்லப்படும் சொற்களுக்குப் பொருளை, அகராதி கொண்டு அறிந்து பயன் இல்லை.

முன்பே கூறியபடி, அச்சொல்லில் உள்ள உள்ளுறையைக் காண வேண்டும். எனவேதான், ' பொருள் அறிந்து ' எனக் கூறாமல், ' பொருள் உணர்ந்து ' என்று அருளிச்செய்தார்கள்.

' அறிவது ' என்பது பொதுவாகப் பொருளின் தன்மையை அறிவது ஆகும்; 'உணர்வது' என்பது, அப்பொருளை அனுபவிப்பது ஆகும். எனவே திருவாசகத்தில்வரும் பாட்டில் உள்ள செய்திகளை உள்ளூற உணர்ந்து உணர்ந்து அனுபவித்துச் சொல்ல வேண்டும், அப்படிச் சொல்லும்போது, அதன் சிறப்பில் நமது உள்ளம் கரையும்.

அப்போது, சார்ந்ததன் வண்ணம் ஆம் தன்மை உடைய உயிர், சிவபுரம் ஆகிய சிவ உலகத்தை அடைதற்குத்தகுதி உடையதாகிறது. "பொருள் உணர்ந்து" என்னும் தொடரை, என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

3. அருபரத்து ஒருவன் அவனியில் வந்து குருபரன் ஆகி அருளிய பெருமையை.

*போற்றித்திருஅகவல் (75 - 76)*

சிவபெருமான், எளிவந்த கருணையோடு. கீழ் இறங்கி வந்து. குரு வடிவில் அமர்ந்து, மணிவாசகப் பெருந்தகைக்கு அருளிச்செய்த அரிய பெரிய நிகழ்ச்சிகளை இதில் குறிப்பிடுகிறார்கள்.

சைவத்தில் உள்ள நால்வகை நெறிகளில், ஞானத்திற்கு உறவு, குரு – சிஷ்யத்தொடர்பு என்பதை இந்த இடத்தில் பெருந்தகை தெளிவுறுத்துகிறார்கள்.

இவ்வுண்மையையே, திருவெம்பாவையினும் பெருந்தகை மெய்ப்படுத்தியுள்ளார்கள். சிவனடியரைத் திருமணம் செய்துகொள்வதையே, சைவசமயத்துக் கன்னியர் விரும்புவதாகத் திருவெம்பாவைப் பாடல் 9 லும் 19 லும் பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

இவற்றிலிருந்து ஞானத்திற்கு உறவு முறை குரு – சிஷ்ய உறவே என்பது பெறப்படும்; நாயக – நாயகி பாவம் கூறுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை; அவ்வுறவு வைணவத்திற்கே உரிய சிறப்பு. சிவனடியார்களில் எவரும் இறைவனைக் கணவனாகக் கருதியதாக வரலாறே இல்லை. எனவே, குருநாதர்மாட்டுக் கொள்ளும் அன்பே, முத்திக்கு வழி வகுக்கும் என்பதை அறியவேண்டும்.

4. தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*( போற்றித் திருவகவல் - 164-165 )*

"எந்நாட்டவர்க்கும் இறைவன் ஒருவனே தான்; அவனைத் தென்னாடு 'சிவனே' எனப் போற்றுகிறது" என்பதே இதன் பொருள்.

'தென்னாடு' என்பது 'தென்பால் உகந்து ஆடும் தில்லைச் சிற்றம்பலவனை' முழுமுதற் றலைவனாக் கொள்ளும் தமிழ் நாட்டைக் குறிக்கும்.

சிவம் ' என்னும் சொல், 'நன்மை' என்னும் பொருளைத் தரும். எல்லா உயிர்கட்கும் நன்மையையே செய்யும் சிவபெருமான் ஒருவனே, இறைவன் என்னும் பெயர்க்குரியவன் என்பதை மெய்ப்படுத்தவே பெருந்தகை இவ்வாறு கூறியருளியுள்ளார்கள்,

சிவபெருமானை, தேவ தேவன், மகாதேவன் என்று கூறுவதற்குக் காரணம், மாயா புவனங்களை ஆளும் சதாசிவர், அநந்த தேவர், சீகண்டருத்திரர், குணிருத்திரர், மால், அயன் முதலிய தேவர்களுக்குத் தலைவனாய் இருப்பதனாலேயே ஆகும்.

மாயா புவனங்களில் ஒரு சிறு பகுதி, இந்த பூமி; இந்த பூமியில் உள்ள எல்லா நாடுகளிலுள்ளவர்களுக்கும், சிவபெருமான் ஒருவனே இறைவன் (தலைவன்) ஆவான்.

5. எம்பிரான் என்னை நீ செய்த நாடகமே (14)

சிவபெருமான், உயிர்கள் ஆகிய நாம் உய்யும் பொருட்டு, அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி, நமக்கு அருளுமாறு செய்கிறான்.

அவர்களுடைய அருளிப்பாடுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று, நமக்கு அறிவுறுத்தும் வகையில் அமைந்திருப்பது; மற்றொன்று, அருளாளர்கள் நமது இழிநிலைகளைத் தம்மேல் ஏற்றிப் பாடியிருப்பது; இன்னொன்று, இந்த அவதாரத்தில் அருளாளர்களுக்குக் கிடைத்த அனுபவங்களை அருளிச் செய்திருப்பது.

மூன்றாவது வகையில், அருளாளர்களுக்குள்ள அனுபவங்கள் அனைத்தும், நம்பொருட்டுச் சொன்னவை ஆகும். அவர்கள் துன்புறுவதாகச் சொல்வன அனைத்தும் நாடக மாத்திரையாகவே கொள்ள வேண்டும். சிவபெருமான் அவர்களை நம்பொருட்டு இப்பூவுலகிற்கு அனுப்பி வைத்துள்ளானே அன்றி, அவர்களுக்குள்ள உண்மையான வாழ்வை இங்கு வாழ்வதற்கு அன்று என்பது பொருளாகும். அஃதாவது, ஏற்கெனவே முத்தி பெற்ற அவர்கள், சீவன் முத்தர்கள் எனக் கூறப்படுவதற்குக் காரணம், இஃதே ஆகும்.

இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும் பொருட்டே, மணிவாசகப் பெருந்தகை, "என்னை நீ செய்த நாடகமே" என்றருளிச் செய்துள்ளார்கள்.

6. பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை எட்டினோடு இரண்டும் அறியேனையே (31)

'பட்டிமண்டபம்' என்பது, சமய உண்மைகளைத் தடை விடைகளில் வைத்து, ஆராய்தற்கு உரிய வித்தியா மண்டபம் ஆகும்.

"ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள், பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்" என்றது மணிமேகலை. சிலர், இத் தொடருக்கு 'நாயை மண்டபத்து ஏற்றியது போல்' என்று பொருள் கூறுகிறார்கள். அது பொருந்தாது.

முதலில் உள்ள 'ஏற்றினை' என்பது, முன்னிலைப் பெயர். பின் வரும் 'ஏற்றினை' என்பது, ஊர்தியாகப் பெற்ற எருதினை உடையாய் எனப் பொருள்படும்.

"எட்டினோடு இரண்டும்" என்பது, அகர, உகர மகரங்களின் இயைபு ஆகிய பிரணவ மந்திரத்தைக் குறிக்கும். தமிழில், எட்டு என்னும் எண்ணை 'அ' என்றும், 'இரண்டு' என்னும் எண்ணை 'உ' என்றும் எழுதுவர். 'இரண்டும்' என்றதால் மகர ஒற்று இருத்தல் பற்றி மகரமும் பெறப்பட்டது.

சிவமந்திரமாகிய 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்து, பிரணவத்தின் விரிவே, ஆகலின் இங்கு இத்தொடர் அஞ்செழுத்தைக் குறிக்கும்.

இவ்வளவு பொருள்கள் நிறைந்த சொல்லாட்சியின் மாட்சிமைக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டே ஆகும்.

### 7. அழுதால் உன்னைப் பெறலாமே? (94)

திருவாசகத்தில் வரும் இத்தொடருக்குப் பெரும்பாலோர், 'அழுதால் இறைவன் அடியைப் பெறலாம்' என்று பொருள்கூறி வருகிறார்கள். இந்தப் பாடலில், "அருளாய் அடியேன் உனை வந்துறும் ஆறே" என்று பெருந்தகை அருளிச் செய்திருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 'உன்னை அடைவதற்கு உரிய வழியை அருள் செய்வாய்' என்பது இதன் பொருள். எனவே, "அழுதால் உன்னைப் பெறலாமே?" என்பதற்கு, 'அழுதால் இறைவன் அடியைப் பெறலாம்' என்பது பொருளாகாது.

"பெறலாமே?" என்பதில் உள்ள ஏகாரம் வினாப்பொருட்டு வந்தது. "யானே பொய்" என்பதில் உள்ள ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. 'யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே?' என்பதில் உள்ள "ஆனால்" என்ற சொற்கு, 'அவ்வாறாயின்' என்பது பொருள் எனவே, அன்பு பொய் ஆயின், அழுகின்ற அழுகையும் பொய் அழுகையாகத் தானே இருக்க முடியும்? எனவேதான், 'வினையைப்பட்டுப் பொய்யான அன்பு கொண்டு நான்

அழுதால், உன்னை அடைந்து விடமுடியுமா ? முடியாது ; எனவே, உன்னை அடைவதற்குரிய வழியைக் காட்டி அருள்செய்வாய், என்று இந்தப்பாட்டில், பெருந்தகை அருளிச் செய்திருப்பதாகப் பொருள் கொள்வதே பொருத்தமாகும்.

"அழுது அடி அடைந்த அன்பர்" என்று திருவிளையாடல் புராணத்தில், பரஞ்சோதி முனிவர், மணிவாசகப் பெருந்தகையைச் சுட்டிக் கூறுவதற்கு என்ன காரணம் ?

மணிவாசகப் பெருந்தகை உண்மையிலேயே அழுது அடி அடைந்த அன்பர் என்பதில் எந்த ஐயப்பாட்டிற்கும் இடம் இல்லை.

நாம் அழுகிற அழுகைக்கும், பெருந்தகை அழுகிற அழுகைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளவேண்டும், நாம் துன்பம் தாங்கமாட்டாது, இறைவனை நோக்கி அழுவோம்; துன்பம் நீங்கியதும் இறைவனை மறந்து விடுவோம், நமது அழுகை உண்மையான அழுகையன்று; ஆற்றமாட்டாது அழுத அழுகையாகும், இந்த அழுகையால், இறைவனை அடைய முடியாது.

மணிவாசகப் பெருந்தகை அழுத அழுகை, சிவபெருமானைப் பிரிந்து இருப்பதற்கு அஞ்சி, உடனே அன்போடு அவனைக் கலக்க வேண்டும் என்று எண்ணி அழுத, உண்மை அழுகையாகும், இவ்வுண்மை அழுகையினை.

*"அழுகேன் நின்பால் அன்பா மனமா அழல்சேர்ந்த*
*மெழுகே அன்னார் மின்னார் பொன்னார் கழல் கண்டு*
*தொழுதே உன்னைத் தொடர்ந்தாரோடும் தொடராதே*
*பழுதே பிறந்தேன், என்கொண்டு உன்னைப் பணிகேனே"* 92

இந்தப்பாடலை வைத்துத்தான், திருவிளையாடல் புராணத்தில், "அழுது அடி அடைந்த அன்பர்" என்று மணிவாசகப் பெருந்தகையைக் குறித்துப் பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்தார் என்க.

**8. அவன் எம்பிரான் என்ன, நான் அடியேன் என்ன இப்பரிசே. (13)**

"அவன் எம்பிரான்" என்றது, இன்ப வடிவினன் ஆகிய என் தலைவனைக் குறிக்கும், என் தலைவன் சிவபெருமான் ஒருவனே ஆவன்.

அவனை நான் தலைவனாகக் கொண்டிருப்பதற்குக் காரணம், நான் செய்யும் தவறுகளை யெல்லாம், நான் கூறாமலே அவனே அறிந்

திருந்தும், என்னை விலக்காமல், என்னை ஆளாகக் கொண்டு எனக்கு அருள் செய்து வருகின்றான் என்பதாலேயே ஆகும்.

இவ்வுண்மையை,

*" என் சிறுமை கண்டும் ஆண்டு கொண்டான் "*

என்னும் தொடர் மெய்ப்படுத்துகின்றது.

அவன் என்னை ஆள்வதால், அவன் எனக்கு ஆண்டான்; நான் அவனது கருணையினால் ஏற்ற அடியேன் ஆவேன். எத்துணைப் பெரியோன் ஆகிய அவன், இந்த அடிமையாகிய என்னை ஆட்கொண்ட தன்மையை எப்படிப் பேசுவது ?

சித்தாந்த சைவத்தில், சிவபெருமானுக்கும் உயிர்கள் ஆகிய நமக்கும் உள்ள தொடர்பு, என்றும் ஆண்டான் - அடிமைத் தொடர்பு என்பதை இந்தத் தொடர் தெளிவாகக் கூறுகின்றது.

9. அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை — (31)

'புணை' என்பது 'தெப்பம்' ஆகும்.

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து, அலைகளால் அலைக்கப்பட்டு, பற்றிக்கொள்வதற்கு ஒன்றும் இன்றித் தடுமாற்றம் உறும்போது, திருவைந்தெழுத்து தெப்பம் போன்று உதவி, நம்மைக் கரை சேர்க்கிறது என்பதை இத்தொடர் குறிக்கின்றது.

அஞ்செழுத்தை நெஞ்சில் அழுத்தியதும், மூவகை வினைகளும் அழிந்து ஒழிகின்றன. அஞ்செழுத்தை ஓதுவது நமது கடன்; நம்மைக் கரை சேர்ப்பது இறைவன் கடன்.

இப்பாட்டில் 'மல்லல் கரை' என்றொரு தொடர் வருகிறது. மல்லல் – வளம். மல்லற்கரை என்பது, தோற்றக்கேடுகள் இல்லாத, மிக்க வளம் பொருந்திய வீட்டு இன்பம் ஆகிய பேரின்பப் பெரு நிலையைக் குறிக்கும்.

'காமவான் சுறவின் வாய்ப்பட்டு' என்னும் தொடர், காமம் ஆகிய பெரிய சுறாமீன் வாயில் சிக்கித்தவிப்பதைக் குறிக்கும். உலகில் நடம் செய்யும் புதிய கன்மங்களில், பெரும் பாலானவை மகளிரைப் பற்றியே உள்ளனவாக இருத்தலின், அதனைச் சுறாமீனாக உருவகித்தார்.

அத்தகு கொடிய வினைகளும் அஞ்செழுத்தினால் நீங்கும் என்றவாறு.

10. " வாழ்த்துவதும் வானவர்கள்
தாம் வாழ்வான், மனம் நின்பால்
தாழ்த்துவதும், தாம் உயர்ந்து
தம்மை எல்லாம் தொழவேண்டி " (20)

வானவர்கள் = தேவர்கள்

தேவர்கள், சிவபெருமானை வழிபாடு செய்வதற்கும், அன்பர்கள் வழிபாடு செய்வதற்கும் வேறுபாடு உண்டு. அன்பர்கள், பயனற்ற இந்தப் பிறப்பை அறவே நீக்கிக் கொள்ளும் பொருட்டுச் சிவபெருமானை வழிபடுகிறார்கள்.

தேவர்கள் வழிபடுவதற்குக் காரணம், மேன் மேலும் சுவர்க்க போக வாழ்வைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டே ஆகும்.

தேவர்கள் சிவபெருமானிடத்துப் பணிவுடையவர்களாக இருப்பதற்கும், அன்பர்கள் பணிவுடையவர்களாக இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. அன்பர்கள், சிவபெருமானைத் தங்கள் தலைவனாகவும் தாங்கள் அவனுக்கு என்றும் அடிமையாகவும் இருப்பதை நினைவில் கொண்டு, சிவபிரானிடத்துப் பணிவுடையவர்களாக இருக்கிறார்கள்.

தேவர்கள் சிவபெருமானிடத்துப் பணிவுடையவர்களாக இருப்பதற்குக் காரணம், மனிதர்கள் அனைவரும் அவர்களுக்குப் பணிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், தாங்கள் அதனால் உயர்வுடையவர்களாகக் கருதப்பட வேண்டும் என்பதற்காகவுமே ஆகும்.

11. ஊனார் உடல் புகுந்தான்; உளம் பிரியான்; உயிர் கலந்தான் (506)

உடலின் இழிவைக் குறித்தற்கு ' ஊன் ஆர் உடல் ' என்றார். ' உடல் புகுதல் ' என்பது இறையன்பு மீதூர்ந்த அன்பர்களின் உடலைத் தூவெளி ஒளியால் நிரப்பி, அதனுள் இறைவன் சிவமயமாய் விளங்குதலைக் குறிக்கும்.

'உளம் பிரியான்' என்பது, சீவபோதம் நீங்கின உள்ளத்தில் சிவம் நிலையாய் விளங்குதலைக் குறிக்கும்.

'உயிர் கலந்தான்' என்பது உயிரோடு சிவம் அத்துவிதமாய்க் கலந்து, பேரின்பம் அளித்தல் ஆகும்.

உடல் புகுதல், பாசத்தன்மை நீக்கத்தையும்,

உளம் பிரியாதிருத்தல், பசுத்தன்மை நீக்கத்தையும்,

உயிர் கலந்திருத்தல், பேரின்பப் பேற்றினை அளித்தலையும் குறிக்கும்.

அந்நிலையில், ஆன்மா சிவமாம் தன்மை பெற்று நிற்பதால், அவ்வான்மா பெற்றுள்ள உடலும் சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை யுற்று நிற்கிறது.

இது சித்தாந்த அத்துவித நிலையைத் தெளிவுபடுத்தும் பகுதி யாகும். இவ்வுண்மையைக் கண்ணப்ப நாயனார் வரலாற்றில் பொருத்தி நோக்குவது பொருத்தமாக இருக்கும்.

**கண்ணப்ப நாயனாரின் உடல் மாயாகாரியங்களால் ஆகிய ஊனுடல். காளத்தியாரின் திருமேனி, அருளால் ஆகிய அருட்டிருமேனி.**

இருவேறு தன்மையுடைய உடல்களை இருவரும் பெற்றிருக்கும் போது கண்ணப்ப நாயனாரின் உடலிலிருந்து பெயர்த்து எடுக்கப் பட்ட கண்ணினைக் காளத்தியாரின் அருட்டிருமேனியில் உள்ள கண்ணில் வைத்துப் பொருத்தினால் அஃது எப்படிப் பொருந்தும்?

இத்தடைக்கு விடையளிக்கும் வகையில் இந்தத் திருவாசகப் பகுதி அமைந்துள்ளது. கண்ணப்ப நாயனார் பசு பாசங்கள் நீங்கப் பெற்ற நிலையில், அவரது பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங்கள் ஆகிவிடுகின்றன. அந்நிலையில் அவரது உடல் ஊனுடலாக அன்றி, அருட்டிருமேனியாகவே ஆகிவிட்டிருந்தது.

எனவே, அவரது வலக் கண்ணின் ஒளி, இறைவனின் வலக் கண் ஆகிய சூரிய மண்டலத்தைச் சார்ந்ததாக இருந்தது. அந்நிலையில் கண்ணப்ப நாயனார், தம் கண்ணைப் பெயர்த்து, இறைவனின் வலக் கண்ணில் பொருத்தியபோது, அக்கண்ணோடு இக்கண், பொருந்தி நின்றது.

இதிலிருந்து, சார்ந்ததன் வண்ணமாம் தன்மை பற்றி, உயிர்க்குள்ள பசுகரணங்கள் பதிகரணங்கள் ஆகின்றன என்பது பெறப்பட்டது.

**12. நான் வினைக்கேடன் என்பாய் போல, இனையன் நான் என்று உன்னை அறிவித்தாய். (26)**

இந்தப் பகுதியில், சிவபெருமான் மணிவாசகப் பெருந்தகையின் முன்பு தோன்றித் தன்னைத் தானே அறிமுகப்படுத்திய செய்தி காணப்படுகிறது.

இத்தொடருக்குப் பொருள் வருமாறு: உயிர்களுக்குற்ற வினையை ஒழிப்பவன் நான் என்று கூறுவாய் போல, 'நான் இன்ன தன்மையை உடையவன்' என்று உன்னை எனக்கு அறிவித்தாய்.

இறைவனை 'இன்ன தன்மையன்' என அறிய இயலாது என்று கூறுவதைத்தான் இதுவரை கேட்டிருக்கிறோம். ஆனால், அவன் எப்படிப்பட்டவன் என்பதை இங்குப் பெருந்தகை அருளிச் செய்திருக்கிறார்கள்.

'என்பாய் போல' என்ற தொடர், வெளிப்படையாகக் கூறாமல், குறிப்பால் உணர்த்தியமையைக் குறிக்கிறது.

இத்தொடரிலிருந்து இரு உண்மைகள் பெறப்படுகின்றன. அவை வருமாறு:

ஒன்று, நமது வினைகளைப் போக்குபவன் சிவபெருமான் ஒருவனே அன்றி வேறு எவரும் இல்லை என்பது; மற்றொன்று, இறைவனுக்கும் நமக்கும் இடையில் வேறு எவரும் தேவை இல்லை என்பது. எனவே அவனை அன்றி வேறெந்த தெய்வத்தையும் வழிபடலாகாது, என்பது தெளியலாயிற்று.

**13. ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு, ஆயிரம் திருநாமம் பாடி, நாம் தெள்ளேணம் கொட்டாமோ (235)**

இந்தப்பகுதி, சிவபெருமானின் சிறப்பு இயல்பையும் பொது இயல்பையும் குறித்துப் பேசுகின்றது. சிவபெருமானின் பொது இயல்பு, எண்ணற்ற வடிவங்களை உடைமை ஆகும். எனவே, எண்ணில்லாத நாமங்களும் அவ்வாறே உள்ளன. சிவபெருமானின் சிறப்பு இயல்பு தத்துவங்கட்கு அப்பாற்பட்டது. அந்நிலையில் சிவபெருமானுக்கு எந்த வடிவமும் இல்லை; எனவே, அவனுக்குப் பெயரும் கிடையாது.

சிவபெருமானின் பொது இயல்பை நோக்கி மட்டுமே, பல உருவங்களில் வைத்துப் பல நாமங்களைச் சொல்லி வழிபட முடியும். மெய்யுணர்வுடைய ஞானிகள் மட்டுமே, சிவபெருமானின் சிறப்பு இயல்பில் அவனோடு இரண்டறக் கலந்து, இடையுறாது இன்புற்று இருப்பர்.

நம் போன்றார்க்கு, அஃது இயலாமையின், சிவபெருமானைப் பொது நிலையில் வைத்தே நம்மால் மன மொழி மெய்களைக் கொண்டு வழிபட இயலும் என்பதை இப்பகுதி தெளிவுறுத்துகின்றது.

**14. நானேயோ தவம் செய்தேன் 'சிவாய நம' எனப் பெற்றேன்** 555

இந்தத் தொடர், சிவஞான போதம் எட்டாம் சூத்திரத்தில் வரும், "தவத்தினில் உணர்த்த" என்னும் தொடருக்கு, விளக்க மாக அமைந்துள்ளது.

முன் பல்வேறு பிறப்புக்களில் செய்த தவத்தின் பயனாகவே, திருவைந்தெழுத்து மந்திர உபதேசத்தைச் சிவபெருமான், மணிவாசகப் பெருந்தகைக்குத் திருப்பெருந்துறையில் அருளிச் செய்தான் என்று அவர்கள் தாம் பெற்ற அருளனுபவத்தைக் கூறுகிறார்கள்.

'சிவாய நம' என்னும் சூக்கும பஞ்சாக்கரத்தைப் பெறுவது அவ்வளவு எளிதான செயல் அன்று. பெருந்தவம் செய்திருந்தால் அன்றி அது கிட்டாது. எனவேதான், "நானேயோ தவம் செய்தேன்" என்றருளிச் செய்தார்கள்.

இந்தத் திருமந்திரத்தைக் குருமூலமாகப் பெறவேண்டும் என்பதைக் குறிப்பதற்கே 'பெற்றேன்' என்று அருளிச் செய்திருக் கிறார்கள்.

இந்த அஞ்செழுத்தில் உயிரின் வளர்ச்சி முறைமை (Soul evolution) அடங்கியுள்ளது. இதனை ஓத ஓத, உயிரை நடத்திக் கொண்டிருக்கும் மறைப்பாற்றல், அருளாற்றலாக மாறி, அது படிமுறையில் உயிர்க்கு அறிவு விளக்கம் ஏற்படச் செய்து முத்திப் பேற்றினைப் பெறுவிக்கும்.

15. காணும் கரணங்கள் எல்லாம்,
பேரின்பம் எனப் பேணும்
அடியார், பிறப்பு அகலக் காணும் 633

உலக வாழ்வில் சுட்டி அறிவதற்கும், அச்சுட்டறிவின் வழி செயல் நிகழ்தற்கும், அவ்வறிவாலும் செயலாலும் சிற்றின்பம் நுகர்தற்கு ஏதுவாயுள்ளவை கருவி கரணங்கள் ஆகும். ஆணவமல இருளை நீக்கும் பொருட்டு அவற்றைச் சிவ கரணங்கள் ஆக்கி, பேரின்பம் நுகர்தற்கு ஏதுவாகவே இக்கருவி கரணங்கள் அமைந்துள்ளன. அவ்வாறு கருதும் அன்பர்களுக்கு, மேலும் பிறப்பு ஏற்படாத வகையில், அவர்களோடு உடனாய் நின்று, தன்னை விடயிக்குமாறு, சிவபெருமான் அருளிச் செய்வான் என்பது இத்தொடருக்குப் பொருள்.

சமய வாழ்வின் குறிக்கோள் இஃதே ஆகும். இவ்வுண்மையையே

*"பெற்ற சிற்றின்பமே பேரின்பமாம் அங்கே முற்ற வரும் பரிசு"* 33

என்று திருவுந்தியார் தெளிவுறுத்துகின்றது.

நமது கருவிகரணங்களைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய தவநெறிகளில் பயன்படுத்துவோமாயின், அதுவே பேரின்ப நுகர்வுக்கு ஏதுவாக அமையும்.

16. "தொண்டர்காள் தூசி செல்லீர்;
பத்தர்காள் சூழப்போகீர்;
ஒண்திறல் யோகிகளே, பேரணி உந்தீர்கள்;
திண் திறல் சித்தர்களே, கடைக்கூழை செல்மின்கள்
அண்டர் நாடு ஆள்வோம் நாம் அல்லல்படை வாராமே"
166

தொண்டர்கள் — சரியையாளர்கள்

பத்தர்கள் — கிரியையாளர்கள்

யோகிகள் — யோகம் பயில்பவர்கள்

சித்தர்கள் — ஞானம் பயிலும் சிவஞானிகள்

தூசிசெல்லுதல் — முன் அணியில் செல்வது

சூழப்போதல் — நான்கு பக்கங்களிலும் அணிவகுத்துச் செல்லுதல்

ஒண்திறல் — ஒளிவிளங்கப் பெற்ற அருள்வலி உடைமை

பேரணி உந்துதல் — பெரும்படையாக எழுந்து செல்லுதல்

திண்திறல் — மனவலி உடைமை

கடைக் கூழை — கடைசித் தொண்டர்படை

அண்டர் நாடு — சிவலோகம்

உயிர்களை விட்டுப்பிரியாது, அண்டியிருப்பவன் சிவபெருமான் ஒருவனே ஆவன். எனவே அவன் 'அண்டன்' எனப்படுகிறான்; அவன் நாடு, 'அண்டர் நாடு' எனப்பட்டது.

ஆள்தல் – அந்நாட்டில் அடியார் கூட்டத்தோடு இருந்து, பேரின்பம் நுகர்ந்து கொண்டிருத்தல்.

இப்பாட்டில், சிவநெறியாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் தொண்டாற்ற வேண்டும் என்பதை மணிவாசகப் பெருந்தகை வலியுறுத்துகின்றார்கள்.

17. செம்பொருள் துணிவே ...... .. சிவபெருமானே 536

'செம்பொருள்' என்பது, ஞானிகள் ஐயம் திரிபு இன்றி அறுதியிட்டு உறுதிபெறக் கூறும் மெய்ப்பொருள் ஆகிய சிவபெருமானை மட்டுமே குறிக்கும்.

செம்மை + பொருள் = செம்பொருள். செம்மை – நேர்மை – உண்மை – நன்மை. உயிர்களுக்குள்ள மல நோயைப் போக்கி உயிர்களுக்கு நன்மை செய்து, உயிர்களைச் செம்மைப் படுத்துபவன் சிவபெருமான் ஒருவனே அன்றி, வேறெவரும் இலர் என்பதைத் துணிந்து கூறுவதால் 'செம்பொருட்டுணிவு' எனப்பட்டது.

சிவபெருமான் ஒருவனே பிறப்பு அற்றவன்; அவன் நின்மலன் ஆகலின், விருப்பு வெறுப்பு அற்றவன். எனவே, அவன் ஒருவனாலேயே, உயிர்கட்குற்ற பிறவிப்பிணியைப் போக்க முடியும். இவ்வுண்மையையே திருவள்ளுவர்,

*"பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பு என்னும்*
*செம்பொருள் காண்பது அறிவு"* 358

என்று அருளிச்செய்தார்.

'சிறப்பு என்னும் செம்பொருள்' என்பதற்கு, 'வீடுபேற்றிற்கு நிமித்த காரணம் ஆகிய செவ்விய பொருள்' என்று பரிமேலழகர் கூறியுள்ள உரை இங்கு ஆழச் சிந்தையிற் கொண்டு தெளிவு பெறத் தக்கது.

18. திருவுரு அன்றி மற்றோர் தேவர் எத்தேவர் என்ன
அருவரா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே 517

'அச்சப்பத்து' என்னும் பதிகத்தில், இப்பகுதியில், மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்திருக்கும் செய்தி, அனைவரும் நினைவில் கொண்டு, சமய வாழ்வு வாழும் முறையை வலியுறுத்துகின்றது.

சிவபெருமானை அன்றி, வேறு எவரையும் கடவுளாகக் கருதக் கூடாது என்பதோடு அமையாமல், அவனது திருவுருவங்கள் ஆகிய சதாசிவ மூர்த்தம் உட்பட 26 மூர்த்தங்களைத் தவிர வேறு வடிவங்களை வழிபடக்கூடாது என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

அதுமட்டுமன்றி, பிற தெய்வங்களைக் கண்டாலும், அத்தெய்வங் களையும் சிவபெருமானாகவே கண்டு, சிவ உணர்வோடு வழிபட வேண்டும்.

அவ்வாறு கொள்ளாமல், பிறதெய்வங்களைச் சிவபெருமானுக்கு ஒப்பாகவோ, மேலாகவோ, அடுத்தபடியாகவோ கொள்ளக்கூடாது, அப்படிக் கொள்பவர்கள், சிவ பரத்துவ உண்மையைச் சரிவர உணராதவர்கள் ஆவார்கள்.

சிவபெருமானைப் போலவே, பிறதெய்வங்களை முழு முதற் பொருளாகக் கொண்டு வழிபடுபவர்கள், எத்தனை பிறப்புக்கள் பிறந்தாலும், அவர்கள் உண்மையை உணர முடியாது.

சிவபெருமானுக்கு ஒப்பாகப் பிறதெய்வங்களைத் தொழுபவர்களைக் கண்டு, நாம் மனக்கூச்சம் (அருவருப்பு) அடையவேண்டும். அவர்களுக்காக இரக்கப்பட்டுப் பெருந்தகை இவ்வுண்மையை வெளிப் படுத்தியுள்ளார்கள்.

*"யாவருக்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்*
*யாவர்க்கும் கீழாம் அடியேனை - யாவரும்*
*பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கு எம்பெருமான்*
*மற்றறியேன் செய்யும் வகை"* 624

சிவபெருமான் ஒருவனே, உயிர்கள் உய்யும் பொருட்டு ஐந்தொழில் ஆற்றுகிறான்; மற்றத் தெய்வங்கள் தனித்த ஒரு தொழிலே செய்கின்றன, ஐந்தொழில் புரிவதால், சிவபெருமானின் ' **பேரருள் உடைமை** ' தெற்றெனப் புலப்படுகிறது, எனவே, சிவபெருமானை " **அளவிலாச்** சீருடையான் " என்று பெருந்தகை அருளிச் செய்தார்கள், ஐந்தொழிலுக்குத் தொடக்கமும் முடிவும் இல்லாமையால் அஃது அளவிலாச் சீர் உடையது ஆயிற்றி

எல்லா உயிர்களுக்கும் மேலான நிலையில் இருப்பவன், என்றும் ஐந்தொழிலை ஆற்றிக் கொண்டிருக்கும் சிவபெருமான் ஒருவனே ஆவன்; எனவே அவனை, ' யாவர்க்கும் மேலாம் சீருடையான் " என்றார்கள்.

இன்பம் இரு வகைப்படும், நமது அறிவுக்குப் புலப்பட்டு நாம் நுகரும் உலகியல் இன்பம் ஒருவகை, இவ்வுலகியல் இன்பமும் இறைவன் நமக்குத் தருவதாலும், இதனை அவனிடம் பெற்றதாலும் இது " **பெற்று அறியும் இன்பம்** " ஆகும்,

மற்றொரு வகை இன்பம், இறை இன்பம், அந்த இன்பத்தையும், இறைவன் வழங்கவே, நாம் பெறுகிறோம். ஆயினும், அந்த இன்பத்தைப் பெறும் போது, நமது அறிவு அதனைப் பெற்றதையே அறியாது; அஃதாவது அவ்வின்பத்தைத் துய்க்கும் போது, நமது அறிவு, இறைவனின் அறிவாற்றலில் அடங்கி நிற்கும், அத்தகைய இன்பத்தையே " **பெற்று அறியா இன்பம்** " என்று பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள்.

அத்தகு " அறியா இன்பம் " பெறற்கரியது அதனைச் சிவபெருமான் ஒருவனே நமக்குத் தரமுடியும். அவன் பேரின்ப வடிவினன். எனவே, " பெற்றறியா இன்பத்துள் நம்மை இருத்தும் " சிவபெருமானுக்கு நாம் என்ன கைம்மாறு செய்து விட முடியும் ? அவனுக்குக் கொடுப்பதற்கு நம்மிடம் ஏதும் இல்லையே ? எனவே, " **செய்யும் வகை அறியேன்** " என்று மணிவாசகப் பெருந்தகை, நம்முடைய இயலாமையைத் தம்மேல் ஏற்றி, இதனை அருளிச் செய்துள்ளார்கள்.

" யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான் " முன்பு, நம் நிலை எத்தகையது ? சிவபெருமானிடத்து நம்மைவிட அன்பு மீதூர்ந்து அவனையே நினைந்திருக்கும் அன்பர்கள் பலர் உளர், எனவே, அத்தகையோர் " **யாவர்க்கும் கீழாம் அடியேன்** " என்ற

உணர்வு நம்மை விட்டு, என்றும் அகலாது இருக்க வேண்டும் என்பதே இப்பாடலின் கருத்துப் பொருளாகும்.

20. உன்னை வந்திப்பதோர் நெறி அறியேன்,
நின்னையே அறியேன்; நின்னையே
அறியும் அறிவு அறியேன்;
உடையாய், அடியேன் உன் அடைக்கலமே" 416

சிவபெருமானை நம்மால் எளிதில் அறிய முடியாமையை இப் பகுதியில் பெருந்தகை அருளிச் செய்துள்ளார்கள். இதன் பொருள் வருமாறு.

என்னை உடையவனே, உன்னை வழிபடுதற்கு உரிய சிவாகம நெறிகளை அடியேன் அறியேன்; ஒருவேளை அந்நெறிகளை ஒருவாறு அறிந்தாலும், உன்னை உள்ளவாறு உணரும் வழியை அறியேன்; உன்னை உள்ளவாறு உணர்தற்கு வழிகாட்டும் சிவஞானத்தையும் அடியேன் அறியேன். எனவே, நீயே எனக்கு அடைக்கலம்; உன்னை விட்டால் எனக்கு வேறு புகல் இல்லை.

இந்தப் பகுதியை, நுட்பமாக நோக்கும் போது, ஓர் உண்மை புலப்படும். அஃதாவது, சிவபெருமானை எப்படி வழிபடுவது என்னென்ன வார்த்தைகளைச் சொல்லி வழிபடுவது – என்பன போன்ற வழி முறைகள் நமக்குப் புரியவில்லை என்பதே அவ்வுண்மை.

இதிலிருந்து, நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று உள்ளது. நீதிமன்றங்களில் ( Court of Law ) நமது வழக்குகளை எப்படி எடுத்துரைக்க வேண்டும் என்பது நமக்குத் தெரியாது; என்ன என்ன வார்த்தைகளைச் சொல்லி வழக்காட வேண்டும் என்பது நமக்குத் தெரியாது; அவற்றை எந்தமுறையில் மன்றத்தில் வைத்தால் ( Presentation of the case ) வழக்குகளை வெல்லலாம் என்பதும் நமக்குத் தெரியாது. அவற்றையெல்லாம் முறைப்படி நீதிபதியிடம் கூறி நமது வழக்குகளை வாதாடுவதற்கு என்று வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அதற்கெனப் பயிற்று விக்கப்பட்டவர்கள்.

அவ்வாறே, சிவபெருமானிடத்து என்னென்ன வார்த்தைகளைக் கூறி வழிபட வேண்டும் என்பது நமக்குத் தெரியாது; அவனிடத்து எப்படி அன்பு செலுத்த வேண்டும் என்பது நமக்குத் தெரியாது;

நமக்குள்ள குறைபாடுகளை எந்த முறையில் அவனிடத்தில் முறையிட வேண்டும் என்பதும் நமக்குத் தெரியாது.

இவற்றையெல்லாம் நமக்கு அறிவுறுத்தும் பொருட்டே, சிவபெருமான் அடியார் பெருமக்களை இப்பூவுலகிற்கு அனுப்பி வைத்து, அவர்கள் அருளிச் செய்த சொற்களைக் கொண்டே, அவனிடம் முறையிடுமாறு நமக்கு வழிகாட்டியுள்ளான். சிவபெருமான் அவர்கள் சொற்களையே பெரிதும் விரும்புகிறான்.

இவ்வுண்மையினைச் சுந்தரர் பெருமான்,

*" நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்*
*கரசரும் பாடிய நற்றமிழ் மாலை*
*சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானை "* **(7—67—5)**

என்று அருளிச்செய்துள்ளார்கள்.

இதிலிருந்து திருமுறைகளைப் படனம் செய்வது வாயிலாகவே, சிவபெருமானின் அன்புக்குரியவர்களாகும் தகுதியை நம்மால் பெற முடியும் என்பது தெளிவாகிறது.

திருமுறை ஆசிரியர்களும், நமக்காக இரக்கப்பட்டு, நமது குறைபாடுகளை யெல்லாம், தம்மேல் ஏற்றிப் பலவாறாகப் பாடிப் பரவித் திருமுறைகளை அருளிச்செய்துள்ளார்கள்.

இவற்றையெல்லாம் மெய்ப்படுத்தும் வகையில், " **திருமுறை விண்ணப்பம்** " என்றொரு தொடர் வழக்கில் வந்துள்ளது. மேலும் திருமுறைச் சொற்கள் அனைத்தும் மந்திர ஆற்றல் படைத்தவை. அதனாலேயே சேக்கிழார் பெருமானும்,

*" நமக்கும் அன்பில் பெருகிய, சிறப்பின்*
*மிக்க அற்சனை, பாட்டே ஆகும் "* *(த. ஆ. கொ. பு 170)*

என்று சிவபெருமான் கூறியருளியதை அருளிச்செய்துள்ளார்.

ஆக, இத்திருவாசகத்தொடர், சிவபெருமானை எப்படி வழிபட வேண்டும் என்பதை நமக்கு அறிவுறுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

**நிறைவுரை :**

இதுகாறும் சிந்தித்தவற்றிலிருந்து திருவாசகம் முழுக்க முழுக்க ஒரு சைவசித்தாந்த நூல் என்பது, உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெளிவாக விளங்குகிறது.

முதற்பகுதியில், சைவசித்தாந்த அடிப்படையில் வைத்துத் திருவாசகத்தை ஒருவாறு சிந்தித்தோம். இரண்டாவது பகுதியில் அதன் தலைப்புக்களில் வைத்து சைவ சித்தாந்த நுட்பங்களை ஓரளவு கண்டோம். மூன்றாவது பகுதியில், திருவாசகத்தில் வரும் சொல்லாட்சிகளின் மாட்சிமையை நோக்கும் போது திருவாசகத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லும் சித்தாந்தம் பேசுவதை அனுபவ வாயிலாக அறியலாற்று.

தேனில் எந்தப் பகுதியைச் சுவைத்தாலும் இனிக்கும் ; அவ்வாறே திருவாசகத்தில் எந்தச் சொல்லை வைத்து ஆய்ந்தாலும் அந்த சொல்லில் சைவசித்தாந்த மணம் கமழ்ந்து இன்பம் பெருக்குவதைக் காணலாம்.

எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வாய்வுக்கு ஒரு முடிவே கிடையாது, எனவே, திருவாசகத்தைப் பயில்பவர்கள், இந்நூற் கருத்துக்களை நினைவிற் கொண்டு, திருவாசகத்தை நோக்குவார்களாயின், அதனால் பெறும் பயன், அளவில் அடங்காது எனக்கூறி இத்துடன் இதனை நிறைவு செய்கிறேன்.